# எதிர்காலத்திற்கு முன்னேறுதல்

இலங்கைப் பிணையங்கள் மற்றும்
பரிவர்த்தனை ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2012

# எதிர்காலத்திற்கு முன்னேறுதல்

எதிர்காலத்திற்கான ஒரு குறிக்கோள், பொறுப்புடைய ஓர் அணி மற்றும் வளர்ச்சியில் ஓர் முக்கியத்துவம் ஆகியவற்றுடன் மூலோபாயமானது ஒன்றிணைந்துள்ளது என நாம் நம்புகின்றோம். எமது செயற்திட்டத்தினூடாக இதனையே நாம் இப்போது செய்துள்ளோம். இதனால் சந்தையும் அதன் பலனாக பொருளாதாரமும் மேம்பட்டு முதலீட்டாளர்களுக்கும் ஏனைய பங்காளிகளுக்கும் நன்மையை விளைவிக்கும். செயல்முறைகளை புதுப்பிக்கும் வேளை, விரிவாக்கம் மற்றும் முதலீடுகளைக் கவருதல் நோக்கி எமது முயற்சிகளை மையப்படுத்தும்போது நாம் மிகவும் புதுமையான, ஆற்றல்மிக்க மற்றும் பாதுகாப்பான ஓர் பிணையங்கள் சந்தையை உருவாக்குவதற்கான மூலோபாய நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். இத்தகைய ஓர் சந்தையானது பொருளாதாரத்திற்கு துணைபுரிவதுடன் புத்துணர்வையும் அளிக்கும்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது குறிக்கோள் | 1 |
| எமது செயற்பணிக்கூற்று | 1 |
| தலைவரின் மீளாய்வு | 2 |
| பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 6 |
| ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | 8 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 12 |
| முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் | 14 |
| பாரிய பொருளியல் மேலோட்டம் | 16 |
| மூலதனச் சந்தை மீளாய்வு | 18 |
| செயல்முறை மீளாய்வு | 22 |
| மேலதிகத் தகவல்கள் | 48 |
| செய்கைப் பத்திரம் | 52 |

### நிதிக்கூற்றுக்கள் - இ.பி.ப.ஆ.

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 56 |
| நிதி நிலைமைக் கூற்று | 58 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 59 |
| ஒதுக்கங்களின் மாற்றல்களுக்கான கூற்று | 60 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 61 |
| காசுப் பாய்ச்சல் கூற்று (தீர்வை நிதியம்) | 62 |
| காசுப் பாய்ச்சல் கூற்று (நட்டஈட்டு நிதியம்) | 63 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 64 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 66 |

### நிதிக்கூற்றுக்கள் - தீ.உ.நி.

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 75 |
| நிதி நிலைமைக் கூற்று | 78 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 79 |
| தேறிய சொத்துக்களின் மாற்றங்களுக்கான கூற்று | 80 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 81 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 82 |
| கூட்டாண்மைத் தகவல்கள் | **பின்புற உறையின் உட்பக்கம்** |

## குறிக்கோள்

“தெற்காசியாவிலேயே செயற்திறன் மிக்கதும், திறமையானதும், மற்றும் விரைவும் விழிப்பும் கொண்ட பிணையங்கள் சந்தை முறைப்படுத்தலுக்கு முன்மாதிரியான முறைமைப்படுத்துபவராக வருவது”

## செயற்பணிக்கூற்று

“நியாயமானதும், திறமையானதும், ஒழுங்கானதும் மற்றும் வெளிப்படையானதுமான ஓர் மூலதனச் சந்தையை ஊக்குவித்தலும், அபிவிருத்தி செய்தலும் மற்றும் பேணிப்பாதுகாத்தலும்”

# தலைவரின் மீளாய்வு



## மூலதனச் சந்தையானது அதன் உள்ளாற்றலை அடைவதனை தடுத்த சில முட்டுக்கட்டைகளை நீக்குவதற்காகவும் மற்றும் மூலதனச் சந்தையினை மேலும் விருத்திசெய்வதற்காகவும் இவ்வருடத்தில் இ.பி.ப.ஆ. அரசாங்கத்திற்கு வெற்றிகரமாக பிரதிநிதித்துவத்தை மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. அரசாங்கமானது இவற்றில் கவனம் செலுத்தி தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் திட்டவரையாக்கப்பட்ட பல சீர்திருத்தங்களைப் பிரேரித்ததன் மூலம் மூலதனச் சந்தையை விருத்தி செய்வதற்கான அதன் கடப்பாட்டினை பிரதிபலிக்கச் செய்தது

பலவீனமடையும் உலகளாவிய பொருளாதாரங்களினால் முகங்கொடுக்கும் சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரமானது 2012 ஆம் ஆண்டில் ஓர் ஆரோக்கியமான 6.4% வளர்ச்சியை அடைந்தது. 2009 மற்றும் 2010 ஆகிய காலப்பகுதிகளில் பொங்கெழுச்சியடைந்த பங்குச் சந்தையின் செயற்திறனானது 2011 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிலும் கீழ்மட்டத்தில் இருந்ததுடன் இறுதி அரையாண்டில் மீளெழும் அறிகுறிகளைக் காண்பித்தது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் இரண்டு வருடங்களுக்குள் பங்குச் சந்தையானது 400% வளர்ச்சியை அடைந்தது. சந்தைக்கு உள்வந்த அனேகமான புதிய முதலீட்டாளர்கள் சந்தையின் இயக்கநிலையைப் பற்றிய ஓர் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை. குறுகியகால இலாபமீட்டலை அடைவதற்காக ஊக வர்த்தகர்கள் சந்தையில் மொய்திரண்டு சந்தையில் உயர்வான தளம்பலை உருவாக்கினார்கள். மந்தை மனப்பான்மையானது ஓர் சந்தைக் குமிழினை உருவாக்கிய சமயத்தில் முறைமைப்படுத்துபவர் தலையிட்டு இடர்நேர்கை மட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதும் இதன் காரணமாக இத்துறையில் வாதப்பிரதிவாதங்களை உருவாக்கின. 2012 இல் இ.பி.ப.ஆ. இந்த ஒழுங்குவிதிகளில் சிலவற்றை அகற்றியது அல்லது திருத்தியது.

இந்த நடவடிக்கைகளை தளர்த்துவதற்கு முன்னர் துறைசார் பங்குபற்றுனர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதில் நாம் கவனமாயிருந்ததுடன் அவர்களுடன் அடிக்கடி சந்திப்புகளை மேற்கொண்டோம். எமது முதன்மைக் கவனமானது செயலை நுட்பமாக உணர்ந்து பதில்செயல் செய்கின்ற முறைமைப்படுத்தலை உறுதிப்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பினையும் மற்றும் மூலதனச் சந்தை வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதனையும் மேற்கொள்ளலாம் என்பதாகும். இதனைக் கருத்திற்கொண்டு பங்குத்தரகர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு கடனளிக்கும் தேவைக்காக உபயோகிக்கும் செம்மையாக்கப்பட்ட தேறிய மூலதனக் கணிப்பீட்டினை நாம் திருத்தியமைத்ததுடன் குறுக்குப் பலகையின் கொடுக்கல் வாங்கல்களுக்கான விலையில் விதிக்கப்பட்ட உயர்மட்ட எல்லையை நீக்கியதுடன் பங்குத்தரகர்களது பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகளையும் நீக்கினோம்.

2012 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் சந்தையானது ஏறத்தாள 14% வளர்ச்சியை அடைந்துள்ளமையானது குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். அதிகரித்த முதலீட்டாளர் நம்பகத்தன்மையும் மேம்படுத்தப்பட்ட நாட்டின் பாரிய பொருளாதார நிலைமையும் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலான ரூபா 38.6 பில்லியன், கொ.ப.ப. இல் பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய வருடாந்த தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலாகும், வருவதற்கு காரணியாயிருந்தன.

திறன்படச் செயற்படும் மூலதனச் சந்தையானது சேமிப்பைத் திரட்டி மூலதனத்தை அதன் உச்ச ஆக்கவளமுடைய பயன்பாட்டிற்கு அனுப்புகின்றது. அத்துடன் முதலீட்டாளர்கள் தாம் பொறுப்பேற்கும் இடர்நேர்கைக்கு சிறந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்வதனையும் வணிகங்கள் சிறப்பாக நிதியினை அணுகுவதனையும் உறுதிசெய்கின்றது. மூலதனச் சந்தையானது அதன் உள்ளாற்றலை அடைவதனை தடுத்த சில முட்டுக்கட்டைகளை நீக்குவதற்காகவும் மற்றும் மூலதனச் சந்தையினை மேலும் விருத்திசெய்வதற்காகவும் இவ்வருடத்தில் இ.பி.ப.ஆ. அரசாங்கத்திற்கு வெற்றிகரமாக பிரதிநிதித்துவத்தை மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. அரசாங்கமானது இவற்றில் கவனம் செலுத்தி தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் திட்டவரையாக்கப்பட்ட பல சீர்திருத்தங்களைப் பிரேரித்ததன் மூலம் மூலதனச் சந்தையை விருத்தி செய்வதற்கான அதன் கடப்பாட்டினை பிரதிபலிக்கச் செய்தது.

இவ்வாண்டில் நாம் எமது இரட்டிப்புக் கடப்பாடான முறைமைப்படுத்தல் மற்றும் மூலதனச் சந்தையினை விருத்திசெய்தல் அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் வினையூக்கியாகவும் இருப்பதனை நிறைவுசெய்வதற்காக ஓர் மூலோபாயமான அணுகுமுறையினை எடுப்பதில் எமது கவனத்தினை செலுத்தினோம். முறைமைப்படுத்தல் திட்டத்தினை, சர்வதேச நியமங்களுக்கு ஒப்பாகவும் மற்றும் நாட்டின் மூலதன உருவாக்கல் தேவைப்பாட்டிற்கு பயனுள்ளவிதத்தில் பங்களிப்பதற்காகவும், அதிக உயிர்ப்பானதாக செய்வதற்கு நாம் மூலதனச் சந்தை அபிவிருத்தி பெருந் திட்டத்தினை விருத்திசெய்வதில் ஈடுபட்டிருந்தோம். இப்பெருந்திட்டமானது பின்வருவனவற்றிற்காக 10 முக்கிய மூலோபாயங்களை பின்தொடர்ந்தது. வழங்கப்படும் கருவிகளை பரவலாக்குவதற்கு,

# தலைவரின் மீளாய்வு *தொடர்ச்சி.*

தனியார் மற்றும் அரச உடைமையான முயற்சிகளிலிருந்து கம்பனிகளைப் பட்டியலிடுவதற்கு, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி மற்றும் முறிகள் சந்தையை விருத்திசெய்தல், சந்தை உட்கட்டமைப்பை நவீனமயப்படுத்துதல், கொ.ப.பரிமாற்றகத்தினை பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுதல், இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தினை திருத்தியமைத்தல் மற்றும் முதலீட்டாளர்களுக்கான சந்தர்ப்பங்களைப் பரவலாக்குதல் என்பனவாகும்.

இந்த மூலதனச் சந்தை அபிவிருத்தி பெருந் திட்டமானது மூலதனச் சந்தையின் அனைத்து முக்கிய பங்காளிகளிடம் ஆலோசனை நடத்தி மிகவும் கவனமாக உருவாக்கப்பட்டது. இவ்வாண்டில் பிணையங்கள் துறை, கொ.ப.ப. மற்றும் இ.பி.ப.ஆ. என்பவற்றிலிருந்து சிரேஷ்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் செயற்குழுவானது இத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் கொள்கை வழிகாட்டியை வழங்குவதற்காகவும் உருவாக்கப்பட்டது.

மூலதனச் சந்தையானது நீண்ட கால நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஓர் முக்கியமான வளமாக இருந்தபோதிலும், இலங்கையைப் பொறுத்தளவில் அதிகளவு கம்பனிகள் தமது நிதித் தேவைகளுக்காக இன்னமும் வங்கிகளிலேயே அதிகளவு தங்கியிருப்பதுடன் இதன் காரணமாக மூலதனச் சந்தையானது இன்னமும் குறைவாகவே ஊடுறுவப்பட்டுள்ளது. கொ.ப.ப. இல் பட்டியலிடுவதற்கு கம்பனிகளை ஊக்குவிப்பதற்காக இ.பி.ப.ஆ. பட்டியலிடல் தேவைப்பாடுகளை சுத்திகரிப்பதற்காகவும், பட்டியலிடல் செயற்பாட்டினை எளிமையாக்கவும் மற்றும் பட்டியலிடலின் நன்மைகள் பற்றி பட்டியலிடுவதற்கு சாத்தியப்படக்கூடிய கம்பனிகளுக்கு கற்பிப்பதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசாங்கமானது வரவுசெலவுத் திட்டத்தில் 2013 டிசம்பர் மாதத்திற்கு முன்னர் கொ.ப.ப. இல் பட்டியலிடும் புதிய கம்பனிகளுக்கு ஓர் வரிச் சலுகையினை வழங்குவதன் மூலம் கம்பனிகள் பட்டியலிடுவதற்கு மேலும் தூண்டுதலை வழங்கியது.

கொ.ப.ப. இனை ஓர் பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவது இ.பி.ப.ஆ. இன் செயற்பாடுகளில் அதிக முன்னுரிமையுள்ள விடயமானதுடன் நாம் இவ்வாண்டில் செய்முறையினை விருத்திசெய்யும் செயற்பாட்டினை விரைவுபடுத்தினோம். பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட பரிமாற்றகத்திற்கான தேவையானது அதிகமாக உணரப்பட்டது. ஏனெனில் அது அதிக செயற்திறனுள்ள விதத்தில் இயங்கவும் மற்றும் ஓர் இலாப நோக்கைக் கொண்ட பரிமாற்றகமாக விருத்தியடைந்து புதிய சவால்களுக்கும் மாற்றங்களுக்கும் பதிலளிக்கக்கூடியதாகக் காணப்படும்.

தனியார் துறைக்கு ஓர் மாற்றுவழி நிதி மூலத்தினை பொருத்தமான முதிர்வுக் கட்டமைப்புடன் வழங்குவதற்காக ஓர் துடிதுடிப்பான மற்றும் செயற்திறனுள்ள கம்பனிகள் முறிகள் சந்தையினை உருவாக்குவதற்காக நாம் அத்தகைய ஓர் சந்தையை விருத்திசெய்வதற்காக எமது முயற்சிகளை முடுக்கிவிட்டோம். இவ்வாண்டில் நாம் இலங்கை மத்திய வங்கி, கொ.ப.ப. மற்றும் சந்தைப் பங்குபற்றுனர்களுடன் சந்தை உட்கட்டமைப்பு, செயற்பாட்டு மற்றும் வர்த்தக செயல்முறைகளை மேம்படுத்துவதற்காக கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். இ.பி.ப.ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கேற்ப பட்டியலிடப்பட்ட முறிகள் மற்றும் தொகுதிக்கடன்கள் என்பவற்றின் வட்டி வருமானத்திலிருந்து பிடித்து வைத்தல் வரிவிலக்கினை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சந்தையின் விஸ்தீரணத்திற்கும் ஆழத்திற்கும் வசதியளிக்கும் என நாம் திடமாக நம்புகிறோம்.

ஓர் பயனுள்ள மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு முதலீட்டாளர் நம்பகத்தன்மையை வளர்க்கக்கூடிய ‘செயலை நுட்பமாக உணர்ந்து பதில்செயல் செய்கின்ற’ முறைமைப்படுத்தலை வழங்குவது ஓர் முன்னோடித் தேவையாகும். கடந்த வருடத்தில் இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள் துரிதப்படுத்தப்பட்டதுடன் இது ஓர் நியாயமான மற்றும் மிகவும் செயற்திறனான மூலதனச் சந்தையைக் கட்டியெழுப்புவதனை நோக்கிய இன்னுமோர் குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக வங்கியின் நிதியியல் துறை மறுசீராக்கல் மற்றும் பலப்படுத்தல் அங்கமானது சட்டத்தினை மறுசீரமைப்பதற்குத் தேவையான சிபாரிசுகளையும் பிரேரணைகளையும் வழங்கியது. சட்டத்திற்கான இத்திருத்தங்கள் பின்வருவனவற்றை நிலைநிறுத்தும். மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகம் மற்றும் தீர்வக இல்லம் என்பவற்றிற்கான முறைமைப்படுத்தல் வடிவமைப்பு, பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட பங்குப் பரிமாற்றகத்திற்கு உரிமமளித்தல் மற்றும் மூலதனச் சந்தை தவறிழைப்பவர்களுக்கெதிராக குடியியல் வலுவளிப்புகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்குதல் என்பனவாகும்.

உள்ளூர் சேமிப்பினை மிகவும் செயற்திறனுள்ள வகையில் திரட்டுவதற்கும் மற்றும் சிறு தொகை பணத்தையுடைய முதலீட்டாளர்களை மூலதனச் சந்தையில் பங்குபற்றுவதற்கு அனுமதிப்பதற்காகவும் நாம் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களில் முதலிடுவதில் காணப்படும் பல்வேறு வாய்ப்புகளில் சந்தை விழிப்புணர்வினை புகட்டுவதற்காக செயற்பட்டோம். சாதாரண முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடையே நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை மேலும் பிரபல்யப்படுத்துவதற்காக அரசாங்கமானது பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளினூடாக வராது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் நேரடியாக வெளிநாட்டு நாணயத்தில் முதலீடு செய்வதற்கு அனுமதித்ததுடன் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கு பிரயோகிக்கப்படும் 10 சதவீத வரியானது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளுக்கும் பிரயோகிக்கப்படும். இந்தத் தூண்டுதல்கள் சந்தேகத்திற்கிடமின்றி முதலீட்டாளர்களை சம்பிரதாயமான முதலீட்டுத் தெரிவுகளிலிருந்து அகன்று நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் முதலீடு செய்வதற்கு ஊக்கமளிக்கும்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற பொருளாதார நடவடிக்கைகளின் எழுச்சியினைப் பின்தொடர்ந்து பங்குச் சந்தை நடவடிக்கைகளும் கணிசமான அளவு வளர்ச்சியடைந்தது. இது பங்குத்தரகர்களது கிளை விரிவாக்கலில் துரித விரிவாக்கலுக்கு இட்டுச்சென்றது. தொழில்நுட்பத்தில் காணப்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக உலகளாவிய ரீதியில் முதலிடுதல் நிலத்தோற்றத்தில் பலமான மாற்றங்கள் இடம்பெற்றன. புதிய தொழில்நுட்பத்துக்கு இணையாக பங்குத்தரகுத் துறையானது இருப்பதற்காகவும் வர்த்தகம் மற்றும் பின்புல அலுவலக அமைப்புகள் போன்ற உட்கட்டமைப்புகளை நவீனமயப்படுத்துவதற்காகவும் இ.பி.ப.ஆ. இன் சிபாரிசின் பேரில் அரசாங்கமானது பங்குத் தரகுக்

கம்பனிகளை தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் கிளை வலையமைப்பு போன்ற மூலதன உருப்படிகளில் 100% பெறுமானத்தேய்வு தள்ளுபடிகளைக் கோருவதற்கு அனுமதியளித்தது. இது பங்குத் தரகுக் கம்பனிகள் போட்டியிடவும், வளர்ச்சியடையவும் மற்றும் முதலீட்டாளர்களது தேவைகளை திறமையான விதத்தில் சந்திக்கவும் வசதியளிக்கும்.

இவ்வருடத்தில் சிற்றளவு முதலீட்டாளர்கள் மத்தியில் நிதியியல் எழுத்தறிவு மட்டத்தினை மேம்படுத்தவும் மற்றும் அவர்கள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு துணைபுரிவதற்கும் நாம் கடப்பாடுடையவர்களாயுள்ளோம். எமது முதலீட்டாளர் கல்வி முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. மூலதனச் சந்தையில் முதலிடுவது பற்றி மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளில் கிரமமான முறையில் கட்டுரைகள், மூலதனச் சந்தையில் பாரியளவு விழிப்புணர்வினைப் பேணுவதற்காக முதலீட்டாளர் தின நிகழ்ச்சித்திட்டங்களுடன் புதிர் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவாகும். நாம் எமது அனைத்து கொள்கைத் தீர்மானங்களையும் ஊடகத்திற்குத் தெரிவித்ததுடன் கைக்கெட்டாத தூரத்து அணுகுமுறையைக் கடைப்பிடிக்காது வெளிப்படையான ஊடகக் கொள்கையினை முன்னெடுத்தோம்.

புதிய மூலோபாய முன்னெடுப்புகள் மூலதனச் சந்தைக்கும் பொருளாதாரத்திற்கும் ஓர் புதிய யுகத்திலான வளர்ச்சியினைக் கொண்டுவருமென நாம் திடமான நம்பிக்கையினைக் கொண்டுள்ளோம். மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்கு உறுதுணை வழங்கிய ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வருடம் முழுவதும் எமக்கு வழங்கிய உறுதுணைக்காக நான் நிதி அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும், கொ.ப.ப., பங்குத் தரகர்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் உள்ளடங்களான துறையின் பங்காளிகளுக்கும் மற்றும் செயலகத்தின் ஊழியர்களுக்கு எமது மூலோபாய வழியினை அடைவதற்கு அவர்களது கடுமையான உழைப்பிற்கும் அவர்களது அர்ப்பணிப்பிற்காகவும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக நான் ஊடகங்களுக்கு மூலதனச் சந்தை கல்வி மற்றும் விழிப்புணர்வினை வழங்கியதில் அவர்களது பங்களிப்பிற்காகவும் நன்றி கூற விரும்புகின்றேன்.

**கலாநிதி. நாலக கொடஹேவ**
*தலைவர்*

19 ஏப்ரல் 2013

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



நிலையான வருமானப் பிணையங்களில் காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்கள், நாணயமாற்று விகித தளம்பல்கள், குறைவான முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் உலகளாவிய நிதிச் சந்தைகளின் பாதகமான தாக்கம் என்பவற்றின் காரணமாக 2012 ஆம் ஆண்டானது இலங்கையின் மூலதனச் சந்தைக்கு பல சவால்களை உருவாக்கின. இதன் பின்னணியில் பொருளாதார அபிவிருத்திக்கும் மூலதன உருவாக்கலுக்கும் ஓர் முக்கியமான பங்களிப்பினை வழங்குவதற்கு சந்தையினை திரும்பவும் நிலைப்படுத்துவதற்காக முக்கியமான துறைசார் பங்குபற்றுனர்களுடன் கலந்தாலோசித்து இ.பி.ப.ஆ. ஓர் சமநிலை அணுகுமுறையுடனான ஓர் விசாலமான மூலதனச் சந்தைப் பெருந் திட்டத்தினை உருவாக்கியது.

நாடானது பிராந்தியத்தில் ஓர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார மையமாக வருவதனை எதிர்நோக்குவதனால் இப் பெருந்திட்டமானது தேசிய வளர்ச்சிக்கு துணைபுரிவதற்கு ஓர் துடிதுடிப்பான மற்றும் செயற்திறனுள்ள மூலதனச் சந்தையொன்று ஒழுங்குபடுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய முன்னெடுப்புகள் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை மற்றும் முறிகள் சந்தையினை விருத்திசெய்தல், கம்பனிகளை பட்டியலிட்டு புதிய நிதியை கவர்வதற்கு ஊக்கமளித்தல், இடர்நேர்கை முகாமைத்துவத்தினைப் பலப்படுத்தல், இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்களை விரைவுபடுத்தல், முதலீட்டாளர் கல்வியை மேம்படுத்தல் மற்றும் கொ.ப.ப. இனை பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுதல் என்பவற்றை உள்ளடக்கும். இ.பி.ப.ஆ. னால் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டவற்றில் அனேகமானவை தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

ஏற்றுக்கொள்ள முடியாத மட்டத்திற்கு உயர்வடைந்ததன் பின்னர் சந்தையானது திருந்துவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. இச்சமயத்தில் இ.பி.ப.ஆ. சந்தையை ஸ்திரநிலைக்கு கொண்டுவருவதற்காக மேற்கொண்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள் சிலவற்றை மீள்பரிசீலனை செய்தது. அதனால் பங்குத் தரகர்களினால் கடன் வழங்கப்படுவதில் உள்ள எல்லையை தளர்த்தியதுடன், அதிக தளம்பல்களுடைய பங்குகளில் 5 சந்தை தினங்களுக்கு அமுல்படுத்தப்பட்ட 10% விலைப் பட்டையை அகற்றியும் மற்றும் கொ.ப.ப. இன் குறுக்குப் பலகையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களின் விலையில் அமுல்படுத்தப்பட்ட 20% உயர் எல்லையையும் நீக்கியது. அதேசமயத்தில் சந்தையிலுள்ள தீர்ப்பனவு இடர்நேர்கையை கட்டுப்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மூலதனச் சந்தையானது நியாயமானதாகவும், ஒழுங்கானதாகவும் மற்றும் வெளிப்படையானதாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு முறைமைப்படுத்தல் அடித்தளமாகும். மூலதனச் சந்தை அபிவிருத்திக்கு வசதியளிக்கும்பொருட்டு எமது முறைமைப்படுத்தல் வடிவமைப்பை பலப்படுத்துவதற்காக பல முக்கியமான ஏற்பாடுகள் இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் உத்தேசத் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பதிலுக்காகக் காத்திருக்கும் நகல் சட்டமூலமானது பலதரப்பட்ட குடியியல் மற்றும் நிர்வாக வலுவளிப்புகளை (மூலதனச் சந்தை தவறிழைப்பவர்களுடன் செயலாற்றுவதற்கு) அறிமுகப்படுத்தும். உலகளாவிய அபிவிருத்திகளுடன் ஒத்ததாக முறைமைப்படுத்தல் விவகாரங்களை திறன்படக் கையாளுவதற்கும், புதிய முதலீட்டுக்கருவிகளின் அறிமுகத்திற்கு துணைபுரிவதற்கும் மற்றும் உரித்துடமைப் பகிரப்பட்ட பரிமாற்றகமொன்றை முறைமைப்படுத்தவும் மற்றும் மத்திய எதிர்தரப்பினரை உருவாக்கவும் இது வழிவகுக்கும்.

கணிசமான எண்ணிக்கையிலான பங்குகள் அதிக எண்ணிக்கையிலான பங்குதாரர்களிடையே பகிரப்பட்டிருக்கும்போது அது முதலீட்டாளர்களுக்கு திரவத்தன்மையை அளிப்பதுடன், நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற விலைக் கண்டுபிடிப்புக்கான பொறிமுறையை மேம்படுத்துவதுடன் நாட்டில் செல்வமானது வேறுவிதமாகப் பகிர்ந்தளிப்பதற்கும் துணைபுரிகின்றது. இவ்வருடத்தில் சந்தையின் ஆழத்தையும் மற்றும் திரவத்தன்மையையும் அதிகரிப்பதற்காகவும், நீண்டகால முதலீட்டாளர்களை கவர்வதற்காகவும் மற்றும் சந்தையின் புரள்வை மேம்படுத்துவதற்காகவும் ஓர் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்தில் விதிகளை நாம் வரையக்கூடியதாயிருந்தது.

மூலதனச் சந்தையில் சாமர்த்தியமுள்ள மற்றும் விவேகமுள்ள முதலீட்டாளர்களை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு வகையான முன்னெடுப்புகளை நாம் மேற்கொண்டோம். எமது நிதியியல் எழுத்தறிவு நிகழ்ச்சித்திட்டங்களானது மூன்று மொழிகளிலும் நடாத்தப்பட்டதுடன் இவை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பல்வேறு நிறுவனங்களின் அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டில் பத்திரிகைக் கட்டுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் போட்டிகளூடாக நாம் எமது முதலீட்டாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களது விசாலத்தினை பரப்பக்கூடியதாயிருந்தது. தகைமையுள்ள மற்றும் வெற்றிகரமான மூலதனச் சந்தை இடையீட்டாளர்களை உருவாக்குவதற்காக இ.பி.ப.ஆ. உரிமமளித்தல் பரீட்சைகளை நிர்வகிப்பதனையும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதனையும் தொடர்ந்தது. இவ்வாண்டில் தங்களது கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிய 800 மாணவர்களுக்கு நாம் சான்றிதழ்களையும் மற்றும் டிப்ளோமாக்களையும் வழங்கக்கூடியதாயிருந்தது. பிராந்திய ஒத்துழைப்பினை மேம்படுத்தவும் மற்றும் மூலாதாரப் பிணையங்கள் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள், முறைமைப்படுத்தல் வடிவமைப்பு மற்றும் மூலாதாரப் பிணையங்களது வகைகள் என்பவற்றில் அறிவினை பகிர்ந்துகொள்வதற்காகவும் நாம் “மூலாதாரச் சந்தைகளது முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை” எனும் தலைப்பில் ஓர் பிராந்திய கருத்தரங்கினை ஒழுங்குசெய்தோம்.

சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை ஊக்குவிப்பதற்காக இ.பி.ப.ஆ. ஓர் பலமுள்ள இணக்கப்பாட்டு பிரசன்னத்தைப் பேணுவதில் கடப்பாடுடையதாயுள்ளது. சந்தை இடையீட்டாளர்களில் அவர்களது இணக்கப்பாட்டு மட்டத்தினை சரியென நிரூபிப்பதற்காக நாம் கடுமையான இடர்நேர்கை இணக்கப்பாட்டு மீளாய்வுகள் நடாத்துவதனை தொடர்ந்தோம். முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் ஓர் இணக்கப்பாட்டு கலாச்சாரத்தை பேணும் நோக்கத்தில் அவர்களை அவர்களது முறைமைப்படுத்தல் கடப்பாடுகளில் கற்பிப்பதற்காக கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். புதிய கண்காணித்தல் முறையின் சந்தையைத் திருப்பிப்போட்டுப் பார்க்கும் ஆற்றல், எச்சரிக்கை சுட்டளவுகள் மற்றும் பயனுள்ள அறிக்கையிடல் முகாமைத்துவத் திறமைகள் என்பன நாம் எமது கண்காணிப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு வசதியளித்தன.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையானது எமது மூலதனச் சந்தையை விருத்திசெய்வதில் முக்கிய பங்காற்றுகின்றது. இது கேள்வி பக்கத்தினை கட்டியெழுப்புவதன் மூலம் மெய்யான பொருளாதாரத்திற்கு மூலதனம் சென்றடையும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறையை விருத்திசெய்வதற்காக நாம் இலங்கை மத்திய வங்கியிடம் எமது செல்வாக்கினைப் பயன்படுத்தினோம். அரசாங்கப் பிணையங்களில் மாத்திரம் முதலீடு செய்யும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களை, வங்கிகளினாலும் நிதிக் கம்பனிகளினாலும் கணிக்கப்படும் சட்டரீதியான திரவச் சொத்துக்களது தேவைக்காக ‘அரசாங்கப் பிணையங்கள்’ எனும் வரைவிலக்கணத்தின் கீழ் உள்ளடக்குமாறு வேண்டினோம். அத்துடன் இந்நிதியங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வர்த்தமானி இலக்கம் 1704/18 இன் பிரகாரம் ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் சேமலாப நிதியங்களினால் அரசாங்கப் பிணையங்களில் கட்டாயமாக முதலீடு செய்யவேண்டிய பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வதனை கவனிக்குமாறும் சிபாரிசு செய்தோம்.

முன்னோக்கிப் பார்க்கும்போது இலங்கையின் மூலதனச் சந்தையை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக்குவதற்கும் சந்தை நடவடிக்கைகளை அதிகரிக்கவும் நாம் திடசங்கற்பம் எடுத்துள்ளோம். இறுதியாக தலைவருக்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கும் அவர்களது தொடர்ச்சியான வழிகாட்டல்களுக்கும், பங்காளிகள் மற்றும் செயலகத்தின் ஊழியர்களுக்கும் அவர்களது கடமையை கடப்பாட்டுடனும் தொழில்வல்லமையுடனும் செய்வதற்கான அவர்களது ஒத்துழைப்பிற்கும் அயராத முயற்சிக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



**பேராசிரியர். ஹரீந்திர திசாபண்டார**
*பணிப்பாளர் நாயகம்*

19 ஏப்ரல் 2013

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



**1** **கலாநிதி. நாலக கொடஹேவ**
*தலைவர்*



**2** **திரு. லொலித்த அபேசிங்ஹ**



**5** **திரு. சுஜீவ ராஜபக்ஷ**



**6** **கலாநிதி. ஸ்ரீ வரண பிரதீபா மஹானாமஹேவா**



3 திரு. எம். இசட். எச். ஹசீம்



4 திரு. பி.டி.டபிள்யு. ஆனந்த சில்வா



7 திரு. பி.டி.ஜே.பர்னாந்து



8 கலாநிதி. பி.எம்.எஸ். பட்டகொட

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் *தொடர்ச்சி.*

### 1. கலாநிதி நாலக கொடஹேவ- தலைவர்

கலாநிதி நாலக கொடஹேவ அவர்கள் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராவார். இவர் நகர அபிவிருத்திச் சபை, லங்கா ஹொஸ்பிட்டல் கோர்ப்பரேஷன் பி.எல்.சி., ஸ்ரீ லங்கா கேடரிங் சேர்விஸஸ் லிமிட்டட் மற்றும் இலங்கை கைப்பணிச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்துவம் வகிக்கின்றார்.

இவரது முன்னைய நியமனங்கள் தலைவர் இலங்கை உல்லாசத்துறை, முகாமைப் பணிப்பாளர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பி.எல்.சி மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி MAS ஓவர்சீஸ் ஒபரேஷன்ஸ் என்பவற்றை உள்ளடக்கும்.

மூன்று வெவ்வேறு துறைகளில் கல்வித் தகமைகளைக் கொண்டுள்ளார். கலாநிதி கொடஹேவ அவர்கள் இலத்திரணியல் மற்றும் தொலைதொடர்பு பொறியியல் கலையில் இளமானி விஞ்ஞான. கௌரவப் பட்டத்தையும், வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் சந்தைப்படுத்தலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கலாநிதி கொடஹேவ அவர்கள் CIM (UK), CIMA (UK) மற்றும் CMA (அவுஸ்திரேலியா) ஆகியவற்றின் சமூக அங்கத்தவராவார்.

### 2. திரு லொலித்த அபேசிங்ஹ

திரு. லொலித்த அபேசிங்ஹ அவர்கள் ஓர் தொழில்துறை வியாபார ஆலோசகராவார் அவர் பலவிதமான முன்மாதிரிகளின் கீழ் (அதாவது பொது, தனியார், தனியார்-பொது பங்குடமை போன்றவை) செயல்முறை ஏற்பாட்டு அபிவிருத்தியில் முற்றாக ஈடுபடும் செலீனா கெப்பிட்டல் கோப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் இயங்கும் ஓர் ஆலோசனை இல்லத்தை நடத்திச்செல்கின்றார். இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவீடு செய்யப்பட்ட கம்பனிகளான வின்கிரோஸ் பிஸினஸ் சொலூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், சைனா சயன்ஸ் அன்ட் டெக்னோலோஜி இன்டர்நஷனல் சப்ளை கோப்பரேஷன் லங்கா லிமிட்டட், செலீனா-நெஷனல் இன்ஜினியரிங் பியூரோ ஒவ் டுபாய் லங்கா லிமிட்டட் என்பவற்றின் முகாமைப் பணிப்பாளராக உள்ளார்.

இவர் தற்போது தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவருக்கு ஆலோசகராப் பணிபுரிவதுடன் தேசிய போக்குவரத்து அமைச்சருக்கு முகாமைத்துவ ஆலோசகராகவும் தேசிய கைவினைப்பொருட்கள் சபையின் தலைவருக்கு ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. லொலித்த அபேசிங்ஹ அவர்கள் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் ரொக்விலே பல்கலைக்கழகத்திடமிருந்து வியாபார முகாமைத்துவத்தில் முதுமாமனிப் பட்டத்தையும் இலங்கைச் சந்தைப்படுத்தல் நிருவகத்திடமிருந்து சந்தைப்படுத்தலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கையின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்தில் சான்றிதழையும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடமிருந்து சர்வதேச வர்த்தகத்தில் உயர் செய்பணித் தோற்றங்களில் சான்றிதழையும் சர்வதேச வர்த்தகத்தில் தெரிவுத் தோற்றங்களில் சான்றிதழையும் பெற்றுள்ளார். தற்போது இவர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை மேற்கொண்டுள்ளார்.

இவர் தேசிய தொழில் பயிலல் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகாரசபையின் (NAITA) பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு.அபேசிங்ஹ அவர்கள் ஓர் பணிப்பாளராக அல்லது ஓர் ஆலோசகராக பின்வரும் நிறுவனங்களில் கடமையாற்றுகின்றார் அல்லது கடமையாற்றியுள்ளார்:-

வோர் சீசன்ஸ் ஹொஸ்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட், கென்டொன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், ஏஜிஎஸ்எஸ் இன்டர்நஷனல் கொன்சல்டன்ட் (பிரைவேட்) லிமிட்டட், நோபல் வ்ரெய்ட் (பிரைவேட்) லிமிட்டட், எஸ்எல்என் பெக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட், முகாமைத்துவ கல்வி அபிவிருத்தி முகவர், மெடிஸ்மார்ட், யு ஏ கே சப்லைஸ். இம்பக்ட் இன்டர்நெ'னல் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட், நோபள் இன்டர்நஷனல் (பிரைவேட்) லிமிட்டட், வோக்கஸ் இன்டர்நஷனல் (பிரைவேட்), சரேரோ இன்டர்நஷனல் (பிரைவேட்), இவோக் பிரொஜக்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், வொக்ஷால் கோர்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டட், லங்கா லைட் இன்டஸ்ட்ரீஸ் பிரடக்ட்ஸ் இம்போட் / எக்ஸ்போட் (பிரைவேட்) லிமிட்டட், ஐபிரிட் ஸ்டரக்சர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட், லங்கா கிரீன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், அகமாய் கொமியூனிகேஷன் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட், எஸ்.ஏ.ஆர். எம்பெளிஸ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட், ஹரேட்ஸ் இன்டர்நஷனல் (பிரைவேட்) லிமிட்டெட், மெகாபுத்ர (பிரைவேட்) லிமிட்டெட். ஆகியவற்றின் ஆலோசகராவும் உள்ளார்.

இவர் பல உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சி தொடர்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார். இவர் பல சர்வதேச கருத்தரங்குகளில் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

### 3. திரு. எம்.இசட்.எச். ஹசீம்

திரு. ஹசீம் அவர்கள் சட்டத்துறை பட்டதாரி (LLB) (கௌரவ) இங்கிலாந்து மற்றும் சட்டத்துறை வழக்குரைஞர் (மிடல் டெம்பள்). இவர் மோல்சிப் குரூப் ஒப் கம்பனிகள், டெவலப்மன்ட் இன்டர்பிலான சிலோன் லிமிட்டட் மற்றும் கெரி மோல்சிப் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளருமாவார். இவர் இலங்கை பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்கள், பதனிடுபவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பொதுக் காரியதரிசியுமாவார். திரு. ஹசீம் அவர்கள் பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வியாபார மன்றங்களில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தியுள்ளார்.

### 4. திரு. பி. ட. டபிள்யூ ஆனந்த சில்வா

திரு. பி. ட. டபிள்யூ. ஆனந்த சில்வா அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் 28 வருடங்கள் அபிவிருத்தி நிதிப் பிரிவு, பொருளியல் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் வங்கிப் மேற்பார்வைப் பிரிவு ஆகிய பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இலங்கை மத்திய வங்கியில் அவரது 28 வருட சேவைக்காலத்தில் திரு. சில்வா அவர்கள் நாணயக் கொள்கை, வங்கி மேற்பார்வை, நிதியியல் துறை ஸ்திரத்தன்மை, நாணய மாற்றுக் கொள்கை, வெளிவாரி வர்த்தகம் மற்றும் சென்மதி நிலுவைகள் என்பவற்றில் பரவலான அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளமானி விஞ்ஞான முதலாம் வகுப்பு பட்டத்தையும், ஐ.அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டத்தையும் ஐ.அமெரிக்காவின் இலினொய்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளதுடன் மத்திய வங்கியினால் நடாத்தப்படும் பல உயர் மட்ட கற்கைநெறிகளுக்கு வள ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. சில்வா தற்போது இலங்கைக் கடன் தகவல் மையத்தின் தலைவராகவும், இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் தலைவராகவும், இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும், இலங்கைக் காப்புறுதிச் சபையின் அங்கத்தவராகவும், அபி வெனுவென் அபி நிதியத்தின் பணிப்பாளராகவும், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தரம் உறுதிப்படுத்தல் சபையின் அங்கத்தவராகவும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் இன் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

### 5. திரு. சுஜீவ ராஜபக்ஷ

திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிருவகத்தின் தலைவரும் பிடிஓ பார்ட்னர்ஸ் எனப்படும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் முகாமைத்துவப் பங்காளரும் ஆவார். இவர் இந்நிறுவனத்தில் 28 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தையும் கொண்டுள்ளார். இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தில் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இன்று, திரு. ராஜபக்ஷ அவர்கள் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் தொழில்நுட்ப ஆலோசகராகக் கடமையாற்றுவதுடன் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டுக்குழுவின் அங்கத்தவராயுமுள்ளார். இவர் தற்போது ஏசியன் எலாயன்ஸ் பிஎல்சி, தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி மற்றும் ஹேலீஸ் பிஎல்சி என்பவற்றின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இ.ப.க.நி. இனால் பதவிவழியாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம், பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவகம் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு மற்றம் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை ஆகியவற்றின் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவின் குழு அங்கத்தவராகவும் பணிபுரிகின்றார்.

### 6. கலாநிதி ஸ்ரீ வர்ண பிரதீப மஹானமஹேவ

இவர் 1993 இல் இலங்கையின் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டாம் வகுப்பில் (கௌரவ) சட்டத்துறைப் பட்டத்தைப் பெற்றதுடன் 1994 இல் இலங்கைச் சட்டக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட இறுதிபரீட்சையில் முதலாம் வகுப்பு கௌரவ வழக்கறிஞர் தகமையினைப் பெற்று அவரது தொழில் பயிலுநல் காலத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தில் நிறைவுசெய்தார். 1993 இல் சட்ட பீடத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட யூரர் சபைக்கான பேச்சுப் போட்டியில் பீடத்தின் விவாதக் குழுவிற்கு தலைமை தாங்கியதுடன் இவருக்குத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை (கௌரவ) முதுமானிப்பட்டத்தினைப் பெற்றதுடன் 2005 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் டி.சி. பேர்னி சட்டக்கல்லூரியிடமிருந்து சட்டத்துறையில் தத்துவசாத்திர பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இவர் 2002/2005 காலப்பகுதியில் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் டி.சி.பெயின் சட்டக்கல்லூரியினது ஒப்பீட்டளவு சட்டத்திற்கான மையத்தில் பகுப்பாய்வு

சமூக அங்கத்தவராவார். ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச சட்டநிபுணர்களின் சங்கத்தினால் 2003 ஆம் ஆண்டில் இவருக்கு வர்த்தகச் சட்டத்தில் ஓர் சிறந்த இளம் சட்டவறிஞர் பரிசு வழங்கப்பட்டது.

கலாநிதி பிரதீப அவர்கள் இலங்கைச் சட்டக்கல்லூரியில் அவரது கற்பித்தல் தொழிலை ஓர் வந்துபோகும் விரிவுரையாளராக ஆரம்பித்தார். அதன்பின்னர் சட்ட பீடத்தின் நிரந்தர ஊழியராகத் தெரிவுசெய்யப்பட்டு சிரேஷ்ட விரிவுரையாளராக பதவியேற்றம் பெற்றார். தற்போது இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் சட்ட வேந்தராகக் கடமையாற்றுகின்றார். மேலும் இவர் ஓர் மனித உரிமைகள் சட்டத்தில் வந்துபோகும் விரிவுரையாளராக கட்டானவிலுள்ள இலங்கை பொலீஸ் கல்விச்சாலை, திருகோணமலையிலுள்ள இலங்கைக் கடற்படைக் கல்லூரி, களுத்தறையிலுள்ள இலங்கைப் பொலீஸ் பயிற்றுவித்தல் கல்லூரி, கட்டுகுருந்தவிலுள்ள விசேட அதிரடிப்படையினர் பயிற்சி மையம் மற்றும் நேபாளிலுள்ள டிரிபுவன் பல்கலைக்கழகத்திலும் (முதுமானி நிகழ்ச்சித்திட்டம்) கடமையாற்றுகிறார். மேலும் இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களத்தில் முதுமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி மற்றும் இலங்கை அபிவிருத்தி மற்றும் நிருவாக நிருவகத்திலும் சட்டம் கற்பிக்கின்றார்.

கலாநிதி பிரதீப அவர்கள் கனணித்துறைப் பீடம், சுவீடனின் ஸ்டொக்கோம் பல்கலைகழகம், மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைப் பீடம் ஆகியவற்றின் வியாச மேற்பார்வையாளராக உள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித வள முன்னேற்ற நிருவகத்தின் திட்ட அறிக்கை மேற்பார்வையாளராகவும் வரணாஸ் இந்துப் பல்கலைக்கழகத்தின் வியாசப் பரீட்சகராகவும் கடமையாற்றுகின்றார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மாணவர் சபையின் சிரேஷ்ட பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் இலங்கை பொலிஸ் கல்விச்சாலையின் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித வள முன்னேற்ற நிருவகத்தில் சர்வதேச வர்த்தகத்தில் டிப்ளோமாவிற்கான ஆலோசனைச் சபையில் அங்கத்தவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் பீடாதிபதிகள் சபையின் அங்கத்தவராகவும், இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் அங்கத்தவராகவும், இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் ஆலோசனைச் சபையின் தகவல் தொழில்நுட்ப சட்டக் குழு, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கனணி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களத்தின் ஆலோசனைச் சபை ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் அவுஸ்திரேலிய சட்ட ஆசிரியர்கள் சங்கம் ஆகியவற்றின் முன்னைய தலைவரும் ஆவார்.

இவர் சமீபத்தில் இலங்கைத் தொலைத்தொடர்பு முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவுக்கு பகுத்தாய்வு நடவடிக்கையை மேற்பார்வைசெய்யும் அழைப்பு மத்திய ஊழியர்களுக்கு இரண்டு பகுத்தாய்வு திட்டங்களையும் ICTA வுக்கான இலத்திரணியல் சட்ட விளைவுத் திட்டத்தையும் நிறைவேற்றினார். இவர் லங்கா கிளியருக்கான டிஜிடல் சான்றிதழுக்கான சட்ட ஆலோசகராகவும் இருந்தார். கலாநிதி பிரதீப அவர்கள் பகுத்தாய்வுக்கும் உள்ளூரிலும் வெளிநாட்டிலும் பல தரப்பட்ட புத்தகங்களிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகளையும் பிரசுரித்துள்ளார்.

இவர் பல பகுத்தாய்வு கொடைகளைப் பெற்றுள்ளார். அவையாவன, தென் ஆபிரிக்காவின் ஜொஹனஸ்பேர்க் பல்கலைக்கழகத்திடமிருந்து 2008 க்கான தேசிய விஞ்ஞான அடித்தளக் கொடை, இலங்கையின் தொலைத்தொடர்பு முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவின் 2007/2008 க்கான பகுத்தாய்வுக் கொடை, 2002-2005 க்கான கலாநிதி நிகழ்ச்சித்திட்டத்திற்கான உலக வங்கிக் கொடை, 2004 இல் போலந்து நாட்டில் இடம்பெற்ற உலக தரவுப் பாதுகாப்பு ஆணைக்குழுவினர்கள் கருத்தரங்குக்காக குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் பிரயாணக்கொடை, பட்டப்படிப்புக்குப் பின்னரான 2002 கருத்தரங்கிற்கான மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் பகுத்தாய்வுக் கொடை, 2004 இன் எதிர்கால் பகுத்தாய்வாளர்களுக்கான அவுஸ்திரேலிய பகுத்தாய்வுச் சபையின் கொடை என்பனவாகும்.

கலாநிதி பிரதீப அவர்கள் அவரது துறையில் அவர் ஆற்றிய முக்கியமான பங்களிப்பிற்காகவும் 2000 இல் பிரான்ஸ் சர்வதேச மனித உரிமைகள் நிருவகம் போன்ற சமூகநலனுக்காகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளார். சர்வதேச வழக்கறிஞர்கள் சங்க இளம் வழக்கறிஞர்களுக்கான விருது 2003, சன்விரான்சிஸ்கோ, ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கலிபோர்னியா இலத்திரணியல் இரகசியத் தகவல் மையத்தின் புதிய யுகத்தில் இரகசியம் (2004) பிரயாணக் கொடை.

## 7. திரு. பி. டீ. ஜே. பர்னாந்து

திரு. பர்னாந்து அவர்கள் வங்கித்துறையில் 35 வருடங்களுக்கும் அதிகமான அனுபவமுடையவர். இவர் இதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியில் பல்வேறு அந்தஸ்தில் சிரேஷ்ட பதிவிகளில் சேவையாற்றியுள்ளார். 2010-2011 காலப்பகுதியில் இவர் இலங்கை மத்திய வங்கியில் நிதியியல் முறை ஸ்திரத்தன்மை மற்றும் கம்பனிகள் துறைத் தொகுப்பு ஆகியவற்றிற்கு பொறுப்பான பிரதி ஆளுனராவார். வங்கியியல் மற்றும் நிதியியல் துறை முறைமைப்படுத்தல், மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், தேசிய கணக்கீட்டு மற்றும் புள்ளிவிபரங்கள், தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் ஆகிய துறைகளில் திரு. பர்னாந்து அவர்கள் பரவலான அனுபவமும் திறனும் உடையவர் ஆவார். மத்திய வங்கியில் அவர் நிதியியல் ஸ்திரத்தன்மைக் குழுவின் தலைவராகவும், நாணயக் கொள்கைக் குழுவின் அங்கத்தவராகவும், இடர்நோகை முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவராகவும் தேசியக் கொடுப்பனவுச் சங்கத்தின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். 2011 ஆம் ஆண்டில் அவர் இலங்கை மத்திய வங்கியில் நிதியியில் ரீதியாக சிரமத்துக்குள்ளாகிய ஏழு பதிவுசெய்யப்பட்ட “துயரடைந்த” நிதியியல் கம்பனிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஓர் உத்தியோகத்தர்கள் குழுவிற்குத் தலைமை தாங்கினார்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராகப் பதவி வகித்தபோது அவர் இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கையின் காப்புறுதிச் சபை ஆகியவற்றில் பதவிவழி அங்கத்தவராகவும். கடன் தகவல் மையம் மற்றும் இலங்கையின் வங்கியாளர்கள் நிருவகம் ஆகியவற்றின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இவர் ஊழியர் நம்பிக்கை நிதியம், லங்கா கிளியர் பிரைவேட் லிமிட்டட் மற்றும் லங்கா வைனான்சியல் சேர்விஸஸ் பியூரோ ஆகியவற்றின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.

இ.பி.ப.ஆணைக்குழுவுக்கும் மேலாக திரு. பர்னாந்து அவர்கள் யூனியன் வங்கி, கொமர்ஷல் வைனான்ஸ் மற்றும் லீசிங் லிமிட்டட், கொமர்ஷல் இன்சுரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி லிமிட்டட், டெப்ரோபேன் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் மற்றும் ஹம்பானா பெட்ரோ கெமிக்கல் கம்பனி லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராகத் தற்போது சேவையாற்றுகிறார்.

அவரது தொழில் வாழ்வில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல முக்கியமான திட்டங்களை முன்னணியிலிருந்து முன்னெடுத்துள்ளார். விசேடமாக தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைப் பகுதியிலாகும்.

இதற்கும் மேலாக திரு. பர்னாந்து அவர்கள் பல தலைப்புகளை உள்ளடக்கிய தேசிய மட்டத்திலான பல குழுக்களில் சேவையாற்றியுள்ளதுடன் சர்வதேச மன்றங்களில் இலங்கையையும் மத்திய வங்கியையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

## 8. கலாநிதி பி.எம்.எஸ். பட்டகொட

கலாநிதி பட்டகொட அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானிக் கலை கௌரவ (பூகோளவியலில்) பட்டதாரியும், ஐக்கிய இராச்சியத்தின் கிழக்கு அங்கிலியா பல்கலைக்கழகத்திலிருந்த சூழல் விஞ்ஞானத்தில் கலாநிதி பட்டத்தையும், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்திலிருந்த இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியுமாவார். இதற்கும் மேலாக இவர் இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக நிருவகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

கலாநிதி பட்டகொட அவர்கள் இலங்கை மின்சாரச் சபை, லித்ரோ கேஸ் லங்கா லிமிட்டட், சார்க் டெவலப்மன்ட் நிதியம், லங்கா சீனிக் கம்பனி, இலங்கைக் காப்புறுதி, பிராந்திய அபிவிருத்தி வங்கி. கொள்கைக் கற்கைகள் நிருவகம் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகம், இலங்கை காபர்ன் நிதியம் மற்றும் இலங்கை வுல்பிரைட் ஆணைக்குழு ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராவார். இதற்கும் மேலாக இவர் திறைசேரியின் பிரதிச் செயலாளருமாவார். இவர் பொது முயற்சிகள் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றில் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றியுள்ளார். இவர் பொது நிர்வாக அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சூழல் மற்றும் தேசிய வளங்கள் அமைச்சு மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். மேலாக இலங்கையின் ஜனாதிபதி செயலகத்தில் இலங்கையின் மான்புமிகு ஜனாதிபதிக்கு உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். கலாநிதி பட்டகொட அவர்கள் இலங்கையில் சூழலின் நிலை, இலங்கையிலுள்ள கரையோரப் சதுப்புநிலப் படர்தாவர வகைகளது காடுகளின் மாற்றுப் பயன்பாட்டின் பொருளியல் மதிப்பிடுதல் ஆகியவை உள்ளடங்களாக பல புத்தகங்களை எழுதியுள்ளதுடன் இலங்கையில் நகர வளியியல் தர முகாமைத்துவம், இலங்கையில் சூழல் மதிப்பிடுவதற்கான தத்துவப் புத்தகம் மற்றும் இலங்கையில் எரிபொருள் மற்றும் வாகனங்களில் இறைவரிக் கொள்கைகள் ஆகிய நூல்களை இணைந்து எழுதியுள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்



**பேராசிரியர் ஹரீந்திர திசாபண்டார**
*பணிப்பாளர் நாயகம்*
*பணிப்பாளர் மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் பயிற்றுவிப்பு*
*27 மே 2013 இல் ராஜினாமா செய்தார்*



**திரு. தம்மிக பெரேரா**
*பிரதிப் பணிப்பாளர் நாயகம்*
*பணிப்பாளர் புலனாய்வுகள்*



**திரு. வஜிர விஜேகுணவர்தன**
*பணிப்பாளர் மூலதனச் சந்தை அபிவிருத்தி*



**திரு. நாமல் கமல்கொட**
*பணிப்பாளர் கண்காணிப்பு*



**திரு. துஷார ஜயரத்ன**
*உதவிப் பணிப்பாளர் வெளிவாரி தொடர்புகள் மற்றும் சந்தை அபிவிருத்தி*



**செல்வி. ஜயந்தி ஜயரத்ன**
*பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்*



**செல்வி. சுரணா பர்னாந்து**
*பணிப்பாளர் மேற்பார்வை*



**திருமதி. அயந்தி அபேவிக்கிரம**
*பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுலாக்கல்*



**செல்வி. ஹிமானி வீரசேகர**
*உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை*



**திருமதி. ருவணி முனசிங்ஹ**
*உதவிப் பணிப்பாளர் கூட்டிணைப்பு அலுவல்கள்*

# முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள்

## முகாமையாளர்கள்



**இடமிருந்து வலம்:** செல்வி. மதுகாயனி பலபிட்டிய, திரு. சுனெத் பெரேரா, திருமதி. ரண்மினி ஜயதிலக்க, செல்வி. சர்மிளா பண்டிதரத்ன.

## ஊழியர்கள்



**இடமிருந்து வலம்:** திரு. அனுர பெரேரா, செல்வி புத்தினி என் ஹேரத், திருமதி நிசன்சலா ஹேரத், திருமதி தனேஷா ராஜபுர, திருமதி லக்ஷ்மி விக்கிரமநாயக்க, செல்வி சாலினி பெரேரா, செல்வி ருவாங்கனி குணரத்ன, செல்வி ரனித்ரி மொல்லிகொட, திருமதி. தக்ஷிலா பிரான்சிஸ், திருமதி அசோகா கே தயாரத்ன, திரு. டபிள்யு ஆரியரத்ன.



**இடமிருந்து வலம்:** திருமதி சித்தாரா திசேரா, திரு எஸ் டி தர்மசிரி, திருமதி. எரந்ததி வைத்தியசேகர, திருமதி எச் கே ஏ சாமரி புத்திக, திருமதி பிம்பா கமதிகே, திரு சுகத் அல்விஸ், திருமதி மஞ்சுளா சந்திரரத்ன, திருமதி கிருஷாந்தி முத்துதந்திரிகே, திரு. பிரியந்த ஹேரத், செல்வி கிரிஸ்டோபள் சில்வா, செல்வி வை டி சந்தமாலி.



**இடமிருந்து வலம்:** திரு. மஹேஷ் அபேசேகர, செல்வி னுஹாலா தேவதாசன், திருமதி ஜே கே பிரியதர்ஷினி, செல்வி. லக்ஷ்மி அதபத்து, திருமதி. சித்தி மலீஹா, திருமதி அனுலா விஜேசிங்ஹ, திரு. டி பத்தும் நிரோஷன, செல்வி லுசாந்தினி சிவனேசராஜா, திரு அன்ஸ்லம் டயஸ், திரு. ரக்கித பண்டார.



**இடமிருந்து வலம்:** செல்வி பி எம் நிரோஷா உதாயங்கனி, திரு சந்தருவன் விஜேரத்ன, திரு. ஜி டி கபில குமார, செல்வி ஷீனா குணரத்ன, செல்வி ஹேரன் கிருஷாந்தி பர்னாந்து, திருமதி. ஜான்சினிதேவி குகநேசன், திருமதி பிரபாஷினி சமசக்கோன், திருமதி நிஷோகா ஜயதுங்க, திரு எம் எம் ஏ இம்ரான், செல்வி ரஜ்மி மானதுங்க, திரு. டி எம் ஜி பிரியந்த.



**இடமிருந்து வலம்:** திரு எம் ஜயசேகர, திரு ஆர் கே வசந்த சுனிமல், செல்வி மேகலா ஜயபால, திரு. நிமால் குமாரசிங்ஹ, திருமதி பிரதிபானி ஹேரத், செல்வி எரங்க மந்த்ரிரத்ன, திருமதி காயத்ரி வீரசிங்ஹ, திருமதி ஜோஹலின் கருணாரத்ன, திருமதி ஜூலி அலகக்கோன், திருமதி சவுமி கொடிப்பிலி, செல்வி சுஹாதினி விக்கிரமசிங்ஹ, திரு. சந்திரன் நாகேந்திரன், திருமதி ஏஷினி பண்டார,

**சமூகமளிக்காதோர்:** திருமதி சஜீவனி பக்மீதெனிய, திரு. பி டபிள்யு எல் பியதிஸ்ஸ, செல்வி பி டி பத்மசிரி, செல்வி குமாரி சிரிவர்தன,

# பாரிய பொருளியல் மேலோட்டம்

### பொருளாதார உற்பத்தி

உலகின் ஏனைய நாடுகள் மற்றும் ஒத்த பொருளாதாரங்களுடன் ஒப்பிடும்போது இலங்கையின் பொருளாதாரமானது பல உலகளாவிய மற்றும் உள்ளூர் சவால்களை முனைப்புடன் சந்தித்து 2012 இல் ஓரளவு திறன்படச் செயற்பட்டது. ஓர் மந்தநிலையிலும் ஒட்டுமொத்த உள்ளூர் மொத்த உற்பத்தியானது ஓர் ஆரோக்கியமான 6.4% ஆல் வளர்ச்சியடைந்து தலா வருமானத்தினை 2,923 அமெரிக்க டொலர்களாக மேலுயர்த்தியது. இலங்கை மத்திய வங்கியின்படி மூலதனச் சந்தை நடவடிக்கைகளை உள்ளடக்கிய சேவைகள் துறையானது ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்திக்கு 58.5% பங்களிப்பினை அளித்து 2012 இல் 4.6% வளர்ச்சியை அடைந்துள்ளது. கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளாவன முறையே 10.3% மற்றும் 5.8% ஆல் வளர்ச்சியடைந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கான கைத்தொழில்துறையின் பங்களிப்பானது 29.3% இலிருந்து 2012 இல் 30.4% ஆக அதிகரித்துள்ளது.

நாணயத்தை மிதக்கவிட்டதன் பின்னர் ஏற்பட்ட இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உயர்வடையும் உள்ளூர் வட்டி வீதங்கள் என்பவற்றினால் கொழும்புப் பங்குப் பரிமாற்றகம் வருடத்தின் ஆரம்பத்தில் சில சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஒட்டுமொத்த உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் தனியார் துறை முதலீடுகள், பிரதானமாக சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறையில் நிலைமாறாததன் நிமித்தம் உள்ளூர் நிதிக்கான கேள்வி உயர்வாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் குறிப்பாகக் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் 2012 இல் நாடானது ஐக்கிய அமெரிக்க டொலர் நாணயத்திலான நீண்ட கால முறிகளை, முன்னர் வழங்கிய ஏனைய இலங்கை முறிகளிலும் பார்க்க ஆகக்குறைந்த வட்டி வீதத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தது. ஒப்பீட்டளவில் குறைந்த கிரயத்தில் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நிதியானது உள்ளூர் வட்டிவீதங்கள் மேலும் உயர்வடையாது பேணுவதற்குத் துணைபுரிந்தன. அதேசமயம் ஒட்டுமொத்த பொருளாதார ஆரோக்கியத்தினை பாதிக்காத வகையில் அதிகாரிகளது சமயோசித நடவடிக்கையானது பொருளாதாரம் பலமான வளர்ச்சியைப் பதிவுசெய்வதற்கு உதவியது. இந்த சாத்தியமான அபிவிருத்திகள் முதலீட்டாளர்களினால் அனுகூலமாகக் கருதப்பட்டு கொ.ப.ப. இல் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலாக இலங்கை ரூபா 38.6 பில்லியன் பதிவுசெய்யப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சந்தை மூலதனவாக்கமானது இலங்கை ரூபா 2,167.6 பில்லியனாக, அதாவது மொத்த வருடாந்த மொ.உ.உற்பத்தியின் 28.6% ஆகவும் காணப்பட்டது.

### பணவீக்கம், நாணயமாற்று விகிதங்கள், வட்டி வீதங்கள் மற்றும் கடன்

மசகெண்ணெயின் விலையில் ஏற்பட்ட ஸ்திரமற்ற தன்மை, விவசாய உற்பத்தி மற்றும் நீர் மின்சார உருவாக்கம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்திய பருவகால வறட்சி மற்றும் அதன் பின் தொடர்ந்த இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கம் என்பவை இருந்தபோதிலும் கொள்கை வகுப்பாளர்கள் பணவீக்கத்தினை ஓர் ஒற்றை ஸ்தான இலக்கத்தில் பேணக்கூடியதாயிருந்தது. 2011 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து எமது நாணயமாற்று விகிதமானது அழுத்தத்தின் கீழ் காணப்பட்டது. எமது நாணயமானது ஓரிரவில் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டதுடன் விசாலமடையும் வர்த்தகப் பற்றாக்குறையானது இலங்கை ரூபாவினை மேலும் பாதுகாப்பதிலிருந்து மத்திய வங்கி விலகிக்கொள்ளும் தேவைக்கு வழியிட்டது. ஆரம்பப் பீதி மற்றும் இலங்கை ரூபாவின் அதிகரித்த விற்பனை என்பவற்றிற்கு மத்தியிலும் நாணயமாற்றுச் சந்தைக்கு, ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த பெறுமதியில் 13.3% வீழ்ச்சியடைந்த போதிலும் உள்ளூர் நாணயமானது அதன் அடிமட்டத்திலிருந்து ஓரளவு முன்னேற்றமடைந்து, ஸ்திரத்தன்மை திரும்பியது. வர்த்தகப் பற்றாக்குறையானது 2012 இல் 3.1% ஆல் வீழ்ச்சியடைந்து அதிகாரிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் சரியென நிரூபணமானது. மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் உல்லாசத்துறையிலிருந்து வருமானம் 25.1% ஆல் வளர்ச்சியடைந்தும் போக்குவரத்து சேவைகள் 17.4% ஆல் அதிகரித்தும் இதன்பயனாக சேவைத் துறையினால் உழைக்கப்பட்ட அந்நிய செலாவணியானது வருடத்தில் 13.8% ஆல் வளர்ச்சியடைந்தது. சேவைத்துறையின் வருமானமும் எமது இடம்பெயர் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணம் உள்வருகைகளின் 16.3% வளர்ச்சியும் 2012 இல் எமது நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை 15.3% ஆல் குறைப்பதற்கு உதவியதுடன் நாணயமாற்று விகிதத்தினை ஸ்திரப்படுத்துவதற்கும் துணைபுரிந்தது.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறுகிய நாணயக் கொள்கையானது மிகையான திரவத்தன்மையினைக் கட்டுப்படுத்தவும் மற்றும் 2011 இல் தெளிவாகக் காணப்பட்ட மிதமிஞ்சிய கடன் விஸ்தரிப்பினைக் கட்டுப்படுத்தவும் கூடியதாயிருந்தது. அத்துடன் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியினை சமநிலைப்படுத்திய அதேசமயம் பணவீக்க அழுத்தங்களையும் கட்டுப்படுத்தக்கூடியதாயிருந்தது. இதன் பலனாக சந்தை வட்டிவீதங்கள் உயர்வடைந்து பதினைந்து சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்டதுடன் முதலீட்டாளர்கள் உரித்துடமையிலிருந்து தமது முதலீடுகளை உயர் விளைவைக் கொடுக்கும் நிலையான வருமானப் பிணையங்களுக்கு மாற்றியதன் காரணமாக கொ.ப.ப. இன் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. இதன் பலனாக கொ.ப.ப. இன் வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டதுடன் புரள்வின் பெறுமதியானது 60.8% ஆல் வீழ்ச்சியடைந்து இலங்கை ரூபா 213.8 பில்லியனாகக் காணப்பட்டது.

### அரசாங்க நிதி, முதலீடு மற்றும் பற்றாக்குறை

இறுக்கமான நாணயக் கொள்கையினாலும் நுகர்வு வழி இறக்குமதிகள் குறைவடைந்ததனாலும் அரசாங்கத்தின் வருமானமானது மொ.உ.உ. இன் சதவீதமாக 14.3% இலிருந்த 2012 இல் 13.0% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இருந்த போதிலும் வருமான வீழ்ச்சியின் மத்தியிலும் அதிகாரிகள் நாட்டிற்கு நீண்டகால பொருளாதார நலனைப் பெற்றுக்கொடுக்கும் முதலீடுகளைப் பிடித்து வைத்திருக்கவில்லை. வீதிகள் மற்றும் அதிவேகப் பாதைகளின் விஸ்தரிப்பு, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி மற்றும் விஸ்தரிப்பு என்பவை இவ்வருடத்தில் தடையின்றி முன்னேற்றமடைந்த

அத்தகைய முதலீடுகளில் சிலவாகும். இலங்கை மத்திய வங்கியின் பிரகாரம் 2012 இல் மொத்த முதலீடுகள் பூரண அடிப்படையில் அதிகரித்ததுடன் ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட்ட மொ.உ.உ. இன் 30% இலிருந்து 30.6% ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும் வருமான உருவாக்கமானது இலக்கினை எட்டாத போதிலும் இறைவரி ஆரோக்கியமானது ஆறுதலளிக்கும் வண்ணம் பாதிப்படையாது ஒட்டுமொத்த இறைவரிப் பற்றாக்குறையானது மொ.உ.உ. இன் 6.4% ஆகக் குறைவடைந்து முன்னேற்றத்தைக் காட்டியது. எனவே பல சவால்களுக்கு மத்தியிலும் இறைவரிப் பற்றாக்குறையின் ஒடுக்கமடையும் போக்கானது, அரசாங்கக் கடன்களின் வீழ்ச்சியடையும் போக்கானது மாற்றமடைந்து மொ.உ.உ. இன் 79.1% ஆக ஓரளவு அதிகரித்துள்ளபோதிலும், தொடர்ந்தது. அதிகரித்த கடனானது முதலீட்டுச் செலவினத்தினாலும் மற்றும் 2012 இல் அனுபவித்த மெதுவான பொருளாதார வளர்ச்சியின் காரணத்தினாலும் ஏற்பட்டுள்ளது.

2012 இல் காணப்பட்ட இன்னுமோர் தெளிவான பொருளாதார பண்பு என்னவெனில் உள்ளூர் சேமிப்பானது ரூபா 1,286.5 பில்லியனை எட்டி 27.6% ஆல் அதிகரித்ததுடன் இது தற்போது மொ.உ.உ. இன் 17% ஆகக் காணப்படுகின்றது. மேலும் பணஉள்வருகைகளின் திடமான உட்பாய்ச்சல்களினால் தேசிய சேமிப்பானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மொ.உ.உ. இன் 22% இலிருந்து 2012 இல் 24% ஆக அதிகரித்துள்ளது. இப்போக்கானது தொடருமாயின் தேசிய சேமிப்பு-முதலீடு ஆகியவற்றிற்கான இடைவெளியானது ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட்ட மொ.உ.உ. இன் 7.9% இலிருந்து மொ.உ.உ. இன் 6.6% வீழ்ச்சியடைந்துள்ளமை பொருளாதாரத்திற்கு அனுகூலமானதாகக் கருதப்படும்.

### முடிவுறுத்தல் குறிப்புரை

அரசநிதி மற்றும் கொள்கைகள் என்பன சரியான விதத்தில் முகாமைப்படுத்தப்பட்டு தனியார் துறையிடமிருந்து உயர்ந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்வதற்கு உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்படுமாயின் இலங்கையின் பொருளாதாரமானது பல வருடங்களுக்கு ஒப்பீட்டளவில் உயர்ந்த வளர்ச்சியையும் அதன் சனத்தொகைக்கு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தினையும் எதிர்பார்க்கலாம். சிறிய-மத்திய அளவிலான முயற்சிகளின் பொருளாதார உற்பத்தியினை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என நாம் விசுவாசிப்பதுடன் பாரியளவு நிறுவனங்கள் உள்ளடங்களாக அனைத்து தனியார்துறை தொழில் முயற்சிகளுக்கும் ஒன்றுபட்ட உறுதுணை வழங்கப்படுமாயின் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை மேலுயர்த்த முடியும். மேலும் பொருளாதாரமானது அதிகரிக்கும் தேசிய சேமிப்பில் கட்டியெழுப்பப்படுவதுடன் பலதரப்பட்ட முதலீட்டு/சேமிப்புக் கருவிகள் கிடைக்கக்கூடியமையை பரவலாக்கவேண்டும். அத்துடன் மூலதனச் சந்தைகளானது முதலீடு/சேமிப்பு மற்றும் உயர்ந்த வருமானத்திற்கு ஓர் மார்க்கமாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*தரவு மூலம்: இலங்கை மத்திய வங்கி 2012 ஆண்டறிக்கை*

# மூலதனச் சந்தை மீளாய்வு

### உரித்துடமைச் சந்தை 2012

யுத்தத்தின் பின்னரான இலங்கையின் மீளெழுச்சியில் ஓர் மனக்கிளர்ச்சியை உண்டாக்குகின்ற தூணாக அதன் பங்குச் சந்தையின் மீட்சி காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் உலகளாவிய உணர்வுகளை பகுதியளவில் பிரதிபலிப்பதாகவும் பகுதியளவில் உள்ளூர் காரணிகளினாலும் கொ.ப.ப. சில தளம்பள்களை அனுபவித்தது. (உருவம் 01)

*உருவம் 01:* **சந்தைச் சுட்டிகளின் செயற்திறன்**




2012ஆம் ஆண்டானது ஓர் நன்னம்பிக்கையுள்ள குறிப்புடன் ஆரம்பமாகியது. பங்குத்தரகுச் சமூகத்தினால் வரவேற்பைப்பெற்ற கடனளித்தல் விதிகளைத் தளர்த்தும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானமானது சந்தையின் நிலைமையில் ஓர் மாற்றத்தை எதிர்பார்த்தது.

இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமான நிலையான நாணயமாற்று விகித ஆட்சியிலிருந்து முகாமைப்படுத்தப்பட்ட நாணயமாற்று விகிதத்திற்கு மாறியமையானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஓர் போக்கின் மாற்றத்தை பிரதிபலித்தது. இலங்கை ரூபாவின் செங்குத்தான பெறுமான வீழ்ச்சியும் பல துறைகளின் வருடத்திலிருந்து வருடத்திற்கான உழைப்பு வளர்ச்சியில் காணப்பட்ட கீழிறக்கமும் முதலீட்டாளர் எதிர்பார்ப்பினை மந்தமடையச் செய்து சந்தையானது மே மாத இறுதியில் 5,000 மட்டத்திற்கும் குறைவான வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. முற்றுமுழுதான தாக்கத்தைப் பார்தோமெனில் அது அனைத்து பங்கு விலைச்சுட்டியில் வருட ஆரம்பத்திலிருந்து மே மாதம் இறுதிவரையில் 20% எதிர்மறையான செயற்திறனைக் காட்டியது.

சந்தையினுள் இருப்பவர்களுக்கான ஓர் தொடரான இறுகிய ஒழுங்குவிதிகளும் கடுமையான வர்த்தக நடவடிக்கைகளுக்கும் சந்தையானது எதிர்மறையான எதிர்வினைப்பைக் காட்டியது. இந்த நடவடிக்கைகள் ஓர் காப்பக சேவை வழங்குனர் ஓர் கொள்வனவை நிறைவேற்றத் தவறியமைக்காக கொ.ப.ப. இனால் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இ.பி.ப.ஆணைக்குவினால் மேற்கொள்ளப்பட்டது. இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையானது சீரான விதத்தில் தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக விசேடமாக தீர்ப்பனவு சுற்று தொடர்பாக ஓர் விரிவான விநியோகம் எதிர் கொடுப்பனவு (வி.எ.கொ.) முறையானது அமுல்படுத்தப்படும் வரைக்கும் சில தற்காலிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது.

சந்தையானது ஜுன் மாதத்திலும் அளவுக்கதிமான கடனளிப்பினை மட்டுப்படுத்துவதற்காக நிலைநிறுத்தப்பட்ட உயர்வட்டி வீத சூழலின் காரணமாக அதன் சரிவைத் தொடர்ந்தது. ஸ்திரமான நிலையான வருமானக் கருவிகளான நிலையான வைப்புகள் மற்றும் தொகுதிக்கடன்கள் ஆகியவற்றினால் வழங்கப்படும் உயர்ந்த வருமானமானது பங்குச் சந்தையுடன் ஒப்பிடும்போது சிற்றளவு முதலீட்டாளர்களுக்கு ஓர் கவர்ச்சிமிக்க தெரிவாக விளங்கியது.

வருடத்தின் மூன்றாம் காலாண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் நாட்டைப் பற்றிய எதிர்பார்ப்பானது திடமானதாகக் காணப்பட்டதனாலும் ந.ஆ.உ இன் (நம்பகமான ஆதார உடன்படிக்கையின்) இறுதி பங்களிப்பான 2.5 பில்லியன் ஐ.அ. டொலர் கொடுப்பனவினாலும் பொருளாதாரமானது உந்தப்பட்டது. வருடத்தின் மூன்றாம் காலாண்டானது பல முறைமைப்படுத்தல்களை மேலும் தளர்த்தும் இ.பி.ப.ஆ. இன் தீர்மானத்துடன் குறிக்கப்பட்டது. இவை பங்குத் தரகர் கடன் எல்லைகளை தளர்த்துதல், சந்தைக்கப்பாலான வர்த்தகத்திலுள்ள 20% உயர் விலை எல்லையை நீக்குதல் மற்றும் பங்குத்தரகு நிறுவனங்களின்

பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் தமது பங்குகளைக் கொள்வனவு செய்த தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் விற்பனை செய்வதற்கான தடையும் நீக்கப்பட்டது. சந்தை வீழ்ச்சியுற சந்தைப் பெறுமதியானது மிகவும் கவர்ச்சிகரமானதாக மாறியதுடன் இதன் காரணமாக வெளிநாட்டவரது பங்குபற்றலானது அதிகரித்தது. இந்த முன்னேற்றங்களுடன் சந்தையானது ஒன்று திரண்டு அ.ப.வி.சு. 2012 செப்டம்பர் இறுதியில் வருடத்தின் உச்சமான 5,971.99 ஆக முன்னோக்கிச் சென்றது.

இறுதிக் காலாண்டில் அரசாங்கமானது மூலதனச் சந்தை நட்புடைய வரவுசெலவுத் திட்டத்தினை சமர்ப்பித்ததுடன் மூலதனச் சந்தைகளது அபிவிருத்திக்கு பல சலுகைகள் வரவுசெலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டதனால் கொ.ப.ப. ஆனது வரவு செலவுத் திட்டத்திற்கு உறுதியான விதத்தில் எதிர்செயலாற்றியது.

### சந்தைச் சுட்டிகளின் செயற்திறன்

மிலங்கா விலைச் சுட்டியினால் (மி.வி.சு.) அளவிடப்படும்போது உரித்துடமைச் சந்தையானது வருடத்திலிருந்து வருட அடிப்படையில் ஓரளவான 2% வீழ்ச்சியடைந்தும் பரவலான அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அ.பி.வி.சு.) 7% ஆல் வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டது. அ.ப.வி.சு. ஆனது 6,074.42 புள்ளிகளாக வருடத்தினை ஆரம்பித்து வருடத்தின் இறுதியில் 5,643.0 புள்ளிகளாக நிறைவுற்றதுடன் மி.வி.சு. ஆனது 5,229.16 புள்ளிகளாக வருடத்தினை ஆரம்பித்து வருட இறுதியில் 5,119.09 புள்ளிகளாக நிறைவுற்றது.

ஜுன் 2012 இல் ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ்ஸின் (ஸ்.அ.பு.) விலைச்சுட்டிகள் எஸ் அன்ட் பி. 20 சுட்டியினை அங்குரார்ப்பணம் செய்தது. இது கொ.ப.ப. உடனான ஓர் கூட்டு அபிவிருத்தி முயற்சியாகும். இச்சுட்டியானது கொ.ப.ப. இல் திரவத்தன்மையுடைய மற்றும் வர்த்தகம் செய்யக்கூடிய பங்குகளை பிரதிபலிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.

### சந்தை மூலதனவாக்கம் மற்றும் விலை உழைப்பு

டிசம்பர் 2012 இல் சந்தை மூலதனவாக்கமானது ரூபா 2,167.5 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 2,213.9 பில்லியனாகக் காணப்பட்டது. மொ.உ.உ. இன் சந்தை மூலதனவாக்க விகிதமானது பங்குச் சந்தைகளை மதிப்பிடுவதற்கான ஓர் முக்கியமான வழியலகாகும். 2012 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தை மூலதனவாக்கமானது மொ.உ.உ. இன் 29% ஆகக் காணப்பட்டது. இது 2011 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 33.8% இலிருந்து ஓர் வீழ்ச்சியாகும்.

பங்குகளின் பெறுமதியானது விலை உழைப்பு விகிதத்திலிருந்து மதிப்பீடு செய்யப்படலாம். மீளாய்வாண்டில் ஒப்பீட்டளவில் காணப்பட்ட குறைவான பங்குகளின் விலைகளின் காரணமாக சந்தையானது 2012 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் விலை உழைப்பு விகிதமானது 15.9 மடங்காக வீழ்ச்சியடைந்ததைக் கண்டது. இது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 15.8 மடங்காகக் காணப்பட்டது. கடந்த வருடங்களில் விலை உழைப்பு விகிதத்தில் ஓர் வீழ்ச்சி காணப்பட்டாலும் அது ஏனைய வெளித்தோன்றும் சந்தைகளுடன் ஒப்பிடும்போது இன்னமும் உயர்மட்டத்தில் காணப்பட்டது.

### முதலாந்தரச் சந்தைகள் / புதிய பட்டியலிடல்கள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012 இல் ஆ.பொ. வழங்கள்களினாலும் அறிமுகங்களினாலும் திரட்டப்பட்ட தொகையானது கணிசமான அளவு குறைவாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை, கட்டுமாண மற்றும் வலு மற்றும் நிதிச் சேவைகள் துறையினை பிரதிபலிக்கும் ஆறு கம்பனிகளது ஆ.பொ.வ. கொ.ப.ப. இல் காணப்பட்டதுடன் இதன் மூலம் ரூபா 1.7 பில்லியன் திரட்டப்பட்டது. இதற்கும் மேலாக 11 கம்பனிகள் அறிமுகங்களினூடாக கொ.ப.ப. இல் பட்டியற்படுத்தலை பூர்த்திசெய்தன.

இந்த வருடத்தில் கொ.ப.ப. இல் பட்டியலிடல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சியாக 2013 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் ஓர் பிரேரணை முன்மொழியப்பட்டது. 2013 டிசம்பருக்கு முன்னர் பட்டியலிடும் புதிய கம்பனிகள் தமது பங்குகளின் ஆகக்குறைந்தது 20% த்தினை பொதுமக்களிடம் இருப்பதனை பேணுமாயின் அவற்றுக்கு மூன்று வருடங்களுக்கு அரைவாசி வரிச்சலுகை வழங்கப்படும். அத்தகைய ஏற்பாடானது இலங்கையின் பங்குச் சந்தைக்கு அதிகளவு திரவத்தன்மையை அறிமுகப்படுத்துவதுடன் தளம்பல்களையும் குறைக்கும். பல அரச உடைமையுடைய நிறுவனங்கள் 2013 இல் பட்டியலிடுவதற்கு கவனம் செலுத்துகின்றன.(உருவங்கள் 02,03)

*உருவம் 02:* **புதிய பட்டியலிடல்கள்**

| கம்பனியின் பெயர் | வழங்க முன்வந்த பங்குகளின் எண்ணிக்கை | வழங்க முன்வந்த விலை (ரூபா) | திரட்டப்பட்ட நிதி (ரூபா மில்லி.) | பட்டியலிட்ட திகதி |
|---|---|---|---|---|
| கல்பிட்டிய பீச் ரிசோட் பி.எல்.சி. | 16,200,000 | 17.50 | 283.50 | 03 ஜனவரி 2012 |
| வஸ்கடுவ பீச் ரிசோட் பி.எல்.சி. | 15,600,000 | 12.50 | 195.00 | 03 ஜனவரி 2012 |
| ஏசியா எஸட் வைனான்ஸ் லிமிட்டட் | 170,160,129 | 2.50 | 295.70 | 12 பெப்ரவரி 2012 |
| எக்ஸஸ் இன்ஜினியரிங் பி.எல்.சி. | 20,000,000 | 25.00 | 500.00 | 27 மார்ச் 2012 |
| மெக்வுட்ஸ் எனர்ஜி பி.எல்.சி. | 25,000,000 | 14.00 | 350.00 | 25 ஏப்ரல் 2012 |
| ஹிக்கடுவ பீச் ரிசோட்ஸ் லிமிட்டட் | 5,757,390 | 20.00 | 115.10 | 17 டிசம்பர் 2012 |
| மொத்தம் | | | 1,739.3 | |

# மூலதனச் சந்தை மீளாய்வு *தொடர்ச்சி.*

*உருவம் 03:* **அறிமுகங்கள்**

| கம்பனியின் பெயர் | பட்டியலிட்ட திகதி | கம்பனியின் பெயர் | பட்டியலிட்ட திகதி |
|---|---|---|---|
| பி சி பார்மா பி.எல்.சி. | 18 ஜனவரி 2012 | பி சி எச் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் | 28 ஜுன் 2012 |
| அக்ஸ்டார் வெர்ட்டிலைசர்ஸ் பி.எல்.சி. (வாக்குரிமைப் பங்குகள்) | 16 பெப்ரவரி 2012 | ஒரியன்ட் வைனான்ஸ் | 07 ஜுன் 2012 |
| அக்ஸ்டார் வெர்ட்டிலைசர்ஸ் பி.எல்.சி. (வாக்குரிமையற்ற பங்குகள்) | 16 பெப்ரவரி 2012 | கொமர்ஷல் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | 05 ஜுன் 2012 |
| சனச டெவலப்மன்ட் பேங் பி.எல்.சி. | 31 மே 2012 | பேருவல ரிஸோட்ஸ் பி.எல்.சி. | 04 ஜுலை 2012 |
| டெப்ரோபேன் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் | 17 மே 2012 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் வைனான்ஸ் பி.எல்.சி. | 12 செப்டம்பர் 2012 |
| ஹம்பொட வோல்ஸ் லிமிட்டட் | 18 ஜுன் 2012 | ஏசியா சியக்க கொமோடிட்டீஸ் லிமிட்டட் | 12 செப்டம்பர் 2012 |

## இரண்டாந்தரச் சந்தைச் செயற்பாடுகள்

2012 ஆம் ஆண்டில் பங்குகளின் விலை வீழ்ச்சியினைத் தொடர்ந்தாற்போல வருடாந்தப் புரள்விலும் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்களின் எண்ணிக்கையிலும் கணிசமான அளவு வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாயிருந்தது. ஒப்பீட்டளவில் 2012 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் தினசரிச் சராசரிப் புரள்வானது ரூபா 884 மில்லியனாகக் காணப்பட்டது. இது 2011 ஆம் ஆண்டின் தினசரிச் சராசரிப் புரள்வான ரூபா 2,286 மில்லியனுடன் ஒப்பிடும்போது 61% கணிசமான அளவு வீழ்ச்சியாகும். 2012 இல் மொத்த உரித்துடமைப் புரள்வான ரூபா 213.8 பில்லியனில் 75% ஆனது உள்ளூர் முதலீட்டாளர்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதுடன் வெளிநாட்டு பங்குபற்றுனர்களின் பங்களிப்பு 25% ஆகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட தினசரி சராசரி வர்த்தகங்களின் எண்ணிக்கை 7,675 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் தினசரி சராசரி நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்களின் எண்ணிக்கையான 19,160 உடன் ஒப்பிடும்போது 60% மான பாரிய வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டான 2011 இல் சராசரியாக தினசரி கைமாற்றம் செய்யப்பட்ட பங்குகளான 103 மில்லியன் பங்குகளுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் சராசரியாக தினமும் 40 மில்லியன் பங்குகள் கைமாற்றம் செய்யப்பட்டன.

## வெளிநாட்டுப் பங்குபற்றல்

இலங்கை ரூபாவின் ஸ்திரத்தன்மையுடனும் கவர்ச்சிகரமான மதிப்பீட்டினாலும் வெளிநாட்டுப் பங்குபற்றலானது கடைசி அரையாண்டில் கணிசமான அளவு அதிகரித்தது. முற்றுமுழுதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சந்தைப் புரள்வில் 25% த்திற்குப் பங்களிப்புச் செய்தார்கள். இது 2011 ஆம் ஆண்டில் 11% ஆகக் காணப்பட்டது. இவ்வருடத்தில் கொ.ப.ப. ஆனது வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலாக அ.டொலர்கள் 303.8 மில்லியனை அண்ணளவாக ரூபா 38.7 பில்லியனைப் பதிவுசெய்தது.

*உருவம் 04:* **தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்)**




## துறைசார் செயற்திறன்

முன்னைய ஆண்டான 2011 உடன் ஒப்பிடும்போது 2012 இல் கொ.ப.ப. இன் சிறந்த செயற்திறனுடைய துறையாக பானங்கள், உணவு மற்றும் புகையிலைத் துறையானது 31% ஆல் வளர்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் கொ.ப.ப. இன் எஞ்சிய 19 துறைகளும் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மோசமான செயற்திறனுடைய துறைசார் சுட்டிகளாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் மோட்டார் துறை காணப்பட்டன. இவை முறையே 53% ஆல் மற்றும் 42% ஆல் வீழ்ச்சியடைந்தன.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

2012 டிசம்பர் 31 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது (அண்ணளவாக) ரூபா 31 பில்லியனாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளதும் சந்தை பங்களிப்பானது தேறிய சொத்தின் பெறுமதி அடிப்படையில் கீழ்க்காணும் உருவத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 05)

*உருவம் 05:* **2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு**




## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் முற்றுமுழுதான நிலவரம்

2012 மற்றும் 2011 ஆண்டுகளுக்கான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒப்பீட்டளவு புள்ளிவிபரங்கள் உருவம் 6 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

*உருவம் 06:* **நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் முற்றுமுழுதான நிலவரம்**

| | 31 டிசம்பர் 2011 இல் | 31 டிசம்பர் 2012 இல் | % மாற்றங்கள் |
|---|---|---|---|
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | 33 | **48** | 45.45 |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (அண்ணளவாக ரூபா மில்.) | 24,059 | **31,062** | 29.10 |
| அலகுடமையாளர்களின் எண்ணிக்கை | 26,636 | **27,952** | 4.94 |
| வழங்கப்பட்டுள்ள அலகுகளின் எண்ணிக்கை (அண்ணளவாக மில்.) | 1,506 | **2,251** | 49.47 |
| உரித்துடமைகளில் முதலீடு (அண்ணளவாக ரூபா மில்லியன்) | 9,555 | **8,944** | (6.39) |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு (அண்ணளவாக ரூபா மில்லியன்) | 10,326 | **5,449** | (47.23) |
| ஏனைய முதலீட்டுக் கருவிகளில் முதலீடு (அண்ணளவாக ரூபா மில்.) | 4,186 | **16,596** | 296.46 |

மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

* வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி வைப்புகள்.

# செயல்முறை மீளாய்வு

"புதிய சட்டமானது பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட பங்குப் பரிமாற்றகங்கள், மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் மத்திய வைப்பகங்கள் என்பனவற்றை சில பாதுகாப்புகளுடன் சந்தை நிறுவனங்களாக ஒரே தடவையில் உரிமமளிப்பதற்கு வழிவகுக்கும்."

## முறைமைப்படுத்தல்கள்

### உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

மூலதனச் சந்தை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக சந்தைப் பங்குபற்றுநர்களுக்கான உரிமங்கள் மற்றும் பதிவீடுகள் வழங்கும் கடமையினை இ.பி.ப.ஆ. மேற்கொள்கின்றது. உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள் என்பன சந்தையின் நேர்மையினையும் மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் சந்தைக் பங்குபற்றுனர்கள் ஈடுபடுவதற்கான ஆற்றலில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வருடத்தில் வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் பதிவீடுகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 07)

*உருவம் 07:* **சந்தைப்பங்குபற்றுனர்களுக்கான உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்**

| சந்தைப் பங்குபற்றுனர்கள் | உரிமமளிக்கப்பட்ட / பதிவீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிமங்கள் / பதிவீடுகள் |
|---|---|---|
| பங்குப் பரிமாற்றகங்கள் | 01 | - |
| பங்குத் தரகுக் கம்பனிகள் | 29 | - |
| உரித்துடமைப் பிணையங்களில் பங்கு வர்த்தகர்கள் | 06 | - |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் முகாமைத்துவக் கம்பனிகள் | 13 | 03 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 35 | 08 |
| எல்லைக் கடன் வழங்குநர்கள் | 33 | 01 |
| ஒப்புரவாளர்கள் | 11 | 02 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 03 | - |
| தீர்வக இல்லங்கள் | 01 | - |

### கொள்கை முன்னெடுப்புகள்

மீளாய்வாண்டில் மூலதனச் சந்தையின் நடைமுறையிலுள்ள சட்ட வடிவமைப்பை மேம்படுத்துவதற்காக பின்வரும் கொள்கை முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### *பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் விதிக்கோவை*

இலங்கையின் உயர் நீதி மன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி சலீம் மர்சூவ் அவர்களால் முன்மொழியப்பட்ட பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் விதிக்கோவைக்கான திருத்தங்கள் ஆணைக்குழுவினால் இவ்வருடத்தில் அங்கீகரிக்கப்படடன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் சந்தையில் ஏற்பட்ட குறிப்பிட்ட சில முன்னேற்றங்கள் காரணமாக இவ்விதிக்கோவையின் இன்னுமோர் மீளாய்வு நடைபெற்றவண்ணமுள்ளது.

புதிய விதிக்கோவையானது மற்றவைகளுக்கிடையே பின்வருவனவற்றிற்கு உத்தரவளிக்கும்;

- பட்டியலிடப்பட்ட கம்பனியின் நபர்களினால் மேற்கொள்ளப்படும் மறைமுகமான பொறுப்பேற்புகளின்போது குறிப்பிட்ட சில மட்டங்களை எட்டியவுடன் கட்டாயக் கொடைமுனைவொன்றை மேற்கொள்வதற்கு;
- புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையினை நிர்வகிக்கும்போது எழக்கூடிய ஏதேனும் விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு அறிவுரை வழங்குவதற்காக ஓர் ஆலோசனை குழுவைக் உருவாக்குவதற்காக;
- அனைத்து கொடைமுனைவு மேற்கொள்பவர்களும் மற்றும் இலக்கு வைக்கப்படும் கம்பனிகளும் ஓர் கொடைமுனைவுக்கான அனைத்து தரப்பினரும் விதிக்கோவையுடன் அமைவுறுவதனை உறுதிசெய்வதற்காக இணக்கப்பாட்டு கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கு; மற்றும்
- சில விசேட சூழ்நிலைகளின் கீழ் ஓர் கட்டாயக் கொடை முனைவை மேற்கொள்ள வேண்டிய தேவையை குணப்படுத்துவதற்காக "சுண்ணாம்பு பூசுதல் தீர்மானங்களது" அறிமுகம்.

#### *பி.ப.ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்கள்*

உலக வங்கியானது முதலாம் முன்னெடுப்பினூடாக, (உலக வங்கியின் நிதியியல் துறை மறுசீரமைப்பு மற்றும் பலப்படுத்தல் அங்கம்) இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்களை முன்மொழிவதற்கு துணைபுரிந்தது. இவ்வாறு

முன்மொழியப்படும் திருத்தங்கள் அமுல்படுத்தப்படும்போது இ.பி.ப.ஆ. க்கு மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துவதற்கு ஓர் திடமான சட்ட வடிவமைப்பினை வழங்குவதுடன் சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களின் ஒழுங்கமைப்பின் (ச.பி.ஆ.ஒ.) நியமங்களுடன் சட்டமானது பொருந்தியதாகவும் காணப்படும். முதலாவது சேவைப்பயணம் ஜுன் 2011 இலும் இறுதிச் சேவைப்பயணம் டிசம்பர் 2012 இலும் இடம்பெற்றன.

புதிய சட்டமானது பரஸ்பரமற்ற உரித்துடமை பகிரப்பட்ட பங்குப் பரிமாற்றகங்கள், மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் மத்திய வைப்பகங்கள் என்பனவற்றை சில பாதுகாப்புகளுடன் சந்தை நிறுவனங்களாக ஒரே தடவையில் உரிமமளிப்பதற்கு வழிவகுக்கும். இதற்கும் மேலாக கம்பனித்துறை நிதி ஆலோசகர்கள், நிதி திட்டமிடுபவர்கள், பகுத்தாராய்வாளர்கள், மூலாதாரப் பிணையங்கள் தரகர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் இ.பி.ப.ஆ. இன் அதிகார வரம்பின் கீழ் கொண்டுவரப்படுவார்கள். மேலும் இலங்கையில் கம்பனிகளது முறிகள் சந்தையை விருத்தி செய்வதற்கான ஓர் உந்துசக்தியை அளிக்கும்பொருட்டு பொதுமக்களுக்கு தொகுதிக்கடன்கள் வழங்குவதில் ஆலோசனை வழங்கும் அல்லது அதனை மேற்கொள்ளும் கம்பனிகள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பாக இ.பி.ப.ஆ. இன் நியாயாதிக்கங்கள் பரப்பப்படும்.

இதற்கும் மேலாக மூலதனச் சந்தை தவறாளிகளின் செயற்பாட்டின் காரணமாக நட்டமடைந்துள்ள முதலீட்டாளர்களை வெளியே கொண்டுவரும்பொருட்டு அவர்களுக்கெதிராக குடியியல் வலுவளிப்புகள் மற்றும் நிருவாக வழக்குகளைத் தொடர்வதற்கு இ.பி.ப.ஆ. க்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை அறிவிப்பவர்கள் உள்ளடங்களாக முதலீட்டாளர்களது பாதுகாப்பிற்காகவும் மற்றும் முதலீட்டாளர்களது சொத்துக்களைப் பாதுகாக்கும் அதிகாரங்களையும் மேம்படுத்துவதற்காக பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட திருத்தங்களில் நிலைப்பாட்டு பத்திரிகைகள் வருடத்தின் ஆரம்பத்தில் பொதுமக்கள் ஆலோசனைக்காக வெளியிடப்பட்டதுடன் நகல் ஏற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

#### *கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினை பரஸ்பரமற்ற உரித்துடமையுள்ள நிறுவனமாக மாற்றுவதவற்கான நகல் சட்டமூலம்.*

மந்திரி சபையின் பணிப்புரையின்பேரில் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினை ஓர் பரஸ்பரமற்ற உரித்துடமையுள்ள நிறுவனமாக மாற்றுவதற்கான நகல் சட்டமூலமானது சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டு கம்பனிகள் பதிவாளர் நாயகம் மற்றும் கொப.ப. ஆகியவற்றுடன் மேலதிக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. கம்பனிகள் பதிவாளர் நாயகம் மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றின் கருத்துரைகள் மதிப்புக்குரிய சட்டமா அதிபருக்கு அவரது அபிப்பிராயத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அபிப்பிராயத்தின் பெறுகையானது நிலுவையிலுள்ளது.

அதேசமயத்தில் பரஸ்பரமற்ற உரித்துடமையுள்ள நிறுவனமாக மாற்றுவதற்கான செயற்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக ஓர் விஷேட குழுவொன்று ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளது.

#### *ஓர் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக ஆகக்குறைந்த பொதுப் புழக்கத்திற்கான விதிகள்*

இவ்வருடத்தில் மேலே குறிப்பிடப்பட்டதில் நகல் விதிகள் பூர்த்தியாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் இன்னுமோர் பொதுமக்கள் ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

#### *தொடர்புடைய பகுதியினருடனான கொடுக்கல் வாங்கல்களில் விதிகள்*

தொடர்புடைய பகுதியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்களில் நகல் விதிகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைப் பெறும்பொருட்டு ஓர் ஆலோசனைப் பத்திரிகை செப்டம்பர் 2012 இல் சுற்றனுப்பப்பட்டது. இவ் ஆலோசனைப் பத்திரிகையானது தொடர்புடைய பகுதியினரது கொடுக்கல் வாங்கல்களின் பின்வரும் பகுதியினை உள்ளடக்கியிருந்தது.

- தொடர்புடைய பகுதியினரது கொடுக்கல் வாங்கல்கள்களின் பெறுமதியானது நியமிக்கப்பட்ட மட்டத்தினை விஞ்சியிருப்பின் உடனடியாக சந்தைக்கு வெளிப்படுத்தல்.
- தொடர்புடைய பகுதியினரது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டிய ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்கள்.
- அனைத்து தொடர்புடைய பகுதியினரது கொடுக்கல் வாங்கல்களுக்கான சுயாதீனமான அங்கீகாரம்.
- தொடர்புடைய பகுதியினரது கொடுக்கல் வாங்கல்கள்களின் பெறுமதியானது நியமிக்கப்பட்ட மட்டத்தினை விஞ்சியிருப்பின் பங்குதாரர்களது அங்கீகாரம்.
- நிறுவனத்தின் சுயாதீனமான சாதாரண பங்குதாரர்களது விசேட அங்கீகாரமின்றி நிறுவனத்தின் அல்லது அதன் துணைக்கம்பனிகளின் யாதேனும் தொடர்புடைய பகுதியினரிடமிருந்து கணிசமான அளவு சொத்துக்கள் கையகப்படுத்துதலை அல்லது அவர்களுக்கு கணிசமான அளவு சொத்துக்கள் விற்பனை செய்தலை மட்டுப்படுத்துதல்.

### சந்தைப் பங்குபற்றுனர்களை முறைமைப்படுத்தல்

#### *கொ.ப.ப. இன் தன்னியக்க வர்த்தக விதிகளுக்கான (த.வ.வி.) திருத்தங்கள்*

2012 பெப்ரவரியில் அமுல்படுத்தப்பட்ட தன்னியக்க வர்த்தக விதிகளின் (த.வ.வி.) 7ஆம் பதிப்புடன் கொ.ப.ப. இன் நடைமுறையிலுள்ள தன்னியக்க வர்த்தக விதிகளில் (த.வ.வி.) அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன. இவ்விதிகள் உரித்துடமை மற்றும் கடன் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களது வர்த்தகத்திற்கான ஓர் தனித்த வர்த்தக மேடைக்கு வசதியளிக்கின்றது.

#### *பங்குத்தரகர் விதிகள்*

கொ.ப.ப. இன் திருத்தியமைக்கப்பட்ட பங்குத்தரகர் விதிகள் இவ்வருடத்தில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

#### *கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்*

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கொ.ப.ப. இன் திரிசவி பலகையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் காலாண்டு அடிப்படையில் இடைக்கால நிதிக்கூற்றுக்களை வெளிப்படுத்தவேண்டிய

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

தேவைப்பாடானது கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் பட்டியலிடல் விதி இலக்கம் 7.4 இல் ஓர் திருத்தத்தின் மூலம் நீடிக்கப்பட்டது.

- 2012 மார்ச் 31 இல் அமுலுக்குவருமாறு ஓர் உரித்துடமைப் பட்டியல் முறையான "அறிமுகப்படுத்தல்" இடைநிறுத்தப்பட்டது.
- ஆரம்ப பொது வழங்கலின் முன்னர் வழங்கப்பட்ட அனைத்து பங்குகளுக்குமான பூட்டி வைத்தல் காலமானது பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டது:
  - பொதுமக்களுக்கு வழங்குதவற்கு முன்னர் பங்குவழங்கலை முன்னெடுப்பவர்கள் மற்றும் ஏனைய அனைத்து பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படும் பங்குகள் கொ.ப.ப. இல் பட்டியலிடப்படும் திகதியிலிருந்து 09 மாதக் காலப்பகுதிக்கு பூட்டிவைத்திருக்கப்படல் வேண்டும்.
  - ஆரம்ப பட்டியலிடல் விண்ணப்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு முன்னர் ஒரு பொதுக்கம்பனி பங்குகளை ஒதுக்கியிருக்குமாயின் அனைத்து பங்குகளும் கொ.ப.ப. இல் பட்டியலிடப்படும் திகதியிலிருந்து 12 மாதக் காலப்பகுதிக்கு பூட்டிவைத்திருக்கப்படல் வேண்டும்.
- "விற்பனைக்கான கொடைமுனைவு" மூலம் ஒரு கம்பனி பட்டியலிடுவதற்கு விண்ணம் மேற்கொள்ளும்போது தமது உரித்துடமையை ஓர் ஆ.பொ.வ. ஊடாக விற்பனை செய்ய விரும்பும் பங்குதாரர்கள் முதன் முதலாக பட்டியலிடுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து 18 மாதக் காலத்திற்கு முன்னர் அத்தகைய பங்குகளை வைத்திருந்திருத்தல் வேண்டும்.

### இ.பி.ப.ஆ. னால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய பின்வரும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன:-

- கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளில் குறிப்பிடப்பட்ட உருவமைப்பின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தரகர்களது செம்மையாக்கப்பட்ட மூலதனத்தின் மூன்று மடங்கு வரைக்கும் முதலீட்டாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு அனைத்து உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்களுக்கும் அனுமதியளித்தல்.
- உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகுக் கம்பனிகளைச் சேர்ந்த முதலீட்டு ஆலோசகர்கள் கொப.ப. இனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வர்த்தகக் குறியீட்டினை பேணுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். அந்தந்த முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வர்த்தகக் குறியின் கீழ் நிறைவேற்றப்பட்ட அனைத்து வர்த்தகங்களுக்கும் பொறுப்பாளியாக்கப்பட்டுள்ளார்கள்.
- ஓர் அறிமுகத்தின் மூலம் உரித்துடமைப் பட்டியலிடல் தொடர்பான ஏற்பாடுகளை நீக்கிவிடுமாறு கொ.ப.ப. க்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன் இக்குறிப்பிட்ட பணிப்புரையில் விபரித்துள்ளவாறு ஓர் ஆரம்பப் பொது வழங்கலுக்கு முன்னதாக நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து பங்குகளுக்கும் ஓர் "பூட்டிவைத்தல் காலப்பகுதியினை" அறிமுகப்படுத்துமாறு பணிக்கப்பட்டது.
- பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட பங்கு ஆணைப்பத்திரங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வர்த்தகம் மேற்கொள்ளக்கூடிய காலப்பகுதியின் நீடிப்பினை சில நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் மட்டுப்படுத்துமாறு கொ.ப.ப. க்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
- கொ.ப.ப இனால் வடிவமைக்கப்பட்ட ஓர் சூத்திரத்தின் கீழ் பிடிக்கப்படும் பட்டியலிடப்பட்ட பிணையங்களில் விதிக்கப்பட்டுள்ள 10% விலைப் பட்டியை உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் நீக்கிவிடுமாறு கொ.ப.ப. க்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
- 2012 மே 22 இல் இ.பி.ப.ஆ. தேசிய சேமிப்பு வங்கியினால் வரையறுக்கப்பட்ட டெப்ரொபேன் செக்கியூரிட்டிஸ் (தனியார்) பங்குத்தரகரூடாக கொள்வனவு செய்யப்பட்ட த வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. பங்குகள் சம்பந்தமாக சில நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. இக்கொள்வனவின் காரணமாக காப்பக வங்கியினால் ஓர் தீர்ப்பனவு முறிவும் ஏற்பட்டது. இதன் காரணமாக கொ.ப.ப. ஊடாக மேற்கொள்ளப்படும் வர்த்தகங்களுக்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றானது கிரமமாக இயங்குவதனை மேம்படுத்துவதற்காக சில இடைக்கால நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் நிமித்தம் ஏனையவைகளுக்கிடையே கொ.ப.ப. ஆனது பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாறு பணிப்புறுத்தப்பட்டது.

I. குறுக்கிடுதல் பலகையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களின் விலையில் ஓர் உயர் எல்லையை அறிமுகப்படுத்துவதற்காக கொ.ப.ப. இன் தன்னியக்க வர்த்தக விதிகளில் உள்ளவாறான இறுதி விலையிலிருந்து ஒரு பங்கிற்கான விலை வித்தியாசமானது 20% க்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும்;

II. தன்னியக்க வர்த்தக விதிகளின் பொருத்தமான ஏற்பாடுகளில் ஷரத்து 1 இனை ஒன்றிணைப்பதற்காக திருத்தங்களை மேற்கொள்ளுமாறு;

III. தேசிய சேமிப்பு வங்கிக்கு மற்றும் அதன் சார்பில் கொடுக்கல் வாங்கல்கள் பொறுப்பேற்கப்படும்போது ரூபா 20 மில்லியனுக்கு அல்லது அதற்கு அதிகமான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அனைத்து உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்களும் உறுதிப்படுத்தப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானமொன்றை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

IV. தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து காப்பக வர்த்தகங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் ஓர் மூன்றாம் நபர் காப்பக வங்கியினை தேசிய சேமிப்பு வங்கி பயன்படுத்துவதனை உறுதிசெய்யுமாறு வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டமானது (ம.வை. தி.) வேண்டப்பட்டுள்ளது. ம.வை.திட்டமானது அதன் அனைத்து பங்குபற்றுநர்களும் ம.வை.தி. இன் விதிகளுக்கு கடுமையான விதத்தில் அமைவுறுவதனை உறுதிப்படுத்துமாறும் ம.வை.தி. இன் விதிகளிலிருந்து விலகி பின்பற்றும் நடைமுறைகளை தடைசெய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது; மற்றும்

V. அனைத்து உரிமமளிக்கப்பட்ட பங்கத்தரகர்கள் மற்றும் பங்குவர்த்தகர்களது நிறைவேற்று பணிப்பாளர்கள், ஊழியர்கள், துணைவன் துணைவி மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்த பங்குகளை கொள்வனவு செய்த திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் விற்பனை செய்வதனை தடைசெய்யுமாறு கொ.ப.ப. பணிப்புரைக்கப்பட்டது. இத்தடையில் ஆ.பொ.வ. இல்

பங்குக் கொள்வனவுகள், ஊழியர் பங்குத் தெரிவுரிமைத் திட்டங்களின் கீழான உரித்துவம் மற்றும் உரிமை வழங்கல்கள் என்பன விலக்களிக்கப்பட்டுள்ளன.

ஒக்டோபர் 2012 இல் ஆணைக்குழுவானது மேலுள்ள ஷரத்து I, II மற்றும் V ஆகியவற்றினால் அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கியது.

### அங்கீகாரங்கள்

#### *உலகளாவிய, தேச மற்றும் பிராந்திய நிதியங்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரங்கள்*

ம.வை.தி. இன் சிபாரிசிற்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு அமைவுறுதலைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

மீளாய்வாண்டில் 124 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு அங்கீகாரம் வழங்கியதுடன் அங்கீகாரமளிக்கப்பட்ட 37 நிதியங்களின் பெயர் மாற்றங்களையும் ஏற்றுக்கொண்டோம்.

#### *பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளது நிர்வகிப்பு*

1995ஆம் ஆண்டில் உருவானதும் பின்னர் 2003 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டதுமான பொறுப்பேற்புகளும் இணைப்புகளும் நியதிகள், பொறுப்பேற்புகளிலும் இணைப்புகளிலும் அத்தகைய பொறுப்பேற்பின் இலக்கு ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியாயின் பிரயோகிக்கப்படும். இந்த நியதியின் விதிகள் பொறுப்பேற்க முற்படும் கம்பனியின் ஒரே வகுப்பைச் சேர்ந்த சகல பங்குதாரர்களும் சமமான முறையில் கவனிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு முனைகின்றது. இந்நியதியின் விதிகள், பொறுப்பேற்கப்படும் கம்பனியின் பங்குதாரர்கள் இப்பொறுப்பேற்பு தொடர்பான அறிவுபூர்வமான தீர்மானத்தை மேற்கொள்ளும் பொருட்டு போதியளவு தகவல்களும் அறிவுரைகளும் போதியளவு கால அவகாசத்துடன் பரப்பப்படுதலை உறுதி செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது. ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியினை ஓர் கட்டாயக்கொடை, மனமுவந்த கொடை அல்லது பகுதியளவு கொடையின் மூலமாக கையேற்கும் செயற்பாட்டில் நபர்கள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதை நாம் உறுதிசெய்கிறோம்.

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதிகளது ஏற்பாடுகளின்படி பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பொறுப்பேற்பு செயற்பாடு தொடர்பாக சந்தை அறிவித்தல்கள், கொடைமுனை ஆவணங்கள் மற்றும் சுயாதின மதிப்பீட்டு அறிக்கைகள் ஆகியவற்றிற்கு அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றன.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இலங்கையின் கம்பனிகள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமங்களுக்கு அமைவுற்ற 2 கட்டாயக் கொடைகளை நிர்வகித்தது. இவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 08)

*உருவம் 08:* **பொறுப்பேற்புகளும் இணைப்புகளும் நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்**

| பொறுப்பேற்பவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடையின் வகை |
|---|---|---|
| எக்ஸஸ் இன்ஜனியரிங் லிமிட்டட். | சதொச மோட்டர்ஸ் பி.எல்.சி. | கட்டாயக் கொடை |
| பார்க்ஸன் ரீடேல் ஏசியா லிமிட்டட். | ஹொடெல் பி.எல்.சி. | கட்டாயக் கொடை |

2012 ஆம் ஆண்டில் மனமுவந்த அல்லது பகுதிக் கொடைகள் மேற்கொள்ளப்படவில்லை.

#### *இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்*

கொ.ப.ப. இல் பட்டியலிட விரும்பும் அனைத்துப் பொதுக் கம்பனிகளும் ஓர் பரிமாற்றகத்தில் பட்டியலிடுவதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின் அதற்கான எழுத்துமூல முன்னனுமதியைப் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றாலன்றி அப்பங்குகளை பட்டியலிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வருடத்தில் பின்வரும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

- ஓரியன்ட் வைனான்சியல் சேர்விஸஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்
- ஏசியா சியக்க கொமோடிட்டீஸ் லிமிட்டட்
- ரம்பொட வோல்ஸ் லிமிட்டட்
- ஹிக்கடுவ பீச் ரிசோட் லிமிட்டட்
- மிலெனியம் ஹவுசிங் டெவலப்மன்ட் லிமிட்டட்
- சனச டெவலப்மன்ட் வங்கி லிமிட்டட்

#### *இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்*

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. ஓர் திறனான செயல்முறைக்கு வசதியளிக்கும்பொருட்டு இ.பி.ப.ஆ. இன் செயலகத்திற்கு பிரிவு 29 ஏ இன் விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக அதிகாரத்தினைப் பகிர்ந்தளிப்பதற்கான நியமத்தினை உருவாக்கியது. பின்வரும் நிறுவனங்களுக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (உருவம் 09)

*உருவம் 09:* **பட்டியலிடப்படா பிணையங்களை வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட அங்கீகாரங்கள்**

| வழங்குனரின் பெயர் | வழங்களின் தன்மை | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| பீபல்ஸ் லீசிங் கம்பனி பி.எல்.சி. உள்ளூர் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 5,000,000,000/- |
| பீபல்ஸ் லீசிங் கம்பனி பி.எல்.சி. வெளியூர் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | USD 150 மில்லி. |
| எலாயன்ஸ் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. | பொது வழங்கல் | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 1,000,000,000/- |
| இலங்கை வங்கி – வெளியூர் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | USD 500 மில்லி |
| சொவ்ட்லொஜிக் வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 500,000,000/- |
| செலான் வங்கி பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 2,000,000,000/- |
| டீ எவ் சி சி வங்கி பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 3,500,000,000/- |
| சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. III ஆம் வழங்கல் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 356,000,000/- |
| சொவ்ட்லொஜிக் வைனான்ஸ் பி.எல்.சி. – வெளியூர் வழங்கல் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | USD 4 மில்லி. |
| செங்கடகல வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 750,000,000/- |
| டயலொக் ஹக்சியாட்டா பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | மலேஷிய ரிங்கிட் 1.2 பில்லியன் |
| மல்டி வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 200,000,000/- |
| சிலோன் டீ புரோக்கர்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 100,000,000/- |
| பேன் ஏசியா வங்கி பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 750,000,000/- |
| சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. I ஆம் வழங்கல் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 500,000,000/- |
| வெலிபல வைனான்ஸ் பி.எல்.சி. | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 150,000,000/- |
| சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. II ஆம் வழங்கல் | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 644,000,000/- |
| சென்ரல் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. (1ஆம் வழங்கல்) | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 600,000,000/- |
| சென்ரல் வைனான்ஸ் கம்பனி பி.எல்.சி. (1ஆம் வழங்கல்) | தனிப்பட்ட ஏற்பாடு | பட்டியலிடப்படா தொகுதிக்கடன்கள் | 700,000,000/- |

***பங்கு ஆணைப்பத்திரங்கள்-2012 திவாச ஈக்யுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றினால் சிட்ரஸ் லெசர் பி.எல்.சி. இன் புதிய சாதாரண பங்குகளாக மாற்றல்கள்***

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியதியின் விதி இலக்கம் 31(1) (பி)இன் ஏற்பாடுகளுக்கமைய சிட்ரஸ் லெசர் பி.எல்.சி. இன் பங்குதாரர்களுக்கு மேலே குறிப்பிட்ட இரு கம்பனிகளும் கட்டாயக் கொடைமுனைவொன்றை மேற்கொள்வதிலிருந்து விதிவிலக்களிப்பதற்காக இ.பி.ப.ஆணைக்குழுவினால், திவாச ஈக்யுட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் ஆகிய கம்பனிகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### *அவீவா என் டி பி இன்சூரன்ஸ் பி.எல்.சி. இன் உரித்துடைமைக் கட்டமைப்பில் பிரேரிக்கப்பட்ட மாற்றங்கள்*

ஹொங்கொங் நாட்டின் அமெரிக்கன் இன்சூரன்ஸ் அலாயன்ஸ் (அஇஅ) இனால் அவீவா என் டி பி பி.எல்.சி. இன் வாக்குரிமைக் கட்டுப்பாட்டைக் கொண்ட 93% மான பங்குகளை கையகப்படுத்தியதன் நிமித்தம் இ.பி.ப.ஆ. அவீவா என் டி பி இன்சூரன்ஸ் பி.எல்.சி. சிற்றளவு பங்குதாரர்களுக்கு ஓர் கொடைமுனையை மேற்கொள்ளுமாறு அஇஅ நிறுவனத்தை கோரியது.

### *பட்டியலிட்ட பொதுக் கம்பனியொன்றை பட்டியலினின்று நீக்குதல்*

இ.பி.ப.ஆ. இன் விதி இலக்கம் 4 (2) இன் ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் கம்பனியை ஒடுக்குமாறு வழங்கிய கட்டளையைத் தொடர்ந்து இ.பி.ப.ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்மேல் கொ.ப.ப. இன் பிரதான பலகையிலிருந்து பேர்ன் டீ பி.எல்.சி. பட்டியலினின்ற அகற்றப்பட்டது.

### *தளத்திற்கப்பாலான பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அங்கீகாரம்*

இ.பி.ப.ஆ. சட்டத்தின் 28 ஆம் இலக்க (1) ஆம் பிரிவுக்கமைய "அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி அந்த அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வியாபார நடைமுறைகளுக்கு அமைவுற்றாலன்றி அத்தகைய பிணையங்களை வாங்கவோ, விற்கவோ, அன்பளிப்பு செய்யவோ அல்லது வேறொரு முறையில் வியாபாரம் செய்யவோ முடியாது."

மீளாய்வாண்டில் 563 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 335 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், கட்டாயக் கொடைமுனைவு, மனமுவந்த கொடைமுனைவு, பட்டியலிலிருந்து நீக்கல், தனிப்பட்ட கணக்கிலிருந்து கூட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள் தரவு உட்செலுத்துகைத் தவறுகள் போன்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு இந்த அசாதாரணமான மாற்றல்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேற்பார்வை மற்றும் அமைவுறுதல்

அனைத்து முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களதும் வணிக நடத்தை, நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவுறுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் முதலீடு செய்யும் பொதுமக்களைப் பாதுகாப்பதனை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு இ.பி.ப.ஆ. இன் மேற்பார்வைப் பங்களிப்பானது முயற்சிக்கின்றது. இதற்கும் மேலாக நாம் இடர்நோ்கை அடிப்படையான இணக்கப்பாட்டு மீளாய்வுகளை நடாத்துவதுடன் சந்தைப் பங்குபற்றுனர்கள் தங்களது முறைமைப்படுத்தல் கடப்பாடுகளை புரிந்துகொள்வதற்கு உதிவியளிக்கும்பொருட்டு கலந்துரையாடல்களுக்கு வசதியளித்தோம்.

### பட்டியலிடப்பட்ட கம்பனிகளது மேற்பார்வை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் யாவும் நிதியாண்டு நிறைவுற்று ஐந்து மாதங்களுக்குள் ஆண்டறிக்கைகளை தமது பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்திற்கும் (கொ.ப.ப.) சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றன.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து அமைவுறா விடயங்கள் தொடர்பில் கம்பனிகளுக்கு அறிவிக்கின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பதிலளிப்பானது அதீத சாத்தியப்பாடுடையதாகக் காணப்பட்டது.

இச் செயற்பாட்டின் நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் பரப்பப்படும் தகவல்கள் மற்றும் நிதி அறிக்கையிடுதலின் தரம் ஆகியவற்றினை மேம்படுத்தவதாகும். பிணையங்கள் சந்தையில் தெளிவையும் பொறுப்புடைமையையும் நிலை நிறுத்தும்பொருட்டும் தொழில்நெறித் தரம் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கிய தகவல்களை உடனடியாக பரப்புமாறு வேண்டப்படுகின்றன. பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆண்டறிக்கைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன:

- கொ.ப.பரிமாற்றகத்தின் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி.) மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைவுறுதல்
- நிதியியல் எடுத்துக்காட்டுகள்
- தலைவரின் அறிக்கை
- கம்பனி ஆளுகை நடைமுறைகள்
- பணிப்பாளர்களது அறிக்கை
- கணக்காய்வாளர்களது அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதித் தரவுகள்

இவ்வாண்டில் நாம் 98 பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகள் மீளாய்வு செய்து 50 கருத்து தெரிவிப்புக் கடிதங்களை வழங்கினோம்.

### சந்தைப் பங்குபற்றுனர்களுக்கான மேற்பார்வை

#### *பங்கு தரகுத் துறை*

2012 ஆம் ஆண்டில் கொ.ப.ப. இல் சந்தைச் சுட்டிகள் மந்த நிலையிலும் வர்த்தக அளவானது வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டவேளை அனைத்து பங்குத் தரகுத் துறையின் புரள்வு மற்றும் இலாபகரத்தன்மை வீழ்ச்சியடைந்துக் காணப்பட்டது. பங்குத் தரகுத் துறையின் செயற்பாட்டின் ஒப்பீட்டளவு புள்ளிவிபரங்கள் உருவம் 10 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

*உருவம் 10:* **பங்குத் தரகுத் துறையின் நிதியியல் புலப்படுத்தல்கள்**

| | 2012 (ரூபா'000) | 2011 (ரூபா'000) | மாற்றம் % |
|---|---|---|---|
| புரள்வு | **1,921,489** | 5,749,765 | -67% |
| தேறிய தரகுக்கூலி | **1,756,498** | 5,522,411 | -68% |
| செயற்பாட்டு இலாபம் மற்றும் நட்டம் | **(436,094)** | 2,602,612 | -117% |
| ஏனைய வருமானங்கள் | **786,300** | 921,809 | -15% |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | **(557,819)** | 2,389,061 | -123% |
| வரிக்கு பிந்திய தேறிய இலாபம் | **(299,234)** | 1,768,246 | -117% |
| மொத்தச் சொத்துக்கள் * | **10,781,900** | 10,951,135 | -2% |
| மொத்தப் பொறுப்புக்கள் * | **4,308,204** | 4,250,390 | 1% |
| தேறிய மூலதனம் * | **4,926,718** | 3,346,937 | 47% |

**2012/2011 டிசம்பர் 31 இல் உள்ளவை*

*மூலம்: இ.பி.ப.ஆ. க்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்கள்*

இதன் பின்னணியில் பங்குத் தரகுக் கம்பனிகளில் அமுல்படுத்தப்பட்ட கடன் வழங்கல் விதிகள் முக்கிய இடம் பிடித்ததுடன் இவை தீவிரமாக மீளாய்வுசெய்யப்பட்டது. பங்குத் தரகுக் கம்பனிகள் கடன் வழங்குவதில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தும் வேண்டுகோளினை தொடர்ச்சியாக இ.பி.ப.ஆ. இடம் முன்வைத்தன. இ.பி.ப.ஆ. பங்குத் தரகுக் கம்பனிகளின் உத்தியோகத்தர்களுடன் தற்போது நடைமுறையிலுள்ள கடன் வழங்கல் விதிகள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக பல ஆலோசனைக் கூட்டங்களைக் கூட்டியது. இதன் பலனாக 2012 ஒக்டோபரில் இ.பி.ப.ஆ. கடன் வழங்கல் கட்டுப்பாடுகளை பெருமளவில் தளர்த்தியதுடன் தேறிய மூலதனக் கணக்கீட்டிற்கு குறைவான கண்டிப்புடைய வழிகாட்டிகளையும் வழங்கியது.

இதற்கமைய தேறிய மூலதனக் கணக்கிடுதலானது, தற்போதைய சந்தை விலையானது கொள்வனவு விலையிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படுமிடத்து, தீர்ப்பனவு செய்யப்படாத கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலின் கிரயத்திற்கும் சந்தை விலைக்கும் இடையேயுள்ள வித்தியாசமானது கழிக்கப்பட்டு காண்பிக்கப்படும். மேலும் இ.பி.ப.ஆ. 2012 ஜனவரியில் வழங்கப்பட்ட, உரிமம் பெற்ற பங்குத்தரகுக் கம்பனிகளை "செம்மையாக்கப்பட்ட தேறிய மூலதனத்தின்" 3 மடங்கிற்கு கடன் வழங்குவதற்கு அனுமதியளிக்கும் பணிப்புரை தவிர்த்து கடன் வழங்குவதில் உள்ள அனைத்து முன்னைய பணிப்புரைகளையும் ரத்து செய்தது.

எவ்வாறாயினும் முறைமைப்படுத்துபவர் கடன் இடர்நேர்கை வெளிப்படுத்தலை மிகவும் உன்னிப்பாக அவதானிப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டு பங்குத் தரகுக் கம்பனிகளில் ஆகக்குறைந்த அறிக்கையிடல் மட்டும் பதிவுசெய்தல் தேவைப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கமைய கடன் இடர்நேர்கை வெளிப்படுத்தலின் அமைவிடத்துக்கப்பாலான மேற்பார்வையினை பலப்படுத்தும்பொருட்டு இருவாரங்களுக்கொருமுறை கடன் தகவல் அறிக்கையிடல் வடிவமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இ.பி.ப.ஆ. பங்குத் தரகுத் துறைக்கு இடர்நேர்கை முகாமைத்துவ முறை (இ.மு.மு.) மற்றும் பொதுவான தரகர் பின் காரியாலய முறை ஆகியவற்றை அமுல்படுத்துவதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டது. மேற்கூறப்பட்ட முன்னெடுப்பினால் முழுத் துறையின் முறைமைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் இடர்நேர் முகாமைத்துவ வடிவமைப்பு என்பன பலப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### *நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை*

விஸ்தரிக்கப்படும் முறைமைப்படுத்தல் வடிவமைப்பின் காரணமாக இ.பி.ப.ஆ. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையினை விருத்திசெய்வதற்கு உதவும்பொருட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. விசேடித்த ஆ.பொ.வ. நிதியங்களுக்கான முதலீட்டுக் கட்டுப்பாடுகளை தளர்த்தி வைப்பிலிடப்பட்ட சொத்துக்களில் 30% த்தினை ஒரு தனி ஆரம்பப் பொது வழங்கலில் முதலீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

இலங்கையின் மூலதனச் சந்தையின் போட்டித்தன்மையினை மேம்படுத்தும்பொருட்டு இ.பி.ப.ஆ. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளுடனும் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுடனும் ஆலோசனைக் கூட்டங்களைக் கூட்டியது. இந்த முயற்சிகள் புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறையிலுள்ள இ.பி.ப.ஆ. இன் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கான மாற்றங்கள் என்பவற்றை கலந்துரையாடுவதற்கு வசதியளித்தது.

கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் புதிய வடிவமைப்பின் கீழ் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளது நிதிக் கூற்றுகளுக்கான வடிவூட்டத்தினை மீளாய்வு செய்வதற்காக இ.பி.ப.ஆ. ஆலோசித்தது.

2012 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்டத்தினூடாக பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டன. நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சியொன்றின் அலகுகளை மீட்கும்போது எழும் வருமானம் மற்றும் இலாபம் எனபன வருமான வரியிலிருந்து விலக்கப்பளிக்கப்பட்டுள்ளதுடன் நிதிச்சேவைகள் பெறுமதி சேர்ப்பு வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் இரண்டு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளிள் நாம் இடர்நேர்கை அடிப்படையிலான அமைவிடத்து பரிசீலனைகளை மேற்கொண்டோம். அவர்களது நிதி ஸ்திரத்தன்மை போதுமானதாக உள்ளதா, உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைவுற்றிருக்கின்றார்களா, ஆளுகை, தகவல் முறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக முன்மதி, செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ கொள்கைகள் என்பவற்றின் கீழ் பரந்த அளவிலான இடர்நேர்கைப் பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. முகாமைத்துவக் கம்பனிகள் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளது செயற்பாடு தொடர்பான பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுற்றிருப்பதைக் காணக்கூடியதாயிருந்தது.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக்கூற்றுக்களை, இம்முகாமைத்துவக் கம்பனிகள் நிதியியல் ரீதியாக ஸ்திரமான நிலையிருப்பதனையும் இ.பி.ப.ஆ. னால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தேறிய மூலதனத்

தேவைப்பாட்டினை பேணுவதனையும் உறுதிசெய்யும்பொருட்டு, நாம் பரிசீலனை செய்தோம். இதற்கும் மேலாக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளின் திறந்தநிலை மட்டங்கள் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சிக் கோவை, அவற்றின் நம்பிக்கைப் பொறுப்புறுதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணிப்புரைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களுக்குள் இருப்பதனை உறுதிசெய்யும்பொருட்டு நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் மாதாந்த அறிக்கைகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டன.

### *சந்தை இடையீட்டாளர்கள்*

எல்லைக்கடன் வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் தீர்வக இல்லங்கள் ஆகிய ஐந்து வகையான சந்தை இடையீட்டாளர்களுக்கு மூலதனச் சந்தையில் பங்குபற்றுநர்களாக அவர்களது தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்காக பதவீடுகளை வழங்குவதற்கு இ.பி.ப.ஆ. க்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. உரிமமளிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களும் நிதியியல் ரீதியாக ஸ்திரத்தன்மையிலிருப்பதனையும் மற்றும் தொழிற்பாட்டு ரீதியாக நிலைத்திருப்பதனையும் உறுதிசெய்வதற்காக இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்களிப்பானது மூலதனச் சந்தை இடையீட்டாளர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு செய்வதனை உள்ளடக்குகின்றது.

மூலதனச் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி மற்றும் சீர்படுத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு கடந்த சில வருடங்களில் பல முறைமைப்படுத்தல் சீர்திருத்தங்கள் இடம்பெற்றன. இதன் பலனாக அண்ணளவாக 20 புதிய கம்பனிகளுக்கு எல்லைக் கடன் வழங்குநராகச் செயற்படுவதற்கான புதிய பதிவீடுகள் வழங்கப்பட்டு இத்துறையின் எல்லைகள் பரவலாக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் எல்லைக் கடன் வழங்குநர்களில் இ.பி.ப.ஆ. அதன் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு செயல்முறைகளைப் பலப்படுத்தியது. எனவே சம்பந்தப்பட்ட இடர்நேர்கைகளை கண்காணிப்பதற்கும், மட்டுப்படுத்துவதற்கும் மற்றும் முகாமைப்படுத்துவதற்கும் இ.பி.ப.ஆ. னால் மேற்கொள்ளப்படும் இடர்நேர்கை அடிப்படையிலான அமைவிடத்து பரிசீலனைகள் மற்றும் அமைவிடத்துக்கப்பாலான மீளாய்வுகளது எண்ணிக்கை அதிகரித்தது. ஓர் துல்லியமான கண்காணிப்பு முறையினை பிரயோகிப்பதனூடாக உயர்ந்த இடர்நேர்கை செறிந்த நிறுவனங்கள் இனங்காணப்பட்டன. அத்தகைய நிறுவனங்களது உயர்வடையும் இடர்நேர்கை நிலைமைகளை ஓர் கவனமான மேற்பார்வை ஒழுங்கமைப்பை கடைப்பிடிப்பதன் மூலம் எம்மால் மட்டுப்படுத்தக்கூடியதாயிருந்தது.

எல்லைக் கடன் வர்த்தகத்துறையினை ஆக்கபூர்வமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கான ஓர் முன்னெடுப்பாக இ.பி.ப.ஆ. துறைசார் பங்குபற்றுநர்களுடன் அவர்களது அக்கறை மற்றும் பரிந்துரைகளைப் பெறும்பொருட்டு வருடத்தின் இறுதிப் பகுதியில் பல ஆலோசனைக் கூட்டங்களுக்கு வசதியளித்தது. இவற்றை மதிப்பீடு செய்ததன் பின்னர் இ.பி.ப.ஆ. ஓர் நியாயமான, செயற்திறனான மற்றும் ஒழுங்கான சந்தையினை உறுதிப்படுத்தும்பொருட்டு எதிர்வரும் வருடத்தில் சாத்தியப்படக்கூடிய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. பல மூலோபாய முன்னெடுப்புகளில் இறங்கியுள்ளது. (உருவம் 11)

*உருவப்படம் 11:* **சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் புலப்படுத்தல்கள் (2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு)**

| பிரிவு | மொத்தப் புரள்வு (ரூபா) | வரிக்கு முந்திய தேறிய இலாபத்தின் மொத்தம் (ரூபா) | மொத்தச் சொத்துக்கள் (ரூபா) | மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|---|
| எல்லைக் கடன் வழங்குநர் | 369,990,417 | 65,434,417 | 1,915,156,209 | 1,009,364,015 |
| முதலீட்டு முகாமையாளர் | 286,355,825 | (455,791,808) | 13,875,361,683 | 3,201,403,820 |
| ஒப்புரவாளர் | 8,378,670,997 | 7,002,695,254 | 21,915,671,157 | 1,467,550,390 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 70,067,750 | (1,367,558) | 191,363,890 | 23,466,068 |
| பல்நோக்கு நிறுவனங்கள்* | 883,405,895 | 168,267,521 | 8,257,665,160 | 3,050,675,308 |
| **மொத்தம்** | **9,988,490,884** | **6,779,237,826** | **46,155,218,099** | **8,752,459,601** |

* *இலங்கை மத்திய வங்கியினால் முறைமைப்படுத்தப்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், பதிவீடு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேடித்த குத்தகைக் கம்பனிகள் தொடர்பான தகவல்கள் என்பன ஓர் நியாயமான துறைசார் நிலைமையினை வழங்குவதற்காக நீக்கப்பட்டுள்ளன.*

### கண்காணிப்பு, புலனாய்வுகள் மற்றும் அமுலாக்கல்

பயனுள்ள கண்காணிப்பு மற்றும் அமுலாக்கல் என்பன எமது முறைமைப்படுத்தல் செயல்முறையின் முக்கிய அங்கமாவதுடன் அது திட்டத்திலுள்ள முதலீட்டாளர் நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்கும் இறுதியாக துணைபுரிகின்றது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### சந்தைக் கண்காணிப்பு

கொ.ப.ப. இன் வர்த்தக நடவடிக்கைகளை பயனுள்ள விதத்தில் கண்காணிப்பதற்கும் மற்றும் இ.ப.பி.ஆணைக்குழுச் சட்டத்தினை மீறும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வர்த்தகங்களை கண்டுபிடிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் இ.பி.ப.ஆ. பொறுப்பாளியாயுள்ளது. இதன் நடவடிக்கைகளது நோக்கமானது விலைக் கண்டுபிடிப்பு செய்முறையின் நன்னம்பிக்கையுடன் தலையீடு செய்யக்கூடிய நாளாந்த சந்தை நடவடிக்கைகளை கண்காணிப்பதனை உள்ளடக்கும். இக்கண்காணிப்பானது அதி நவீன கண்காணிப்பு முறைமையொன்றைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகள் மெய்நேர அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறையானது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கையினைக் கண்டுபிடித்தவுடன் அறிக்கையிடுகின்றது. கண்காணிப்பு மற்றும் புலன்விசாரணைகள் குழுவிற்கு (குழு) ஓர் ஆலோசனைக்கோரல் தயார்செய்வதன்மூலம் பொருத்தமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் இப்பிரிவானது பல்வேறு விடயங்களில் மொத்தமாக 54 கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களை தயார்செய்தது. இதற்கும் மேலாக இ.பி.ப.ஆணைக்குழு கொ.ப.ப. இடமிருந்தும் 14 ஆலோசனைக் கோரல்களைப் பெற்றுக்கொண்டது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 33 ஆகக் காணப்பட்ட ஆலோசனைக் கோரல்கள் 2012 இல் 54 ஆக அதிகரித்து 64% அதிகரிப்பினை வெளிப்படுத்தியது. ஆலோசனைக் கோரல்களிலுள்ள அதிகரிப்பானது புதிய கண்காணிப்பு முறையின் பூரண அமுலாக்கத்தின் காரணத்தினாலாகும். இம்முறையினால் உருவாக்கப்படுகின்ற விழிப்புள்ள எச்சரிக்கைகள் தவிர, இப்பிரிவுக்குக் கிடைக்கத்தக்க மேலதிக தரவுகள் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகள் என்பன அதிகரித்த கண்டுபிடிப்புகளுக்கும் ஏதேனும் உணரக்கூடிய சந்தை முறைகேடான செயல்களுக்கு சிறந்த விடயங்களை கட்டியெழுப்புவதற்கான ஆற்றலுக்கும் வழிநடத்தியுள்ளது. (உருவம் 12,13)

*உருவம் 12:* **கணக்காணிப்பு ஆலோசனைக் கோரல்கள் 2011-2012**




*உருவம் 13:* **கண்காணிப்பு கண்டுபிடிப்புகளின் வகைப்படுத்தல்**




பெப்ரவரி 2012 இல் கொ.ப.ப. இன் தரமுயர்த்தப்பட்ட தன்னியக்க வர்த்தக முறையின் (தவமு) 7ஆம் பதிப்பு அமுல்படுத்தப்பட்டது. இந்தப் பதிப்பானது இணையத்தள வர்த்தக முறையினைக் கொண்டுள்ள பங்குத்தரகு நிறுவனங்கள் இம்முறையினூடாக 50% மான கட்டளைகளை உருவாக்குவதற்கு வசதியளித்தது. இதன்காரணமாக கொ.ப.ப. இல் இணையத்தள வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன. அத்துடன் இப்புதிய த.வ.மு. ஆனது அற்பமான பங்குப் பலகையினை பிரதான பலகையுடன் இணைத்ததுடன் அற்பமான பங்குகளது வர்த்தகமானது வழக்கமான பலகையினூடாக நடைபெறுவதற்கு வசதியளிக்கின்றது.

இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் தலைமை வகிக்கும் குழுவானது இவ்வாண்டில் 29 தடவைகள் கண்காணிப்பு விடயங்களுடன் புலன்விசாரணை அறிக்கைகளையும் கலந்தாலோசிப்பதற்காகக் கூடியது. மீளாய்வாண்டில் சில வர்த்தகர்கள், தரகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சந்தைப் பங்குபற்றுனர்களுக்கெதிராக பல்வேறு சந்தேகத்திற்கிடமான சந்தை முறைகேடான செயல்களில் பல்வேறு அமுலாக்கல் நடவடிக்கைகளைத் தீர்மானித்தது. குழுவானது சிறிய தவறாளிகளை அழைப்பித்து எதிர்காலத்தில் அத்தகைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை தவிர்க்குமாறு எச்சரிக்கை விடுத்தது. அத்தகைய பகுதியினருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*உருவம் 14:* **அமுலாக்கல் நடவடிக்கைகள்**

| அமுலாக்கல் நடவடிக்கைகள் | எண்ணிக்கை |
|---|---|
| தரகர்கள் / வர்த்தகர்களை அழைப்பித்தமை | 13 |
| முதலீட்டாளர்களை அழைப்பித்தமை | 2 |
| முதலீட்டாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், அவர்களது இணையத்தள வர்த்தக வசதியினை நிறுத்துமாறு தரகரை நிர்ப்பந்தித்தமை | 8 |
| பங்கிலாப அறிவிப்பு / நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முன்னர் பங்குகளில் வர்த்தகம் மேற்கொண்ட பகுதியினரிடமிருந்து விளக்கம் கோரியமை | 9 |
| ஏனைய தரப்பினரிடமிருந்து தெளிவுரையைக் கோரியமை | 1 |
| சிறு விடயங்களில் தரகர்கள் /முதலீட்டாளர்கள்/கொ.ப.ப. இடமிருந்து தெளிவுரை கோரியமை | 1 |
| குழுவின் அக்கறையை வெளிப்படுத்தியமை | 2 |

இணையத்தளம் மூலமாக வர்த்தகம் மேற்கொண்ட சில முதலீட்டாளர்களை முதலாம் தருணத்தில் பொருத்தமற்ற வர்த்தக போக்கிற்கெதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டு அது தொடருமாயின் அவர்களது பங்குத்தரகர்களை இணையத்தள வர்த்தக வசதியினை நிறுத்திவிடுமாறு குழு நிர்ப்பந்தித்தது. மொத்த ஆலோசனைக் கோரல்களில் 8 விடயங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் புலன்விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

குழுவின் அறிவுறுத்தலின் கீழ் இ.பி.ப.ஆ. சந்தேகத்திற்கிடமான சந்தைத் துர்ப்பிரயோகங்களில் ஈடுபட்டிருந்த சில பகுதியினரிமிருந்து விளக்கங்களைக் கோரியது. எப்போதாவது நாம் உடனடியான கவனம் தேவைப்படுமிடத்து பங்குத்தரகர்களை (அல்லது கொ.ப.ப.) அழைத்து சிறு விடயங்களில் வாய்மூலமான தெளிவுபடுத்தல்களை கோரும்போது அதற்காக ஒரு பதிவேடு பேணப்படுகின்றது.

2012 இல் புதிய கண்காணிப்பு முறையானது முழுவதுமாகத் தொழிற்பட்டது. புதிய திட்டத்தின் அதி முக்கியமான அம்சங்களுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### *நேரடி*

- பங்குத் தரகர்கள் மற்றும் வர்த்தக அங்கத்தவர்களது தெளிவான வளமாக்கப்பட்ட பல்வேறு பரிமாணத் தோற்றங்கள் ஒரே பார்வையில் அனைத்து தேவையான தகவல்களும் கிடைக்கப்பெறுவதனால் சந்தைக் கண்காணிப்பாளர்களை சந்தையை ஆழ்ந்து பரிசோதனை செய்வதற்கு அனுமதிக்கின்றது.
- காட்சியளிக்கப்படும் தரவுகளை முகாமைப்படுத்துவதற்கு பரவலான வகைப்படுத்தல், தேடுதல் மற்றும் வடிகட்டல் போன்ற தெரிவுகள் கிடைக்கப்பெறுகின்றது.
- அசாதாரணமான வர்த்தகப் போக்குகள் கண்டுபிடிக்கப்படும்போது மெய்நேர போக்கின் பகுத்தாராய்வின் அடிப்படையில் உருவாக்கப்படும் விழிப்புள்ள எச்சரிக்கைகள் மற்றும் ஓர் குறிப்பிட்ட காலத்தில் இடம்பெற்ற சந்தை நடவடிக்கைகளை மீளாய்வு செய்தவற்காக பயன்படுத்துபவர்கள் ஆழமாக ஊடுருவி சந்தையை மறுபடி போட்டுப் பார்க்கும் தொழிற்பாட்டினை நேரடியாக அணுகுவதற்கும் முடியும்.

### *புலன்விசாரண முகாமையாளர்*

- புலன்விசாரண முகாமையாளர் போக்குகள் அறிக்கைகளை பேணுவதுடன் மெய்நேரமற்ற போக்கின் அகழ்விற்கும் வசதியளிக்கின்றது.
- இம்முறையில் பலனுள்ள அறிக்கை முகாமைத்துவ திறமைகள் வழங்கப்படுவதுடன், அத்தகைய அறிக்கைகள் விடயங்களுடன் இணைக்கப்படலாம் அல்லது எதிர்கால பார்வைக்காக ஓர் அறிக்கை களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்படலாம்.

### *சந்தையை மீளப் போட்டுப்பார்த்தல்*

- கண்காணிப்பு ஊழியர்கள் கண்டுபிடிக்கப்பட்ட போக்கினை விசாரணை செய்வதற்காக உடனடியாக ஆழ ஊடுருவி சந்தை நடவடிக்கைகளை மீளப் போட்டுப் பார்க்க முடியும் அல்லது வரலாற்று ரீதியான தரவுகளை மீளப் போட்டுப் பார்க்க முடியும்.
- இம்முறையானது ஓர் தனிப்பட்ட அல்லது பலதரப்பட்ட கருவிகளை ஒரே நேரத்தில் மீளப் போட்டுப் பார்க்க அனுமதிக்கின்றது.

### *முறையின் முகாமையாளர்*

- இப்பிரயோகமானது இம்முறையின் நிர்வாகச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துகின்றது.

### *பின்புற தரவுத்தள முகாமைத்துவம்*

புதிய முறையின் வெற்றிகரமான அமுலாக்கலுக்கும் அதிகமாக நாம் எமது தரவுகளின் களஞ்சியப்படுத்தலையும் மேம்படுத்தினோம். முன்னைய ஒழுங்கின் கீழ், ஆறு மாதங்கள் பழமை வாய்ந்த வர்த்தகத் தரவுகள் மாத்திரமே மெய்நேர அடிப்படையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. கொடுக்கப்பட்ட எந்த நேரத்திலும் ஆறு மாதங்களுக்குள்ளான சந்தை நடவடிக்கைகள் மாத்திரமே உடனடியாக மீள போட்டுப் பார்க்கக்கூடியதாயிருந்தது. மீளாய்வாண்டில் ஒரு வருடத்திற்கும் அதிகமான பழைய வர்த்தகத் தரவுகள் சுருக்கப்பட்டு மெய்நேர அடிப்படையில் பத்திரப்படுத்தப்பட்டது. இக்காலப் பகுதிக்கும் மேலான வர்த்தகத் தரவுகள் தரவுநாடாக்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு அவை மெய்நேரமற்ற ஓர் பின்கோப்பாகக் கருதப்படுகின்றது.

### புலனாய்வுகள்

புலனாய்வானது மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துபவர் என்ற இ.பி.ப.ஆணைக்குழுவினது பங்களிப்பின் முக்கியமான தோற்றத்தினை உண்டாக்குகின்றது. சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தை சந்தர்ப்பங்களில் விரைவான மற்றும் பயனுள்ள புலனாய்வினை நடத்துவதானது ஓர் ஒழுங்கான மற்றும் நியாயமான மூலதனச் சந்தையைப் பேணுவதற்கும், முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையை ஊக்குவிப்பதற்கும் இதனால் இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திப் பங்களிப்பிற்கும் சேவையாற்றுகின்றது. இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவுறும் வண்ணம் 2012 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. சந்தேகத்திற்கிடமான சந்தை முறைகேடான செயல்களது விடயங்களில் தொடர்ந்தும் புலனாய்வுகளை மேற்கொண்டு அவை தொடர்பாக பொருத்தமான அமுலாக்கல் நடவடிக்கைகளை சிபாரிசு செய்தது. இதன்மூலமாக சந்தையில் உயர் மட்டத்திலான தொழில்சார் நடத்தை மற்றும் கம்பனிசார் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும் சந்தை இடையீட்டாளர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களது எதிர்கால அத்துமீறல்களையும் தடுக்கக்கூடியதாயுள்ளது.

2012 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆணைக்குழுவினால் சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகள், சந்தை / விலைக் கையாளுகை உள்ளடங்களாக, உள்ளுறைபவர் வர்த்தகம், முன்னோடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மொத்தமாக பத்தொன்பது புலனாய்வுகள் நடாத்தப்பட்டன.

மீளாய்வாண்டானது இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் /ஒழுங்குவிதிகளின் கீழ் இழைக்கப்பட்ட தவறுகள் /ஒழுங்கீனங்கள் தொடர்பாக இ.பி.ப.ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பல அமுலாக்கல் நடவடிக்கைகளைக் கண்டது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

இது தொடர்பில் முக்கியமானதாக இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் மூன்று முதலீட்டாளர்களுக்கு சந்தேகத்திற்கிடமான சந்தை / விலை கையாளுகையில் நடாத்தப்பட்ட புலனாய்வினைத் தொடர்ந்து வழங்கப்பட்ட எச்சரிக்கைகள் காணப்படுகின்றன. இவற்றின் முடிவில் கையாளுகை வர்த்தகம் எந்தப் பங்குத் தரகுக் கம்பனியூடாக நிறைவேற்றப்பட்டதோ அதுவும் இ.பி.ப.ஆணைக்குழுவினால் எச்சரிக்கப்பட்டது.

சந்தேகத்திற்கிடமான ஓர் முன்னோடுதல் விடயத்தில் இ.பி.ப.ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட மற்றுமோர் புலனாய்வினைத் தொடர்ந்து இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் எச்சரிக்கப்பட்டு அந்த எச்சரிக்கைகள் இ.பி.ப.ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டன.

2012 இல் நடாத்தப்பட்ட மொத்தப் புலனாய்வு எண்ணிக்கைகளில் இரண்டு புலனாய்வுகள் வருடம்பூராவும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஏனெனில் இப்புலனாய்வுகள் தொடர்பான விடயங்கள் நிலுவையிலுள்ள வழக்காடலின் தலைப்பு விடயமாகக் காணப்பட்ட காரணத்தினாலாகும்.

குறிப்பிட்ட புலனாய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் ஆகியவற்றின் விளக்கங்கள் மற்றும் ஓர் சுருக்கமான விபரம் உருவம் 15 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

*உருவம் 15:* **புலனாய்வுகளின் விபரங்கள்**

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம்[1] | 4 | ■ மீளாய்வாண்டில் சந்தேகத்திற்கிடமான உள்ளுறைபவர் வர்த்தகத்தில் நான்கு புலனாய்வுகள் நடாத்தப்பட்டன.<br>■ வருடத்தின் இறுதியில் அத்தகைய ஒரு புலனாய்வு அறிக்கையானது ஏற்கனவே முடிவுறுத்தப்பட்டதுடன் ஏனைய மூன்று விடயங்களும் அறிக்கை தொகுக்கப்படும் நிலையில் உள்ளன. |
| சந்தை / விலை கையாளுகை[2] | 11 | ■ ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு விடயத்தில் இ.பி.ப.ஆ. விசாரணைகளை மேற்கொள்ள இயலுமா எனத் தீர்மானிப்பதற்காக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை 2007 ஆம் ஆண்டில் நாடியிருந்தோம். மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் வழக்காடுதல் நிறைவுறும்வரை இந்த விசாரணைகளை இடைநிறுத்தும்படி ஆலோசனை வழங்கினார். எனவே இவ்விடயம் 2012 ஆம் ஆண்டு முழுவதும் இடைநிறுத்தப்பட்டது.<br>■ 2012 ஆம் ஆண்டில் ஓர் சந்தை / விலைக் கையாளுகைப் புலனாய்வு நிறைவுற்றதன் பின்னர் இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் எச்சரிக்கப்பட்டு அவ் எச்சரிக்கைகள் பிரசுரிக்கப்பட்டன. இதே விடயத்தின் கண்டுபிடிப்பினை அடிப்படையாகக் கொண்டு மூன்று முதலீட்டாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இக்கையாளுகை வர்த்தக நடவடிக்கை எந்த பங்குத்தரகரூடாக இடம்பெற்றதோ அப்பங்குத் தரகுக் கம்பனிக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.<br>■ மீளாய்வாண்டில் சந்தேகத்திற்கிடமான சந்தை /விலைக் கையாளுகையில் வேறு நான்கு புலனாய்வுகள் எவ்வித அமுலாக்கல் செயற்பாடுமின்றி முடிவுறுத்தப்பட்டது. இதில் தொடர்புபட்ட முதலீட்டாளர்கள் மற்றும் /அல்லது முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக ஏதேனும் கையாளுகை நடத்தையினை சட்டரீதியாக நிலைநிறுத்துவதற்கான ஆவணங்கள் / சாட்சிகள் இல்லாமையினாலாகும். எவ்வாறாயினும் உள்ளுறைபவர் வர்த்தம் தொடர்பான ஒரு விடயமானது வருட இறுதியில் நிலுவையிலுள்ளது.<br>■ ஒரே கூட்டணியைச் சேர்ந்த முதலீட்டு ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்ட சந்தேகத்திற்கிடமான சந்தை /விலை கையாளுகை நடவடிக்கை தொடர்பாக கிடைக்கப்பெற்ற ஒன்பது கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்கள் சம்பந்தமாக ஒரு பரவலான புலனாய்வு நடாத்தப்பட்டது. இவ்விடயமானது அறிக்கை தொகுக்கப்படும் நிலையிலுள்ளது.<br>■ 2012 ஆம் ஆண்டின் இறுதியில் சந்தேகத்திற்கிடமான சந்தை / விலைக் கையாளுகையில் மேலே குறிப்பிட்ட ஒன்று உள்ளடங்களாக ஐந்து புலனாய்வுகள் நிலுவையிலுள்ளன. |

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| முன்னோடுதல்[3] | 02 | ■ 2012 ஆம் ஆண்டில் நிறைவுற்ற முன்னோடுதல் புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இரண்டு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் அவ் எச்சரிக்கை பிரசுரிக்கப்பட்டது.<br>■ மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு புலனாய்வு நிலுவையிலுள்ளது. |
| ஒரு பங்குத்தரகுக் கம்பனியினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பான சந்தேகத்திற்கிடமான முறைகேடான நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு | 01 | ■ இவ்விடயமானது மீளாய்வாண்டிற்குள் முடிவுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயலகம் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறு இவ்விடயம் தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் முறைப்படியான அபிப்பிராயத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.<br>■ வருடத்தின் இறுதியில் இம்முறைப்படியான அபிப்பிராயமானது இன்னும் நிலுவையிலுள்ளது. |
| முறைப்பாடுகள் | 01 | ■ ஒரு முறைப்பாடு தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஓர் வழக்காடல் பூர்த்தியாகும்வரை இடைநிறுத்தப்பட்டன. ஏனெனில் இம்முறைப்பாட்டின் சில காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்காடலின் தலைப்பு விடயமாகக் காணப்பட்டதாலாகும்.<br>■ சாட்டியுரைக்கப்பட்ட சந்தை துர்நடத்தை தொடர்பான முறைப்பாடுகள் இ.பி.ப.ஆணைக்குழுவினால் பெறப்பட்டு அவை மதிப்பிடப்படுகின்றன. |

இப்பிரிவானது மீளாய்வாண்டில் 14 முறைப்பாடுகளை கையாண்டு தீர்த்து வைத்தது.

1 *ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், அக்குறிப்பிட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும் சமயம் வர்த்தகம் மேற்கொள்ளல்.*

2 *ஓர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களது விலை அல்லது வர்த்தகம் தொடர்பாக ஓர் பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றப்பாட்டினை உருவாக்குதல்.*

3 *ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த கம்பனியின் பிணையங்களில் கணிசமான அளவு கொள்வனவு அல்லது விற்பனைக்கு முன்னர் ஒரு கம்பனியின் பிணையங்களில் வர்த்தகத்தினை மேற்கொண்டு அதன் பின்னர் இலாபமடையும் நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட பிணையங்களில் வர்த்தகம் செய்தல்.*

### வழக்காடல்கள்

**இ.பி.ப.ஆ. எதிர் திரு. பி.ஏ.ஜயசேகர மற்றும் ஏனைய எண்மர்** S/64721/2006

ஒன்பது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நவலோக ஹொஸ்பிட்டல் பி.எல்.சி. பங்குகள் தொடர்பாக சந்தைக் கையாளுகைக்காக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். முன்னதாக ஆணைக்குழுவானது நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபரின் அனுமதியுடன் 01ஆம், 02ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் மற்றும் 08ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு ஒவ்வொருவரும் ஆணைக்குழுவின் நட்டஈட்டு நிதியத்திற்கு தண்டப்பணம் செலுத்தியதன் பின்னர் ஒத்திணங்கப்பட்டது. மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் அறிவுரையின் பிரகாரம் 03 ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டதற்கமைய அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டன.

09ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பாக வழக்கின் விளக்கமானது நிலுவையிலுள்ளது.

**மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் எதிர் இ.பி.ப.ஆ.** H.C.M.C.A. 217/2007 மற்றும் S.C. (மேன்முறையீட்டிற்கான விசேட அனுமதி) 194/2011

இ.பி.ப.ஆணைக்குழு கம்பனிக்கும் அதன் பணிப்பாளர்களுக்கும் எதிராக இ.பி.ப.ஆ. இன் விதிகளுக்கு முரணாக சில முக்கிய தகவல்களை சந்தைக்கு உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை தாக்கல் செய்தது. மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் 2001 இல் ஒத்திணங்கப்பட்டன. அறிவுபடைத்த நீதிவான் அவர்கள் சுருக்க விளக்கத்தின் பின்னர் 03ஆம், 05ஆம், 06ஆம் மற்றும் 08ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குற்றச்சாட்டெண்ணுக்கும் தலா ரூபா 2.5 மில்லியன் அபராதமும் தண்டனைத் தீர்ப்பாக ஒவ்வொருவருக்கும் இரண்டு வருட சிறை வாசத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது தீர்ப்புக்கும் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். மாகாண மேல்நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதிபதி அவர்கள் இவ்விடயத்தில் ஓர் இணக்கமாக 03ஆம், 05ஆம் மற்றும் 08ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை உறுதிப்படுத்தி இரண்டு குற்றச்சாட்டெண்களுக்கும் தலா ரூபா 3 மில்லியனை குற்றப்பணமாக விதித்தார். அறிவுபடைத்த நீதிவான் அவர்களால் சுமத்தப்பட்ட சிறைவாசத் தண்டனையானது ஒதுக்கிவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் 06ஆவது குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளர் நீதிவான் நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிராக அவரது மேன்முறையீட்டினை தொடர்கின்றார். இ.பி.ப.ஆ. 06ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளர் குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிராக சமர்ப்பித்த இரண்டு மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பாக ஆட்சேபனையை எழுப்பியது. மாகாண மேல்நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதிபதி அவர்கள் இ.பி.ப.ஆ. இன் முதனிலை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு 06ஆவது குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளர் அறிவுபடைத்த நீதிவான் அவர்களது தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரான அவரது மேன்முறையீட்டினை தொடரலாம் எனத் தீர்மானித்தார்.

அதன்பின்னர் 06ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளர் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் இ.பி.ப.ஆணைக்குழுவின் முதனிலை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். உயர்நீதிமன்றமானது இவ்விடயத்தில் மேன்முறையிடுவதற்கு விசேட அனுமதியினை வழங்கியது.

இவ்விண்ணப்பம் நிலுவையிலுள்ள சமயம், உயர் நீதிமன்றமானது இன்னுமோர் வழக்கில் ஓர் ஒத்த விடயத்தில் இவ்வழக்கின் தலைப்பு விடயமான அதே சட்டப்பிரச்சனையை ஏற்றுக்கொண்டது. இதன் காரணமாக உயர் நீதிமன்றமானது அறிவுபடைத்த மேல்நீதிமன்றத்தின் நீதிபதியின் கட்டளையை தள்ளிவைத்து 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளர் தொடர்பாக நீதிவானது தீர்ப்பு மற்றும் தண்டனைத்தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான மேன்முறையீட்டு மனுவை கேட்குமாறு மேல் நீதிமன்றத்தினை பணிப்புறுத்தினார்.

6ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

### *இ.பி.ப.ஆ. எதிர் மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் ஏனையோர்* S/72082/2010, S/72083/2010

31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான இ.பி.ப.ஆணைக்குழுவின் விதி இலக்கம் 3(1) மற்றும் 17க்கு முரணாக கம்பனியின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியமைக்காக மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இவ்விடயமானது நீதிவான் நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ளது.

### *மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய 10 பேர்கள், மே.நீ.(ஆணை விண்ணப்பம்)* 127/2012

2012 பெப்ரவரி அளவில் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு அது 2011 செப்டம்பர் 13 இல் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் 2% க்கும் அதிகமான வாக்குரிமைக் கட்டுப்பாடுள்ள பங்குகளைக் கொள்வனவு செய்தபோது கம்பனிகள் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் விதி இலக்கம் 31 (1) (பி) ஐ தூண்டியதாக அறிவித்தது. கம்பனியானது பெப்ரவரி 2012 இல் சந்தைக்கு விடுத்த அதன் அறிவித்தலில் ஓர் கருதாப் பிழையின் காரணமாக கொடைமுனைவை மேற்கொள்ளத் தவறியதாகக் குறிப்பிட்டது. அத்துடன் அது கட்டாயக் கொடைமுனைவை மேற்கொள்ளவும் மற்றும் கொடைமுனைவு விலையைத் தீர்மானிப்பதற்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை நாடியது. 2012 பெப்ரவரி 15 இல் கம்பனியானது லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் 2% க்கும் அதிகமான கட்டுப்பாடுள்ள இன்னுமோர் பங்குப் பொதியினைக் கொள்வனவு செய்தது.

மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டானது லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் பங்குகளின் கொள்வனவு தொடர்பாக மில்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) லிமிட்டட் மற்றும் டிஸ்டிலரீஸ் கம்பனி ஒவ் ஸ்ரீலங்கா பிஎல்சி ஆகியவற்றுடன் கூட்டிணைந்து செயற்பட்டதாகக் கோரியது. அத்துடன் அவர்கள் 2011 செப்டம்பர் 12 இல் 36.27% மான திரட்டிய உரித்துவத்தினையும் 2011 செப்டம்பர் 13இல் 41.27% த்தினையும் கட்டுபாட்டினுள் வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். 2012 பெப்ரவரி 15 இல் மெல்ட்ஸாகோர்ப் மேலும் 8.85% மான லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் பங்குகளைக் கொள்வனவு செய்தது.

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் விதி இலக்கம் 31(1) (பி) ஆனது ஒரு நபர் இன்னும் வேறு நபர்களுடன் கூட்டிணைந்து ஒரு கம்பனியின் வாக்களிக்கும் உரிமையில் 30% க்கும் 50% க்கும் இடையே வைத்திருப்பார்களாயின், அந்த நபர்கள் ஏதேனும் 12 மாதக் காலப்பகுதியில் ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் 2% க்கும் அதிகமான வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ள மேலதிகமான பங்குகளைக் கொள்வனவு செய்திருப்பார்களாயின் அவர்கள் ஓர் கட்டாயக் கொடைமுனைவை மேற்கொள்ளவேண்டும்.

ஆணைக்குழுவானது கட்டாயக் கொடைமுனைவை மேற்கொள்வதற்கு கம்பனி அவர்களது சொந்த பிரகடனத்தின் பிரகாரம் தவறியமையைக் கருத்திற்கொண்டு, கம்பனியானது பின்வருமாறு கட்டாயக்கொடைமுனைவை மேற்கொள்ளவேண்டுமென 2012 மார்ச் 5 இல் தீர்மானித்தது. அதாவது 2011 செப்டம்பர் 13 இல் உள்ளவாறான லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் அனைத்து பங்குதாரர்களுக்கும் மற்றும் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட்டுடன் ஒன்றிணைந்து செயற்படும் நபர்கள் தவிர்ந்த லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் அனைத்து நடைமுறையிலுள்ள பங்குதாரர்களுக்கும் என தீர்மானித்தது. ஆணைக்குழுவானது யாரேனும் பங்குதாரர்கள் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் பங்குகளை 2011 செப்டம்பர் 13 முதல் 2012 பெப்ரவரி 15 வரையான காலப்பகுதியில் (கொடைமுனைவு விலை) ரூபா 105/=க்கும் குறைவான விலையில் விற்றிருப்பார்களாயின் யாருக்கு பங்குகள் விற்கப்பட்டது என்பதனை கருத்திற்கொள்ளாது மிகுதிப் பணத்தை மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் பங்குதாரர்களுக்கு செலுத்தவேண்டுமென்று பணிப்புரை விடுத்தது. எவ்வாறாயினும் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் இ.பி.ப.ஆணைக்குழுவின் மேற்கூறப்பட்ட பணிப்புரையினை அமுல்படுத்தத் தவறியது.

மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் ஏனையவற்றுக்கிடையில் 2012 மார்ச் 05 திகதியிடப்பட்ட கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட இ.பி.ப.ஆணைக்குழுவின் தீர்மானத்தினை, அதாவது 2011 செப்டம்பர் 13 முதல் 2012 பெப்ரவரி 15 வரையான காலப்பகுதியில் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் ஏதேனும் பங்குகளை விற்பனை செய்த லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் பங்குதாரர்களுக்கு கம்பனியினால் மிகுதித் தொகையினைச் செலுத்தவேண்டும் என்பதனை, நீக்குவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இ.பி.ப.ஆ. மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களை எதிர்வாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு ஓர் ஆணையை மற்றும் /அல்லது உறுதிகேள் பேராணையைக் கோரி ஓர் ஆணை விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தது.

இந்த விடயமானது நிலுவையிலுள்ள சமயம், இ.பி.ப.ஆ. மெல்ட்ஸ ாகோர்ப் லிமிட்டட் மற்றும் ஏனைய ஒன்பது பேர்களுக்கெதிராக பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் விதி இலக்கம் 31(1) (பி) ஐ மீறியமைக்காக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது.

### *இ.பி.ப.ஆ. எதிர் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் மற்றும் ஏனைய ஒன்பது பேர்* S/74140/2012

2012 ஜுன் 13 திகதியிடப்பட்ட முறைப்பாட்டின் மூலம் இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் மற்றும் அதன் பணிப்பாளர் சபைக்கெதிராக, 2011 செப்டம்பர் 13 இல் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் 2% க்கும் அதிகமான வாக்களித்தல் கட்டுப்பாடுடைய பங்குகளின் கொள்வனவு தொடர்பாக, பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் விதி இலக்கம் 31(1) (பி) ஐ மீறியமைக்காக வழக்கு தாக்கல் செய்தது.

நீதிவான் நீதிமன்றத்தின் முன்னால் இவ்விடயம் நிலவையிலுள்ளது.

மேற்கூறிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், மெல்ட்ஸ ாகோர்ப் லிமிட்டட் இ.பி.ப.ஆணைக்குழுவின் 2012 மார்ச் 05 திகதியிடப்பட்ட தீர்மானத்திற்கு அமைவுறுவதற்கு உடன்பட்டு விடயத்தை இணக்குவதற்காக ஆணைக்குழுவுக்கு ஓர் விண்ணப்பத்தினை மேற்கொண்டது.

ஆணைக்குழுவானது 2012 மார்ச் 05 திகதியிடப்பட்ட இ.பி.ப.ஆணைக்குழுவின் தீர்மானத்தினை மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் முதலில் அமுலாக்குவதற்கு அமைய விடயத்தை இணக்குவதற்கு உடன்பட்டது. எவ்வாறாயினும் மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் வழக்கு இலக்கம் 127/2012 மேநீ (ஆணை விண்ணப்பம்) இனை வாபஸ் வாங்கியிருந்தும் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு வழங்கிய ஓர் உறுதிமொழிக்கு அமைய 2012 மார்ச் 05 திகதியிடப்பட்ட இ.பி.ப.ஆணைக்குழுவின் தீர்மானத்தினை அமுல்படுத்தத் தவறியது. இதற்குப் பதிலாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேநீ ஆணை 204/2012 இனை 2012 மார்ச் 05 திகதியிடப்பட்ட இ.பி.ப.ஆணைக்குழுவின் தீர்மானத்தினை நீக்கிவிடுமாறு ஏனையவற்றுக்கிடையில் ஓர் உறுதிகேள் பேராணையை இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்தது.

### *மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் எதிர் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனைய 3 பேர்கள், மே.நீ. (ஆணை விண்ணப்பம்) 204/2012*

மெல்ட்ஸாகோர்ப் லிமிட்டட் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர் விண்ணப்பத்தினை பின்வரும் அடிப்படையில் தாக்கல்செய்தது. லங்கா மில்க் வுட்ஸ் (சி.டபிள்யு.ஈ) பிஎல்சி இன் முகாமைத்துவக் கட்டுப்பாட்டினை கம்பனியானது ஏற்கனவே வைத்துள்ளதனால் லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி இன் பங்குதாரர்களுக்கு ஓர் கட்டாயக் கொடைமுனைவை பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் விதி இலக்கம் 31(1)(பி) இன் கீழ் மேற்கொள்வதற்கு கம்பனியானது பொறுப்புடையதல்ல என்ற அடிப்படையில் செய்யப்பட்டது.

இ.பி.ப.ஆ., லங்கா மில்க் வுட்ஸ் பிஎல்சி, டிஸ்டிலரீஸ் கம்பனி ஒவ் ஸ்ரீலங்கா பிஎல்சி மற்றும் மில்போட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) லிமிட்டட் ஆகியன முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தார்கள்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் விடயமானது நிலுவையிலுள்ளது.

### *இ.பி.ப.ஆ. எதிர் டச்வுட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்* C.A. *(ஆணை விண்ணப்பம்)* 323/2007 *மற்றும்* S.C. *விண்ணப்பம்.* 100/2011

கம்பனியானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இ.பி.ப.ஆ. மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (இககநிகச) ஆகியவற்றிற்கெதிராக இககநிகச வின் தீர்மானம் மற்றும் இ.பி.ப.ஆணைக்குழுவினால் 2007 மார்ச் 09 திகதியிடப்பட்டு கம்பனிக்கு வழங்கப்பட்ட பணிப்புரை ஆகியவற்றை நீக்குமாறு உறுதிகேள் பேராணையை பெறுவதற்காக விண்ணப்பமொன்றைத் தாக்கல் செய்தது. இ.பி.ப.ஆணைக்குழுவின் பணிப்புரையானது கம்பனியை அதன் 2005 மார்ச் 31 மற்றும் 2006 மார்ச் 31 ஆகிய நிதியாண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களை சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் 41 இற்கு ஏற்ப கிரய அடிப்படையில் தயாரிக்குமாறு வேண்டியது.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது கம்பனிக்கு எதிரான இககநிகச வினது தீர்மானத்தை நீக்கி மனுதாரர் கம்பனிக்குச் சார்பாக ஓர் உறுதிகேள் பேராணையை வழங்கியது. இககநிகச மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளதுடன் இவ்விடயமானது உயர்நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் முடிவானது இ.பி.ப.ஆணைக்குழுவுக்கெதிரான வழக்கில் விளைவை ஏற்படுத்துமென்பதால் மேன்முறையீட்டு நீதிமன்றமானது இ.பி.ப.ஆணைக்குழுவுக்கெதிரான வழக்கை இககநிகச வினால் தாக்கல்செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவு வரும்வரை ஒதுக்கி வைத்தது.

### *என்.டி.பி. எதிர் வாஸ்ட் கிரேன் இன்டர்நெஷனல் லிமிட்டட், சிங்கப்பூர்* 13/2009/CO

### *என்.டி.பி. எதிர் பஹூமாஸைச் சேர்ந்த கடானா லிமிட்டட்* 14/2009/CO

### *என்.டி.பி. எதிர் மலேஷியாவின் ஆனந்த் பிரகாஷ் ஜாகையா* 15/2009/CO

என்.டி.பி. வங்கியானது வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வங்கியின் பங்குகளைக் கொள்வனவு செய்த மூன்று பங்குதாரர்களும் இவர்கள் பட்டியலிடப்பட்ட உரிமமளிக்கப்பட்ட பொது வர்த்தக வங்கிகள் தொடர்பான வங்கிச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தூண்டியுள்ளார்கள் என்ற சாட்டுரையின் மேல், இவர்களது பெயர்கள் பங்குதாரர் இடாப்பில் பதிவுசெய்யப்படவில்லை, சேரவேண்டிய பொருளாதார நலன்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தினைப் பெறுவதற்காக மூன்று விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. வங்கியானது வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்ட முறைமை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபரை 01ஆம், 02ஆம் மற்றும் 03ஆம் பிரதிவாதிகளாகச் சேர்த்துள்ளது.

நீதிமன்றத்திற்கு வெளியில் இணக்கம் எட்டியதையிட்டு பகுதியினரால் இவ்வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன.

### *சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சம்மேளனம் மற்றும் ஏனையோர் எதிர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் ஏனையோர்* S.C.F.R 587/2012

நாணயச் சபையின் அங்கத்தவர்களுக்கெதிராக உயர்நீதி மன்றத்தின் முன்னால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பத்தில் இ.பி.ப.ஆ. 08ஆம் பிரதிவாதியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கொ.ப.ப. இல் ஊழியர் சேமலாப நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில வர்த்தகங்கள் மூலதனச் சந்தைச் சட்டத்தினை மீறியுள்ளதாக சாட்டியுரைத்துள்ளார்கள்.

இவ்விடயமானது உயர் நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### அமுலாக்கல் செயற்பாடுகள்

#### *ஓர் பங்குத் தரகுக் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/முகாமைப் பணிப்பாளரை இடைநிறுத்தியமை*

2012 ஏப்ரல் 27 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் (தே.சே.வ.) 'த வைனான்ஸ் கம்பனியின்' பங்குகள் கொள்வனவினை சூழ்ந்துகொண்டுள்ள சூழ்நிலைகளில் இ.பி.ப.ஆ. ஓர் புலனாய்வினைத் தொடங்கியது. இக்கொள்வனவின் பலனாக இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான தீர்ப்பனவு வங்கியாகக் கடமையாற்றிய சம்பத் வங்கிக்கு இக்குறிப்பிட்ட கொள்வனவுக்கான தீர்ப்பனவினை மேற்கொள்ள தே.சே.வ. தவறியது. இப்புலனாய்வு நிலுவையிலுள்ளபோது எதிர்த்துரைக்கப்பட்ட கொள்வனவினை மேற்கொண்ட பங்குத் தரகுக் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/முகாமைப் பணிப்பாளரை பங்குத்தரகுக் கம்பனியினுள்ளான இ.பி.ப.ஆ. இன் புலனாய்வு நிறைவடையும்வரை இ.பி.ப.ஆ. இடைநிறுத்தியது. இந்த சமயத்தில் இந்த வர்த்தகத்தின் பலனாக சம்பத் வங்கிக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக பங்குத்தரகுக் கம்பனியினால் இனங்காணப்பட்ட நபர்களுக்கு த வைனான்ஸ் கம்பனியின் பங்குகளை மீள்கொள்வனவு செய்வதற்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. இக்குறிப்பிட்ட மீள்கொள்வனவிற்கு இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 28(1) இன் கீழ் வசதியளிக்கப்பட்டது.

ஆணைக்குழுவானது அதன்பின்னர் பங்குத் தரகுக் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/முகாமைப் பணிப்பாளரை கம்பனியினுள் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வானது நிறைவடைந்ததுடன் புலனாய்வு அறிக்கையின் விளைவில் ஆணைக்குழுவினது இறுதித்தீர்மானம் வரும்வரை மீளவமர்த்தியது. புலனாய்வு அறிக்கையானது மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் அபிப்பிராயத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### எச்சரிக்கைகள்

- ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரில் மூன்று முதலீட்டாளர்களுக்கு அவர்கள் தீர்ப்பனவு முறிவினை முறியடிப்பதற்காக மேற்கொண்ட வர்த்தகங்களின் முறையானது ஓர் கையாளுகையின் முத்திரையை உருவாக்கியதனால் எச்சரிக்கைக் கடிதங்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்தில் இத்தகைய நடாத்தையை மீண்டும் செய்வதற்கு எதிராக முதலீட்டாளர்கள் கடுமையாக அறிவுறுத்தப்பட்டதுடன் ஏதேனும் மீள்செய்கை இடம்பெற்றால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

  இ.பி.ப.ஆ. மேற்கூறப்பட்ட மூன்று முதலீட்டாளர்களது வர்த்தகத்திற்கு வசதியளித்த இரண்டு முதலீட்டு ஆலோசகர்களையும் எச்சரித்ததுடன் இந்த மூன்று முதலீட்டாளர்களுக்கும் பங்குத்தரகராகக் கடமையாற்றிய பங்குத்தரகுக் கம்பனிக்கும் எச்சரிக்கை செய்ததுடன் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு அறிவுரைக்கும்போது கம்பனியின் ஊழியர்கள் ஒழுக்கமான வணிக நடவடிக்கைகளைப் கடைப்பிடிப்பதை உறுதிசெய்யுமாறு அறிவுரையும் விடுக்கப்பட்டது.

- ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரில் பட்டியலிடப்பட்ட பிணையங்களில் எதிர்த்துரைக்கப்பட்ட வர்த்தகங்களை மேற்கொண்டமைக்காக இரண்டு முதலீட்டு ஆலோசகர்கள் அதே தரகுக் கம்பனியைச் சேர்ந்த வேறு வாடிக்கையாளர்களை முன்னோடியது பற்றி அவர்கள் வகித்த பங்களிப்பு தொடர்பாக கடுமையாக எச்சரிக்கப்பட்டார்கள்.

### சட்ட முரணான செய்கைக்கான அறிவித்தல்

- ஆணைக்குழுவின் உத்தரவின்பேரில் இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 29 ஏ க்கு அமைய இ.பி.ப.ஆணைக்குழுவின் முன் அனுமதியின்றி பட்டியிலடப்படா தொகுதிக்கடன்களை வழங்கியமைக்காக ஒரு பொது பட்டியலிட்ட கம்பனியானது இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 13(ஜே) இன் ஏற்பாடுகளுக்கமைய ஓர் முரணான செய்கைக்கான அறிவித்தலை பிரசுரிக்குமாறு தூண்டப்பட்டது.

- இன்னுமோர் பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றினால் பின்வரும் நடவடிக்கைக்காக இரண்டாவது முரணான செய்கைக்கான அறிவித்தலைப் பிரசுரிக்குமாறு தூண்டப்பட்டது. இக்கம்பனியானது கொ.ப.ப. இல் பட்டியலிடுவதற்கு ஒரு விண்ணப்பத்தினை மேற்கொள்ளும்போது கம்பனியினால் வழங்கப்பட்ட அறிமுக ஆவணத்தில் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் ஒப்பந்தங்களில் ஒரு பணிப்பாளரது நலன்கள் தொடர்பாக ஓர் தவறான எண்ணத்தை தோற்றுவிக்கும் கூற்றினை சாட்டியுரைத்தமைக்காகும்.

### கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கு சாட்டியுரைக்கப்பட்ட அமைவுறாமை

ஆணைக்குழுவின் பணிப்புரையின்பேரில் ஓர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு கம்பனியினால் கடைப்பிடிக்கப்படும் வழுவாமை நியமங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கம்பனியின் சொத்துக்களை ஓர் தொடர்புபட்ட பகுதியினருக்கு மேற்கொண்ட விற்பனை தொடர்பாக சந்தைக்கு கம்பனிசார் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளும்போது கம்பனியானது சில முக்கியமான தகவல்களைத் தவிர்த்திருந்தது. ஆணைக்குழுவானது எதிர்காலத்தில் கம்பனி ஏதேனும் தகவல்களை கொ.ப.ப. க்கு மற்றும் சந்தைக்கு வழங்கும்போது அத்தகைய தவிர்ப்புகள் மேற்கொள்வதனை நிறுத்திக்கொள்ள வேண்டுமென கடுமையாக அறிவுறுத்தியது. ஏனெனில் அவ்வாறு செய்யும்போது வழங்கப்பட்ட தகவல்களானது போதாததாகக் கருதப்படும்.

இப்பட்டியலிடப்பட்ட கம்பனிக்கு ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு ஆகக்குறைந்தது இரண்டு சுயாதீன நிறைவேற்றுனரல்லாத பணிப்பாளர்களை, கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கம்பனி ஆளுகை விதிகளில் குறிப்பிட்டுள்ள "சுயாதீனம்" எனும் அளவீட்டிற்கு அமைவாக, நியமிக்குமாறு ஓர் பணிப்புரை விடுக்கப்பட்டது.

### மூலதனச் சந்தை அபிவிருத்தி

மூலதனச் சந்தையானது பொருளாதார வளர்ச்சிக்கு முற்படுதேவையாகக் காணப்படுவதுடன் நிதியியல் வளங்களை பயனுள்ள விதத்தில் திரட்டுவதற்கு ஓர் முக்கியமான இயக்கியாகும். மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டில் பின்வரும் முன்னெடுப்புகளை மேற்கொண்டது.

#### இலங்கையின் மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக 2013 வரவுசெலவுத் திட்டத்திற்கு பிரேரணைகளை வடிவமைத்தமை

2013 வரவுசெலவுத் திட்டமானது இந்நோக்கத்திற்காக பின்வரும் வரி மற்றும் ஊக்குவிப்புகளை வழங்கியது:

- புதிய உரித்துடமை பட்டியலிடல் - 2013 ஏப்ரல் 01 முதல் 2014 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கிடையில் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடும் கம்பனிகள் 3 வருட காலப்பகுதிக்கு ஆகக்குறைந்தது 20% மான பங்குகளை தடையின்றி புழக்கத்தில் பேணுமாயின் வருமான வரியானது 50% ஆல் குறைக்கப்படும்;

- புதிய கம்பனிகள் முறிகள் வழங்கல் - 2013 ஜனவரி 01 இற்குப் பின்னர் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட கம்பனி முறிகளினூடாக உழைத்த வட்டியில் பிடித்துவைத்தல் வரி மற்றும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பட்டமை;

- முதலீட்டாளர்கள் - 2013 ஜனவரி 01 முதல் ஓர் எல்லைக் கடன் வர்த்தக வசதியினைப் பெறுவதற்காக மாற்றல் செய்யப்படும் பங்கு முதலீட்டுத்தேக்கத்திற்கு முத்திரை வரி விலக்களிக்கப்பட்டுள்ளமை;
- பங்குத் தரகுக் கம்பனிகள் - 2013 ஏப்ரல் 01 முதல் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு மற்றும் கிளை வலையமைப்பு போன்ற மூலதனப் பொருட்களில் 100% பெறுமானத் தேய்வுத் தள்ளுபடிக்கு அனுமதித்தமை;
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள்
    - 2013 ஏப்ரல் 01 முதல் இலாபம் மற்றும் வருமானம் ஆகியவற்றில் பிரயோகிக்கப்படும் வரியானது 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
    - 2013 ஜனவரி 01 முதல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கான முகாமைத்துவக் கம்பனிகளின் சேவைகளில் பெறுமதி சேர்த்தல் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.
    - நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் வெளிநாட்டு நாணயங்களில் நிதியங்களை கட்டமைப்பதற்கு அனுமதி
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முதலீட்டாளர்கள்
    - வெளிநாட்ட முதலீட்டாளர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் உள்ளூரில் வெளிநாட்டு நாணயத்தில் கணக்குகளை இயக்கும் இலங்கையர்கள் ஓர் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை (பிமுக) திறக்காது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் வெளிநாட்டு நாணயத்தினை முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.
    - தனியார் ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் தனியார் சேமலாப நிதியங்கள், பட்டியலிட்ட உரித்துடமைகள் மற்றும் பட்டியலிட்ட கம்பனி முறிகளில் மாத்திரம் முதலீடு செய்யும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளூடாக மூலதனச் சந்தை முதலீடுகளை, 20 சதவீத மட்டம் வரை, அடையலாம்.

### இலங்கையின் உரித்துடமைகளுக்கு ஓர் சுயாதீன ஆய்வினை அமுல்படுத்துவதற்கான முன்னெடுப்பு

இலங்கையின் பங்குகள் மற்றும் ஆ.பொ.வ. தரப்படுத்தல் நுட்பம் ஆகியவற்றின் சுயாதீன ஆய்வின் பரிமாணத்திற்கு வசதியளிப்பதில் சந்தைப் பங்குபற்றுனர்கள் மற்றும் முதலீடு செய்யும் பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைக் கோருவதற்காக ஓர் ஆலோசனைப் பத்திரிகை வெளிப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கையானது ஏனைய சந்தைகளான மலேஷியா, இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மற்றும் ஐரோப்பா ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்ட சுயாதீன உரித்துடமை ஆய்வுத் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இதற்கான பதிலளிப்புகள் ஏற்கனவே பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் பட்டியலிடுவதற்கு எதிர்பார்க்கும் புதிய கம்பனிகள் ஆகியவற்றில் சுயாதீன ஆய்வுக்கான பலமான தேவையைக் கண்டுகொண்டுள்ளது.

### இலங்கையின் மூலதனச் சந்தையினுள் வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீடுகளைக் கவர்வதற்கான செயற்பாடு

இலங்கையின் சுட்டியினை மோர்கன் ஸ்டான்லி மூலதன சர்வதேச (மோஸ்மூச) "வெளித்தோன்றும் சந்தை" தரத்திற்கு உயர்த்துவதானது இலங்கையின் மூலதனச் சந்தைக்கு வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீடுகளைக் கவர்வதற்கான முக்கியமான அளவுகோள்களில் ஒன்று என இனங்காணப்பட்டுள்ளது. மூலதனச் சந்தை அபிவிருத்திப் பிரிவானது பின்வருவனவற்றில் தரவுகளைச் சேகரிப்பதற்காக மோ.ஸ்.மூ.ச. உடன் தொழிற்பட்டது. மோ.ஸ்.மூ.ச. சந்தை வகைப்படுத்தல் வடிவமைப்பு, மோ.ஸ்.மூ.ச. வெளித்தோன்றும் சந்தைகள் மற்றும் மோ.ஸ்.மூ.ச. எல்லைப்புறச் சந்தைகள் சுட்டி வழிமுறைகள், சந்தைத் திரவத்தன்மைக்கான மோ.ஸ்.மூ.ச. தேச வகைப்படுத்தல், இலங்கைக்கான மோ.ஸ்.மூ.ச. வின் சந்தை அணுகுமுறை மதிப்பீட்டு தராதரம் மற்றும் மோ.ஸ்.மூ.ச. எல்லைப்புறச் சந்தைகள் சுட்டியின் கீழ் தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கைப் பங்குகள் போன்றவற்றில் எதிர்காலத்தில் இலங்கையினை "வெளித்தோன்றும் சந்தை" தரத்திற்கு சாத்தியப்படக்கூடிய விதத்தில் தரமுயர்த்துவதற்காக அமுல்படுத்தவேண்டிய தேவைப்படும் அளவுகோள்களை இனங்காணும் நோக்கில் தரவுகள் திரட்டப்பட்டன.

### *லங்கா கிளியர், கொ.ப.ப. மற்றும் ம.வை.தி. ஆகியவற்றுடன் கூட்டிணைந்து ஆரம்பப் பொது வழங்கல் (ஆ.பொ.வ.)காலச் சுற்று வடிவத்தைக் குறைப்பதற்காக ஓர் புதிய, மாற்று ஆ.பொ.வ. கொடுப்பனவு பொறிமுறைக்கு வசதியளித்தல்*

லங்கா கிளியர், கொ.ப.ப., ம.வை.தி மற்றும் ஆ.பொ.வ. பதிவாளர்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் ஆ.பொ.வ. செயற்பாட்டு ஓட்டம் உள்ளடங்களாக பிரேரிக்கப்பட்டுள்ள புதிய கொடுப்பனவு பொறிமுறை மற்றும் அமுல்படுத்துவதற்குக் கிடைக்கத்தக்க தெரிவுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் தலைமைத்துவத்திற்கு பிரேரிக்கப்பட்டுள்ள ஆ.பொ.வ. கொடுப்பனவுப் பொறிமுறையானது காட்சிப்படுத்தப்பட்டது.

### இலங்கை நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி சங்கத்துடனான ஆலோசனைக் கூட்டங்கள்

இலங்கை நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி சங்கத்துடன் (ந.அ.பொ.ச.) நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை, பொதுவான மூலதனச் சந்தை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ந.அ.பொ.சங்கத்தின் அங்கத்தவர்களிடமிருந்து யோசனைகளைச் சேகரிப்பதற்காகவும் ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி கலந்துரையாடுவதற்காகவும் எவ்வாறு இ.பி.ப.ஆ. மற்றும் அரசாங்கமானது அவர்களுக்கு துணைபுரியமுடியும் என்பது பற்றியும் ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

### இலங்கை மத்திய வங்கிக்கு மேற்கொண்ட சார்பாண்மையுரை

வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகளினால் கணக்கிடப்படும் சட்டபூர்வமான திரவத்தன்மையுடைய சொத்துக்களுக்காக "அரசாங்கப் பிணையங்கள்" என்ற வரைவிலக்கணத்திற்குள் உட்படுத்தப்படும் அரசாங்கப் பிணையங்களில் மாத்திரம் முதலீடு செய்யும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை உள்ளடக்குமாறு இலங்கை மத்திய வங்கிக்கு எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினது வர்த்தமானி 1704/18 இன் பிரகாரம் ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் சேமலாப நிதியங்களது அரசாங்கப் பிணையங்களில் கட்டாய முதலீடுகள் பிரிவின் கீழ் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை தகுதியுடையதாகக் கருதுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### முழுவளர்ச்சியடைந்த பல ஆதன வகுப்பு பண்டங்கள் மற்றும் மூலாதாரப் பிணையங்களது பரிமாற்றகத்தினை நிறுவுவதற்கு வசதியளித்தமை

மூ.ச.அ. பிரிவானது இத்திட்டத்திற்கு ஆரம்பத்திலிருந்து வசதியளித்துள்ளது. இது இரண்டு முன்னெடுப்புகளுக்கு வசதியளித்தல் மற்றும் துணைபுரிதலை உட்படுத்தும். தேசியப் பெறுகை முகவர் வழகாட்டிகளினூடாக மிகவும் தகுதிவாய்ந்த பரிமாற்றக இயக்குபவரின் தெரிவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்காகவும் ஓர் ஆலோசகர் நிறுவனத்தின் தெரிவு என்பன நிறைவேற்றப்படல் வேண்டும். மூ.ச.அ. பிரிவானது பின்வரும் மூன்று தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களுடனான கூட்டங்களுக்கும் வசதியளித்தது. பல அரசாங்க நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை நியமிக்கப்பட்ட பெறுதல் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை நியமன ஆலோசனைப் பெறுகைக் குழு என்பனவாகும். அத்துடன் இக்குழுக்கள் தொழிற்படவும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அவசியமான கருமங்கள்/ஆவணப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் பணிவிடை புரியப்பட்டது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### குரல் பதிவிற்கான பொறிமுறை

பங்குத்தரகர் வாடிக்கையாளர் கட்டளை அறிவுறுத்தல்களை ஓர் குரல் பதிவாக அல்லது எழுத்துமூலமான வடிவத்தில் பதிவுசெய்வதற்கான ஒரு பொறிமுறையினை அமுல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டோம். கொ.ப.ப. இன் பங்குத் தரகர் விதிகளின் பிரிவு 3.2 இன் கீழ் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### எல்லை அடிப்படையான இடர்நேர்கை முகாமைத்துவத் திட்டம்

கொ.ப.ப. மற்றும் பங்குத் தரகு நிறுவனங்களுக்கு ஓர் எல்லை அடிப்படையான இடர்நேர்கை முகாமைத்துவத் திட்டம், பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஓர் ஒப்படை எதிர் கொடுப்பனவு பொறிமுறை மற்றும் மத்திய எதிர்தரப்பினர் உத்தரவாதத்திற்காக ஓர் தீர்வகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அமுலாக்கலை ஆரம்பிப்பதற்காக இத்திட்டத்தினது அமுல்படுத்தலை விரைவுபடுத்தினோம்.

2011 பெப்ரவரி 08 இல் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய மத்திய எதிர்தரப்பினர் பொறிமுறையினை சாத்தியமாக்குதலை முதன்மைப்படுத்துவதற்கும் இலங்கையின் மூலதனச் சந்தையின் அடித்தள ஆதாரக் கட்டமைப்பிற்கான முன்னேற்றங்களை விரைவுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தின் அமுலாக்கலை விரைவுபடுத்துவதற்காக ஆணைக்குழுவானது இ.பி.ப.ஆ.-கொ.ப.ப.-ம.எ.த. மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவக்குழு ஆகியவற்றை இ.பி.ப.ஆணைக்குழுவின் (2 ஆணைக்குழு அங்கத்தவர்கள்) மற்றும் கொ.ப.ப. (2 கொ.ப.ப. இன் பணிப்பாளர்கள்) ஆகியவற்றிலிருந்து சிரேஷ்ட பிரதிநிதிகளைக்கொண்டு உருவாக்கியது. குழுவானது அதன் நோக்கத்திற்கு சேவையாற்றியது. கொ.ப.ப. இன் பணிப்பாளர் சபையினால் ஒப்படை எதிர் கொடுப்பனவு மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவத் திட்டம் ஆகியவற்றினை அமுலாக்குவதற்கான ஒப்பந்தமானது இந்தியாவின் தேசிய பங்குப் பரிமாற்றகத்திற்கு வழங்கப்பட்டது.

### ஆகக்குறைந்த தரகுக் கட்டணம் மற்றும் ம.வை.தி. கட்டணம் மற்றும் காப்பக வங்கிகளிடமிருந்த அறவிடப்படும் கட்டணம் ஆகியவற்றினை விட்டுவிடுவதற்கான மாற்றத்திற்கான அங்கீகாரத்திற்கு வசதியளித்தல்

பலகையின் பாகத்தின் அளவானது ஒரு (1) பங்காக மாற்றப்பட்டதுடன் கொடுக்கல் வாங்கல்களில் அறவிடப்படும் ஆகக்குறைந்த தரகுக் கட்டணமான ரூ.10 மற்றும் ஆகக்குறைந்த ம.வை.தி. கட்டணமான ரூ 5 உம் அகற்றப்பட்டது. இதன் பலனாக 2012 ஏப்ரல் 10 முதல் ரூ 50 மில்லியன் வரைக்குமான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் 0.64 சதவீத தரகுக் கட்டணமும் மற்றும் 0.024 சதவீத ம.வை.தி. கட்டணமும் பிரயோகிக்கப்படுகின்றது. இதற்கும் மேலாக 2012 மார்ச் 19 முதல் காப்பக வர்த்தகம் தொடர்பாக காப்பக வங்கிகளிடமிருந்து அறவிடப்படும் ரூ 25 கட்டணமும் அகற்றப்பட்டது.

### முதலீட்டு வங்கிகளுடனான ஆலோசனைக் கூட்டங்கள்

கொ.ப.ப. இன் திரவத்தன்மையை மேம்படுத்துவதற்கு பட்டியலிடலை ஊக்குவிப்பதற்கு என்ன செய்யவேண்டும் மற்றும் கம்பனிகளது முறிகள் சந்தையை விருத்திசெய்தல் ஆகியவற்றில் முதலீட்டு வங்கிகளுடன் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை ஆ.பொ.வ.முகாமையாளர்கள் /முதலீட்டு வங்கியாளர்களிடமிருந்து பெறுவதற்காகவும் அவர்களுக்கு இ.பி.ப.ஆ மற்றும் அரசாங்கம் எவ்விதத்தில் துணைபுரியலாம் என்பதற்காகவும் ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

### அரசாங்கத்திற்கு மேற்கொண்ட சார்பாண்மையுரை

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தல் 1704/18 இன் கீழ் ஆகக்கூடியது 20% மட்டத்திற்குள்ளாக, பட்டியலிடப்பட்ட பிணையங்களில் தனியார் சேமலாப நிதியங்கள், சேமிப்பு நிதியங்கள், ஓய்வூதிய நிதியங்கள், நம்பிக்கை நிதியங்கள் மற்றும் பணிக்கொடை நிதியங்கள் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது. முதலீட்டாளர் சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக ஓர் பத்திரிகை வெளியீடு மற்றும் செய்தித்தாள் கட்டுரை என்பன மேற்கூறியவற்றில் பிரசுரிக்கப்பட்டன.

### ஏனைய முன்னெடுப்புகள்

- புளூம்பேர்க் செய்திப்பக்கத்தில் அனைத்து இ.பி.ப.ஆ. முறைமைப்படுத்தல் நிகழ்பொழுது வரையான செய்திகளை உள்ளடக்கிய ஓர் பிரத்தியேகமான பக்கத்தின் உருவாக்கலுக்கு வசதியளித்தமை.
- கொ.ப.ப. இன் புதிய வர்த்தக அங்கத்தவர்கள் கொழும்புக்குப் புறம்பான பகுதிகளில் புதிய பங்குத் தரகர் கிளைகள் ஆரம்பிப்பதனை ஒத்திவைப்பதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு வசதியளித்தமை.

அனைத்து புதிய வர்த்தக அங்கத்தவர்களுக்கும் அவர்களது தேவைப்பாடான 2 ஆம் வருட தொழிற்பாட்டில் கொழும்புக்கு புறம்பாக இரண்டு புதிய கிளைகளை திறத்தல் என்பதிலிருந்து ஒரு வருடத்திற்கான ஒத்திவைப்பு வழங்கப்பட்டது.

## மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி

இ.பி.ப.ஆணைக்குழுவின் மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவானது தொடர்ந்தும் உரிமமளித்தல் பரீட்சைகள், பல்வேறு கேட்போர்களுக்கான நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிணையங்கள் துறையிலுள்ள தொழில்வல்லுநர்களுக்கு தொடர்ச்சியான கற்கை வாய்ப்புகள் என்பவற்றை விநியோகிக்கின்றது.

### தகமைக் கட்டமைப்பு

தகமைக் கட்டமைப்பானது மூன்று பிரதான தகமைகளைக் கொண்டுள்ளன. அவையாவன, மூலதனச் சந்தைச் சான்றிதழ் (மூ.ச.சா.), பதிவீடுசெய்ப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.) மற்றும் மூலதனச் சந்தை டிப்ளோமா (மூ.ச.டி.) என்பவையாகும். இவ்வாண்டில் நாம் பங்குத்தரகுக் கம்பனிகளின் பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஓர் ஆகக்குறைந்த மட்டத்திலான தேர்ச்சியை அளிப்பதற்காக தகமைக் கட்டமைப்பினை தொடர்ச்சியாக அமுல்படுத்தியதுடன் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களது அபிவிருத்தியூடாக தொழில்நடத்துபவர்கள் மேல்நிலை தகமைகளுக்கு முன்னேறுவதற்கும் துணைபுரிந்தோம். 2011 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தற்காலிக உரிமமளித்தல் செயற்பாடானது 2012 டிசம்பர் 31 இல் நிறைவடைந்தது. இவ்வுரிமமானது "தற்காலிக அந்தஸ்து" எனத் தலைப்பிடப்பட்டு இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 13 (சி) இன் கீழ் ஓர் பணிப்புரையின் மூலம் அமுல்படுத்தப்பட்டது. பங்குத்தரகுக் கம்பனிகளில் தொழில்புரியும் முதலீட்டு ஆலோசகர்கள் மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டத்தின் உரித்துடமைப் பிணையங்கள் தொடரினை பூர்த்திசெய்தும் "நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிநெறிகள்" எனும் கட்டாயமான கருத்தரங்கில் பங்குபற்றியும் இருப்பார்களாயின் அவர்கள் இந்தத் தற்காலிக உரிமத்தினை பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர்களாவார்கள். இப்பணிப்புரை அமுலிலுள்ள காலப்பகுதியில் 6 கட்டாயக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதுடன் 238 தற்காலிக உரிமங்கள் பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்டன. (உருவங்கள் 16, 17)

*உருவம் 16:* **மூ.ச.சா. பரீட்சைகளின் புள்ளிவிபரச் சுருக்கம் - 2012**

| | மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்தம் | உரித்துடமைத் தொடரை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்கநெறித் தொடரை நிறைவுசெய்தவர்கள் | மூ.ச.சா. நிறைவு செய்தவர்கள் | ப.மு.ஆ. நிறைவு செய்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| **சிங்கள மொழி மூலம்** | | | | | | |
| உ.மொத்தம் | 108 | 98 | 136 | 151 | 132 | 60 |
| **ஆங்கில மொழி மூலம்** | | | | | | |
| உ.மொத்தம் | 222 | 85 | 106 | 94 | 118 | 45 |
| | | | | | | |
| மொத்தம் | 330 | 183 | 242 | 245 | 250 | 105 |

*உருவம் 17:* **மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. ஆகியவற்றிற்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் திரட்டு (2012)**

| நிகழ்ச்சித் திட்டம் | தொடர் | ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | சித்தி % |
|---|---|---|---|
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் (ஆங்கில மொழி) | உரித்துடமைப் பிணையங்கள் | 6 | 66% |
| | கடன் பிணையங்கள் | 4 | 75% |
| | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிதெறிகள் | 3 | 73% |
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் (சிங்கள மொழி) | உரித்துடமைப் பிணையங்கள் | 2 | 74% |
| | கடன் பிணையங்கள் | 2 | 71% |
| | நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிநெறிகள் | 2 | 79% |
| பதிவீடுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ஆங்கில மொழி) | பொருத்தமற்றது | 14 | 70% |
| (சிங்கள மொழி) | பொருத்தமற்றது | 19 | 75% |

### *மூலதனச் சந்தைகள் டிப்ளோமா (மூ.ச.டி.)*

மீளாய்வாண்டில் நாம் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்ததுடன் முதலாம் தொகுதியினருக்கான விரிவுரைகளை நிறைவுசெய்தோம். இக்காலப் பகுதியில் பரீட்சையை நிறைவுசெய்யுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். ஒரு மாணவர் இந்த டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்து விருதுவழங்கல் விழாவில் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

### *முதலீட்டாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான உயர்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள்*

நாம் சாத்தியப்படத்தக்க மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தின் அடிப்படை தத்துவ மற்றும் நடைமுறைப் பகுதிகளை வழங்கும் நோக்கத்துடன் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினோம். இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களில் 56 பங்குபற்றுநர்கள் சமூகமளித்திருந்தார்கள்.

### *நிதியியல் ஊடகத்துறைக்கான சான்றிதழ்*

2012 ஆம் ஆண்டில் வங்கியியல் கற்கைக்கான மையத்துடனிணைந்து சிங்கள மொழியில் "ஊடகவியலாளர்களுக்கான பொருளியல், வங்கியியல் மற்றும் நிதியியல் டிப்ளோமா" நடாத்தப்பட்டது. ஒரு (1) நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்து இரண்டாம் நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டில் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையிலுள்ள நிதியியல் ஊடகவியலாளர்களுக்கு கற்பிப்பதற்கும் மற்றும் பயிற்றுவிப்பதற்கும் மற்றும் துறைக்கு இளமையான சாத்தியப்படக்கூடிய ஊடகவியலாளர்களைக் கவருவதற்கும் வடிவமைக்கப்பட்டது.

### *வருடாந்த விருது வழங்கல் சடங்கு*

2012 டிசம்பரில் இரண்டாவது சான்றிதழ் மற்றும் டிப்ளோமா வழங்கல் சடங்கானது பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச கருத்தரங்கு மண்டபத்தில் (ப.ஞா.ச.க.ம.) மதிப்பிற்குரிய சர்வதேச நாணய ஒத்துழைப்பு அமைச்சர் மற்றும் பிரதி நிதி அமைச்சரான கலாநிதி சரத் அமுனுகம மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. நிவார்ட் கப்ரால் அவர்களது கௌரவ ஆதரவின் கீழ் இடம்பெற்றது. 700 க்கும் அதிகமான மாணவர்கள் அவர்களது விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### *தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ.) நிகழ்ச்சித்திட்டங்கள்*

மீளாய்வாண்டில் மூலதனச் சந்தையில் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு அவர்கள் உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளிலுள்ள சமீபத்தைய போக்குகளுடன் தொடர்ச்சியாக தம்மை மதிப்பிடுவதற்கும் நிகழ்வழிப்படுத்துவதற்கும் பொருத்தமான 11 தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி (தொ.தொ.அ) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் பங்குத் தரகுக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் துறைசார் தொழில்வல்லுநர்கள் உள்ளடங்களாக 1130 பங்குபற்றுனர்களைக் கவர்ந்தன. இத்துறைசார் தொழில்வல்லுநர்கள் கொ.ப.ப. ஆல் தமது வர்த்தக உரிமங்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கு கட்டாயமாக ஆகக்குறைந்தது ஒரு ஆண்டில் 2 தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களிலாவது பங்கேற்க வேண்டுமென இ.பி.ப.ஆ. கட்டாயப்படுத்தியுள்ளது.

### *பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்*

பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு “தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கல்” எனும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நவம்பர் 2012 இல் கொழும்பு டஜ் சமுத்ரா ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இம்மன்றத்தில் திரு. நிஷான் பர்னாந்து, முகாமைப் பணிப்பாளர், பி.டி.ஓ. கன்சல்டன்சி, உரையாற்றினார்கள். இலங்கைப் பட்டையக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ஷ, பணிப்பாளர்கள் நிருவகத்தின் தலைவர் திரு. ரொனி பீரிஸ், இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஹரீந்திர திசாபண்டார மற்றும் இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் மேற்பார்வை திருமதி. சுரணா பர்னாந்து அவர்கள் கருத்து வளக் குழாமில் பங்கேற்பதற்கு வரவேற்க்கப்பட்டார்கள். 102 கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சந்தைத் தொழில்வல்லுனர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்கள் உள்ளடங்களாக மொத்தமாக 256 உத்தியோகத்தர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமூகமளித்திருந்தார்கள்.

### *கணினி அடிப்படையிலான தேர்வுத் திட்டம்*

இ.பி.ப.ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் திரு. திலக் கருணாரத்ன அவர்களது ஆதரவின் கீழ் இ.பி.ப.ஆ.இல் கணினி அடிப்படையிலான தேர்வுத் திட்டமானது 2012 ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. இந்நிகழ்வில் இ.பி.ப.ஆ.இன் பணிப்பாளர்களும் ஊழியர்களும் பிரசன்னமாயிருந்தார்கள்.

### *தங்கப் பதக்கம் மற்றும் பணக் கொடைத் திட்டம்*

இ.பி.ப.ஆ. மீளாய்வாண்டில் தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினைத் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக 11 பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன. மீளாய்வாண்டில் களனிப் பல்கலைக்கழகம், இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம், இலங்கையின் தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் சபரகமுவ பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன மீளாய்வாண்டில் வழங்கப்பட்டன.

### *ஆய்வுக் கொடைத் திட்டங்கள்*

ஆய்வுக் கொடைகள் திட்டமானது நிறைவுற்று மீளாய்வாண்டில் தெரிவுசெய்யப்பட்ட நான்கு ஆய்வாளர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பட்டதாரிகள், கல்விமான்கள் மற்றும் தொழில்வல்லுநர்களிடையே உயர் தரத்திலான ஆய்வினை ஊக்குவிக்கவும் விருத்திசெய்யவும் இத்திட்டமானது இலங்கையின் மூலதனச் சந்தை தொடர்பான பல்வேறு ஆய்வு ஒப்படையைப் பொறுப்பேற்குமாறு கல்விமான்கள் மற்றும் தொழில்வல்லுநர்களை வரவேற்பதற்காக இத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

## மூலதனச் சந்தை விழிப்புணர்வுகள்

சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களிடையே அவர்கள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் நிதியியல் எழுத்தறிவினை மேம்படுத்துவதற்கு இ.பி.ப.ஆ. முயற்சிக்கின்றது.

### இலத்திரணியல் மற்றும் பத்திரிகை ஊடகங்களூடான விழிப்புணர்வு

இலக்குவைக்கப்பட்ட பல்வேறு அவையோரிடையே மூலதனச் சந்தை பற்றிய விழிப்புணர்வினை எழுப்புவதற்கு இலத்திரணியல் மற்றும் பத்திரிகை ஊடகங்கள் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. மக்களுடைய அறிவு மட்டத்தினை பரவலாக்குவதற்கு இ.பி.ப.ஆ. பல கருவிகளைப் பயன்படுத்தியது.

### *மூலதனச் சந்தைப் புதிர் போட்டி 2012*

வருடந்தோறும் இலங்கை முழுவதுமுள்ள பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் மூலதனச் சந்தைப் புதிர் நிகழ்ச்சியானது இவ்வருடமும் நடைபெற்றது. இது அரசாங்கப் பாடசாலைகளிலுள்ள சிங்கள மொழியில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவிலுள்ள மாணவர்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது மூன்று மட்டங்களில் நடைபெற்றது, ஆரம்பத் தெரிவுப் பரீட்சை, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி என்பனவாகும். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஆறு மாணவர்கள் மாகாணங்களுக்கிடையேயான அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டு இந்த எட்டு அரையிறுதிச் சுற்றில் வெற்றிபெற்ற மாணவர்கள் இறுதிப் போட்டியில் பங்கேற்றார்கள். 2012 ஆம் ஆண்டிற்கான வெற்றியாளராக நுவரெலியா நல்லாயன் மடத்தைச் சேர்ந்த மாணவியொருவர் தெரிவுசெய்யப்பட்டார். கவர்ச்சிகரமான பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

### *பத்திரிகைக் கட்டுரைத் தொடர்கள்*

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட லங்காதீப மற்றும் டெய்லி மிரர் ஆகிய செய்தித் தாள்களில் மூலதனச் சந்தையின் பல்வேறு தலைப்புகளில் பிரசுரிக்கப்பட்ட வாராந்தக் கட்டுரைத் தொடர்கள் 2012 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. மேலும் "ஹுத" மற்றும் "வீரகேசரி" செய்தித்தாள்களிலும் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இக்கட்டுரைகள் ஆகக் குறைந்த கிரயத்தில் தற்போதைய மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களை உள்ளடக்கிய பரவலான அவையோரை எட்டுவதற்கான பொருத்தமான வழியாகவும் அவர்கள் தகவலறிந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் இவ்விடயத்தில் அவர்களது அறிவினை மேம்படுத்தவும் உகந்ததாகக் கருதப்படுகின்றது. பத்திரிகைகளில் 2012 இல் 3 மொழிகளிலும் 200 கட்டுரைகளுக்கும் அதிகமாகப் பிரசுரிக்கப்பட்டன. இக்கட்டுரைகளுக்கும் மேலாக மீளாய்வாண்டில் பல தொலைக்காட்சிச் சேவைகளில் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.

## கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கண்காட்சிகளூடான கல்வி மற்றும் விழிப்புணர்வு

பல்வேறு இலக்குவைக்கப்பட்ட குழுக்களை அடைவதற்காக நாம் கருத்தரங்குகளை நடாத்தி கண்காட்சிகள் மற்றும் வர்த்தகச் சந்தைகள் என்பவற்றில் பங்குபற்றுவதுடன் முதலீட்டாளர்கள் மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களுக்கு மூலதனச் சந்தையில் முதலீடு செய்வதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஓர் மேடையையும் வழங்குகின்றோம்.

### *கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்*

நாட்டின் வெவ்வேறு மாகாணங்களில் இலக்குவைக்கப்பட்ட பல்வேறு குழுக்கலான மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு மூலதனச் சந்தையில் புரிந்துணர்வையும் அறிவையும் மேம்படுத்துவதற்காக அறிவுபடைத்த முதலீட்டாளர்களது தேக்கத்தை உருவாக்கும் எமது கடப்பாட்டிற்கமைவாக நாம் பல கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் நடாத்தினோம். (உருவம் 18)

உருவம் 18: **விழிப்புணர்வு முன்னெடுப்புகள்**




### *முதலீட்டாளர் தின நிகழ்வுகள்*

இ.பி.ப.ஆ. வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் பிராந்திய வலையமைப்புகளுடன் ஒன்றிணைந்து மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் 2012 ஆம் ஆண்டில் முதலீட்டாளர் தின நிகழ்வுகளை ஒழுங்குசெய்தது. இ.பி.ப.ஆ., கொ.ப.ப., பங்குத் தரகர்கள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தநிகழ்ச்சித்திட்டங்கள் பயனுள்ளதாகவும் முதலீட்டாளர் தோழமையுடையதாகவும் இருப்பதற்கு கைகோர்த்து பங்காற்றினார்கள். முதலீட்டாளர் தினங்கள் முக்கியமாக கிராமத்து மக்களிடையே காணப்படும் குறைந்த மட்டத்திலான நிதியியல் எழுத்தறிவினை சந்திப்பதனை மையப்படுத்தி நடாத்தப்படுகின்றன. துறைசார் தொழில்வல்லுநர்களினால் விரிவுரைகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனைத் தொடர்ந்து கேள்வி பதில் வேளைகள் இடம்பெறுகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுமக்களை சம்பிரதாயமான வங்கியியல் தீர்வுகளிலிருந்து வெளியேறி பிணையங்கள் மற்றும் கடன்பத்திரங்கள் போன்ற முதலீட்டுத் தெரிவுகளுக்குச் செல்வதற்கு வசதியளிக்கின்றது.

### *கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை*

இ.பி.ப.ஆ. அநுராதபுரத்திலுள்ள ஓயமடுவவில் 54ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்களுடன் ஒன்றிணைத்து இடம்பெற்ற 06ஆவது "தேசத்தின் மகுடம்" கண்காட்சியில் பங்குபற்றியது. இந்த வருடாந்த தேசிய அபிவிருத்திக் கண்காட்சியானது கிராமத்து மக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அவர்களுக்கு மூலதனச் சந்தை அறிவினை வழங்குவதற்கும் முதலீட்டாளர் மட்டத்தினை பரவலாக்குவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் ஓர் பொருத்தமான இடைமுகப்பினை உருவாக்கியது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியினால் அவர்களது 125 வருடாந்த ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக மார்ச் மாதத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் இ.பி.ப.ஆ. ஒரு சாவடியை நடாத்தியது. இந்த முன்னெடுப்பானது பிள்ளைகளுக்கும் இளம் சமுதாயத்தினருக்கும் தனிப்பட்ட நிதி, சேமிப்பு மற்றும் முதலீடுகள் என்பவை பற்றிக் கற்பிப்பதற்கு ஓர் பொருத்தமான மேடையாகக் காணப்பட்டது.

## ஏனைய முன்னெடுப்புகள்

ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்றுவித்தல் முன்னெடுப்பின் பிராந்திய கருத்தரங்கு 'மூலாதாரப் பிணையங்களது சந்தையின் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை' 2012, கொழும்பு இலங்கை

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்றுவித்தல் முன்னெடுப்பினால் கொழும்பில் 2012 ஒக்டோபர் 08 முதல் 12 வரை ஒழுங்குசெய்யப்பட்ட பிராந்திய கருத்தரங்கான 'மூலாதாரப் பிணையங்களது சந்தையின் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையை' இ.பி.ப.ஆ. விருந்தோம்பியது. இந்நிகழ்ச்சித்திட்டமானது அவுஸ்திரேலிய பிணையங்கள் மற்றும் முதலீட்டு ஆணைக்குழு (அ.பி.மு.ஆ.), இந்தியாவின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை சபை (இ.பி.ப.ச.) மற்றும் கொரிய பரிமாற்றகம் என்பவற்றிலிருந்து முறையே மூன்று வள அலுவலர்களால் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டமானது ஒரு மூலாதாரப் பிணையங்கள் சந்தைக் கொடுக்கல் வாங்கலின் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைகளுக்கு பதிலளித்தது. முறைமைப்படுத்தல் வடிவமைப்பிலிருந்து ஆரம்பித்து மூலாதாரப் பிணையங்களது வகைகள் மற்றும் அவற்றின் பண்புகள், வர்த்தகப் பொறிமுறைகள், மேற்பார்வை மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் தீர்வகம் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. இ.பி.ப.ஆ. இலிருந்து 21 உள்ளூர் பங்குபற்றுனர்கள் உள்ளடங்கலாக 13 நாடுகளிலிருந்து இருபத்து நான்கு வெளிநாட்டு பங்குபற்றுனர்களும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றார்கள்.

## மனித வளங்கள்

மனித மூலதனம் இ.பி.ப.ஆணைக்குழுவின் மிகவும் முக்கியமான செயல்திட்டச் சொத்தாகக் கருதப்படுகின்றது. எனவே இ.பி.ப.ஆணைக்குழுவின் மனித வளங்களானது அவர்களது அர்ப்பணிப்புக்கும் தொழில்நெறிக்கும் பாராட்டப்பட்டு, மரியாதை செய்யப்பட்டு, பேணி வளர்க்கப்பட்டு மற்றும் மதிக்கப்படுகின்றார்கள். தனித்துறைப்படுத்தப்பட்ட காரியங்களிலுள்ள மனிதத் திறமைகள் இ.பி.ப.ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்துதல் குறிக்கோள்களை அடைவதற்காக ஈடுபடுத்தப்படுகின்றன.

### சேனைகளின் திரட்டு

நாங்கள் சிறந்த பொருத்தமானவர்களை தொழிலுக்கமர்த்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிப்பதுடன் பொருத்தமான திறமையுள்ளவர்களை வைத்துக்கொள்வதற்கு கவனம் செலுத்துகின்றோம். இந்த ஆண்டில் ஐந்து நிறைவேற்றுனர்களும் ஓர் அலுவலக உதவியாளருமாக ஆறு புதிய நியமனங்களும் ஒரு நிறைவேற்றுனரது பதவி விலகலும்

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

பதிவுசெய்யப்பட்டன. ஒரு நிறைவேற்றுனர் அவரது கடந்தகால செயற்திறன் மற்றும் நன்னடத்தையின் பலனாக ஓர் சிரேஷ்ட நிறைவேற்றுனராக பதவியுயர்வு பெற்றார்.

உள்ளக வேட்பாளர்களுக்கு உயர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு, அவர்கள் ஆட்சேர்த்தல் கட்டளை விதிகளது ஏற்பாடுகளின்படி உரிய தகமையுடன் பொருத்தமான அனுபவத்தினையும் கொண்டிருப்பார்களாயின், எந்நேரமும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இதற்கமைய பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுலாக்கல் மற்றும் ஓர் இரகசியச் செயலாளர் போன்ற பதவிகளுக்கு ஓர் போட்டித்தன்மையுடைய தெரிவுச் செயற்பாட்டின் பின்னர் உள்ளகத்திலிருந்து நியமிக்கப்பட்டார்கள். ஆணைக்குழுவானது முன்னால் புலனாய்வுக்கான பணிப்பாளரை, கடந்த 18 வருடங்களாக இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு அவரது பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு பிரதி பணிப்பாளர் நாயகமாகப் பதவி உயர்வு வழங்கியது.

ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சானது மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்தி முன்னெடுப்புகள் மற்றும் சவால்களைச் சந்திப்பதற்கு அவசியமான பன்னிரண்டு புதிய ஊழியர் பதவிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

இதற்கமைய 31.12.2012 இல் உள்ளவாறான இ.பி.ப.ஆ. இன் சேனைகளின் விபரங்கள் பின்வருமாறு.

*உருவம் 19:* **சேனைகளின் திரட்டு**

| வர்க்கம் | அங்கீகரிக்கப்பட்ட மொத்த சேனை | தொழிலில் தற்போது உள்ள சேனை | | வெற்றிடம் | |
|---|---|---|---|---|---|
| | | நிலையானது | ஒப்பந்தம் | அடக்கப்பட்டது | நிரப்ப வேண்டியவை |
| பணிப்பாளர் நாயகம் | 1 | - | 1 | | - |
| பிரதி பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | | | - |
| பணிப்பாளர்கள் | 11 | 6 | | 1 | 4 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 5 | 2 | | | 3 |
| முகாமையாளர்கள் | 8 | 5 | | | 3 |
| சிரேஷ்ட நிறைவேற்றுனர்கள் | 43 | 9 | | | - |
| நிறைவேற்றுனர்கள் | | 27 | | | 7 |
| நிறைவேற்றுனரல்லாதோர் | 17 | 17 | | | - |
| சிரேஷ்ட அலுவலக உதவியாளர்கள் | 10 | 6 | | | |
| அலுவலக உதவியாளர்கள் | | 1 | | | |
| அலுவலக துணைவர் | | 1 | | | 2 |
| மொத்தம் | 96 | 75 | 1 | 1 | 19 |

2012 டிசம்பர் 31இல் 26 ஆண்களும் 56 பெண்களும் உள்ளடங்களாக மொத்தம் 76 ஊழியர்கள் இ.பி.ப.ஆணைக்குழுவில் சேவையாற்றினார்கள். வருடத்தின் இறுதியில் உள்ளவாறான ஊழியர்களது சேனைகளின் கூட்டு, சேவை ஆய்வியல், பால் ஆய்வியல் மற்றும் வயது ஆய்வியல் என்பன வரைபடங்களின் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*உருவம் 20:* **சேவையிலுள்ளவர்கள்**




*உருவம் 21:* **பால் ஆய்வியல்**



*உருவம் 22:* **ஊழியர்களது வயது ஆய்வியல்**




*உருவம் 23:* **சேவைக்காலம்-வருடங்கள் %**




### பயிற்சியும் அபிவிருத்தியும்

ஊழியர்களது திறன்களை அவர்களது அதி உயர்ந்த மட்டத்திற்கு விருத்தி செய்வதானது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உந்துதலாக இருக்கும் என நாம் நம்புகின்றோம். எனவே இ.பி.ப.ஆ. ஊழியர்களுக்கு ஏனைய நியாயாதிக்கங்களில் போதுமான அளவு அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டங்களாவன ஏனைய முறைமைப்படுத்தல் முகவர்களமைப்புகளில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு போதிப்பதுடன் விடயம் தொடர்பான ஆய்வுகள் ஏனைய முறைமைப்படுத்துபவர்கள் முகங்கொடுக்கும் முறைமைப்படுத்தல் சிக்கல்கள் மற்றும் மூலதனச் சந்தைகள் முறையாக மற்றும் சிறப்பாக முறைமைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி போதுமான அளவு செயல்முறை விளக்கமளிக்கின்றது. ச.பி.ஆ.ஒ. மற்றும் ஏனைய மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் முகவரமைப்புகள், ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு போன்றவற்றிற்கு அவர்களது ஒத்துழைப்பு மற்றும் எமது ஊழியர்களுக்கு பாரியளவு நன்மை பயக்கும் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்காகவும் எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உருவம் 24:* **பயிற்சி**




இ.பி.ப.ஆணைக்குழுவின் பயிற்றுவித்தல் அங்கமானது ஊழியர்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை பற்றிய அறிவினைத் தரமுயர்த்துவதற்காக மூலதனச் சந்தை தொடர்பான பாடத்திட்டங்களை பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதனைத் தவிர இ.பி.ப.ஆணைக்குழு ஊழியர்களுக்கு மேல்நிலை கல்வியை, பட்டப்படிப்பின் பின்னரான பல்கலைக்கழகப் பட்டம் உள்ளடங்களாக, தொடர்வதற்கான அனுசரணையினை வழங்குகின்றது. இது அவர்கள் அப்பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் இ.பி.ப.ஆணைக்குழுவில் இரண்டு வருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதாகும். மீளாய்வாண்டில் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (IFRS) மற்றும் தமிழ் மொழி ஆகியவற்றில் அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

இதற்கும் மேலாக ஊழியர்கள் பொருத்தமான உள்ளூர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றார்கள். இவை வங்கியல் கற்கைக்கான மையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிதியியியல் நிறுவனங்களில் மோசடிக் கண்டுபிடிப்பு, இடர்நேர்கையினை அடிப்படையாகக்கொண்ட கணக்காய்வுகள், பொருள்/சேவைக் கொள்வனவு முகாமைத்துவம் மற்றும் விலைக்கோரல் செய்முறைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியிருந்தது. மேலும் வருடாந்த வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது "தனிப்பட்ட ஒழுக்கம்" மற்றும் "பயிற்சித் தேவைகள் பகுப்பாய்வு" போன்ற தலைப்பகளை அடிப்படையாகக்கொண்டு ஓர் மனித வள ஆசான் ஒருவரினால் நடாத்தப்பட்டது.

இ.பி.ப.ஆ. 2012 இல் ரூ. 18,961,965/= ஐ உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சிகளுக்கு செலவழித்தது. இது 2011 இல் ரூ12,362,617/= ஆகக் காணப்பட்டது.

### *ஊழியர் உட்படுத்துகை*

இ.பி.ப.ஆணைக்குழுவின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கும் இ.பி.ப.ஆணைக்குழுவின் மூலோபாய நோக்கங்களை அடைவதற்காக பல்-தொழிற்பாட்டு குழுக்களில் சேவையாற்றுவதன் மூலம் திறமையுள்ள கருத்துக்களை வழங்குவதற்கும் ஊழியர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

### *ஊழியர் வெகுமதியளித்தல்*

வெகுமதி முகாமைத்துவத்தினை முறையான விதத்தில் அணுகுவதனை நோக்காகக் கொண்டு மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் தலைவரையும் இரண்டு ஆணைக்குழு அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய ஓர் ஊதியக் குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு ஊழியர்களின் சுமையை ஓரளவு குறைப்பதற்காக ஓர் இடைக்கால வேதன உயர்வினை வழங்குமாறு சிபாரிசு செய்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்டது. இ.பிப.ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு ஓர் பொருத்தமான வெகுமதி முகாமைத்துவக் கொள்கையினை வகுப்பதற்காக வேதன முறையொன்றில் நிதானமான கற்கையொன்றை மேற்கொள்ளும் வரைக்கும் இந்த இடைக்கால அதிகரிப்பு வழங்கப்பட்டது.

# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### *ஊழியர் நலன்கள்*

ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பலவிதமான நலன்புரி வசதிகளுக்கு மத்தியில் மருத்துவ மற்றும் ஆரோக்கியக் காப்புறுதித் திட்டங்கள், கடன் திட்டங்கள், வட்டி மானியம் போன்றவற்றிற்கு நாம் தொடர்ச்சியாக வசதியளித்தோம். ஊழியர்களது வெகுமதிகளையும் உள்ளடக்கியதான "தொழிலில் திருப்தி" என்பதனை விசாரித்தறிவதற்காக ஓர் கருத்தாரய்வு நடாத்தப்பட்டது.

விளையாட்டுத் தினம் மற்றும் நத்தார் விருந்து போன்ற வருடாந்த நிகழ்ச்சி நிரல்கள் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் பரஸ்பர உணர்வுடன் நடந்துகொள்வதற்கு வசதியளிக்கின்றது. இது ஊழியர்களது மனவுறுதியை ஊக்குவிப்பதற்கும், மறைந்துள்ள ஊழியர்களது சாமர்த்தியத்தை இனங்காற்பதற்கும், ஒவ்வொருவருக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தவும் மற்றும் இ.பி.ப.ஆ. குடும்பத்தின் ஐக்கியத்தை மேம்படுத்தவும் துணைபுரிந்தது.

### *கற்கைப் பயிற்சி*

இ.பி.ப.ஆணைக்குழுவின் தொழிற்பாடு தொடர்பான அனுபவத்தினைப் பெறும்பொருட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு இ.பி.ப.ஆ. தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டியது.

### 25ஆம் ஆண்டுவிழா

இ.பி.ப.ஆ. 25 ஆம் ஆண்டில் கால் பதித்தவேளை இ.பி.ப.ஆ., அதன் தற்போதைய மற்றும் கடந்த தலைவர், ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்களின் மேல் பல் சமய ஆசீர்வாதங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இ.பி.ப.ஆணைக்குழுவில் சேவையாற்றும் ஊழியர்களை. முக்கியமாக நீண்ட காலமாக சேவையாற்றும் ஊழியர்களுக்கு, பாராட்டுவதற்குத் தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட்டது. பாராட்டுக் கொடைகளின் கையளிப்பானது தொடர்ந்து வருகின்ற வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்பம்

மீளாய்வாண்டில் கனணி வழங்கியினை மெய்நிகர்ப்படுத்தல் திட்டமானது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மெய்நிகர்ப்படுத்தலானது பின்வரும் வணிக மற்றும் செயற்பாட்டு நலன்களை இ.பி.ப.ஆ. க்குக் கொண்டுவருகின்றது. வளங்களின் திறனான பயன்பாடு, செலவினங்களைக் குறைத்தல், வணிகத் தொடர்ச்சியினை மேம்படுத்தல் மற்றும் அதிகரிக்கும் வணிக விரைவியக்கத்துடனான மீட்சி முகாமைத்துவம் என்பனவாகும். மெய்நிகர்ப்படுத்துதலானது குறைவான தகவல் தொழில்நுட்ப முறையின் செயலிழப்பிற்கும் விரைவான வழங்கி புனருத்தாரனத்திற்கும் வசதியளிப்பதுடன் இதனால் செயலிழப்பு நேரத்தின் கிரயத்தைக் குறைப்பதற்கும் நிறுவகத்தின் நன்மதிப்பினை மேம்படுத்துவற்கும் கூடியதாயுள்ளது.

இவ்வாண்டில் மூலதனச் சந்தைக் கற்கை மற்றும் பயிற்றுவித்தல் (மூ.ச.க.ப.) பிரிவின் இணையத்தளமானது மும்மொழி உள்ளடக்க முகாமைத்துவ முறையுடன் (மு.மு.மு.) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வாண்டில் தன்னியக்க ஊழியர் வருகை முகாமைத்துவ முறையானது வெற்றிகரமாக நிருவப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இம்முறையானது முகாமைத்துவ அறிக்கைகளுடன் ஊழியர் வருகை, லீவு, மேலதிக நேரம், காரியாலயத்திலிருந்து வெளியேறிய நேரப்பதிவு போன்றவற்றினை கையாளும் திறனுடையதாகும்.

### சர்வதேச உறவுகள்

ச.பி.ஆ.ஒ. இன் ஓர் அங்கத்தவர் என்ற ரீதியில் இ.பி.ப.ஆ. ச.பி.ஆ.ஒ. இன் வெளித்தோன்றும் சந்தைகள் குழுவுடன் (வெ.ச.கு.) ஓர் நிலையான தொடர்பினை பேணியுள்ளது. இ.பி.ப.ஆணைக்குழுவுக்கும் ச.பி.ஆ.ஒ. க்கும் இடையே 2008 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பலனாக உலகளாவிய சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (உ.ச.நி.அ.நி.) தரவுத்தளத்திற்கான நுழைவுரிமையைப் பெற்றுள்ளோம்.

மீளாய்வாண்டில் ஏனைய நியாயாதிக்கங்களிலிருந்து உதவி கோரப்படும்போது தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான விரிவான கருத்தாய்வுகளுக்குப் பதிலளித்தோம். வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும் வர்த்தக அறிவுறுத்தல்களது ஒலிநாடாப் பதிவுகளை பேணுவது சம்பந்தமாக பங்குத்தரகர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக இ.பி.ப.ஆணைக்குழுவானது ச.பி.ஆ.ஒழுங்கமைப்பின் அங்கத்தவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டது. தரகர்கள் தங்களது சொந்தக் கணக்கில் ஏனைய தரகர்களூடாக மேற்கொள்ளும் வர்த்தகம் மற்றும் இடர்நேர்கை அடிப்படையிலான மேற்பார்வை தொடர்பான சிக்கல்கள் என்பவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கருத்தாய்வுகளுக்கும் இ.பி.ப.ஆ. பதிலளித்தது.

## சட்டபூர்வமான நிதியங்கள்

### தீர்வை நிதியம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14A மற்றும் 14B பிரிவுகளும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டமும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது.

*14* A

(1) அமைச்சரின் உத்தரவின் பேரில் குறிப்பிடப்பட்ட ஓர் கட்டணம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விற்பனையிலும் தீர்வையாக கோரி வசூல் செய்து செலுத்தப்படவேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்டசட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படவேண்டும்.

*14* B

(1) 14 A பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வக நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படவேண்டும்.

2) ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வக நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம்:

அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு

ஆ) 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நட்ட ஈட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்தல்

இ) ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வக நிதியத்திலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும்.

இ.பி.ப.ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தீர்வகக் கட்டணமானது பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக 2010 ஆகஸ்ட் 01 முதல் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து 0.072% ஆகக் குறைக்கப்பட்டது. முன்னைய குறைப்பானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாந் திகதி தொடக்கம் பிரயோகத்திலுள்ள தீர்வகக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

2006 பெப்ரவரி தொடக்கம் வாடிக்கையாளர்களின் ஒரே நாளில் இடம்பெறும் வர்த்தகங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு தீர்வையானது ஒரு பக்கத்து கொடுக்கல் வாங்கலுக்கு அறவிடப்படமாட்டாது.

(அ) கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது.

(ஆ) வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை விற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் இரண்டாவதாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கு, அது விற்பனையாகவோ அல்லது கொள்வனவாகவோ இருக்கலாம், அறவிடப்படமாட்டாது.

ஒரே நாள் வர்த்தகம் என்று குறிப்பிடுவது என்னவெனில், ஒரு முதலீட்டாளர் ஒரே பிணையை ஒரே நாளில் ஒரே தரகரூடாக வாங்கி விற்றல் அல்லது விற்று வாங்குதல் ஆகும்.

நட்டஈட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்குச் சமமாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மாற்றல் செய்யப்பட்டது. 30.09.2010 இல் ரூபா 276 மில்லியனும் 24.09.2012 இல் ரூபா 380 மில்லியனும் திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன.

2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் இத்தீர்வக நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 2,097,495,265/= ஆகும்.

2002 – 2012 வரையான காலப்பகுதியில் தீர்வை நிதியத்தின் வளர்ச்சியானது கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

*உருவம் 25:* **தீர்வை நிதியத்தின் வளர்ச்சி**



# செயல்முறை மீளாய்வு *தொடர்ச்சி.*

### தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் T+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை T+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு அச்சத்திற்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி.
- இலங்கை அரசாங்கமானது சொல்லப்பட்ட இந்த நிதியத்திற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி நியதிகளுக்கமைய அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சமனாக இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிமாற்றகமும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்வதற்கு இணங்கியுள்ளது.

எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு தீர்வக கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் இந்நிதியத்தின் வரவில் உள்ள மீதி ரூபா 499,903,661/= ஆகும். 357 மில்லியன் ரூபாவாகும். 2002 முதல் 2012வரையான காலப்பகுதியில் தீ.உ.நிதியத்தின் வளர்ச்சியானது கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 26)

*உருவம் 26:* **தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் வளர்ச்சி**



## நட்டஈட்டு நிதியம்

1987 இல் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு நட்டஈட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (திருத்தியமைக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

- உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு நட்டஈடு வழங்கும் பொருட்டு நட்ட ஈட்டு நிதியமொன்று நிறுவப்படல் வேண்டும்.
- இந்த நட்ட ஈட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இந்நிதியத்தின் நோக்கத்திற்காகப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணத்தொகைகள்.
    - 51 ஏ பிரிவின் கீழ் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய பணத்தொகைகள். (51 ஏ பிரிவானது தவறுகளுக்கான ஒத்திணங்குதல் பற்றியது.)
    - இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14 பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படும் பணத்தொகைகள்.
- நட்டஈட்டு நிதியத்திலுள்ள பணத்தொகைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க முதலீடு செய்யப்படலாம்.

அமைச்சர் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்து நட்டஈட்டுக் குழுவை நியமிக்கவேண்டும்.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் நட்டஈட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது நட்டஈட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை நட்டஈடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். நட்டஈட்டு நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதுநாள்வரை நட்டஈட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

31.12.2012 இல் இந்த நட்டஈட்டு நிதியத்தின் வரவு மீதி ரூபா 237,461,686/= ஆகும். 2002 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் நட்டஈட்டு நிதியத்தின் வளர்ச்சி கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 27)

*உருவம் 27:* **நட்ட ஈட்டு நிதியம்**



# மேலதிகத் தகவல்கள்

**பதிவிடப்பட்ட சந்தை இடையீட்டாளர்கள்**

**2012 டிசம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளோர்**

எல்லை வழங்குநர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் ஒப்புரவாளர்கள் ஆகிய பிரிவுகளில் பதிவீடு செய்யப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்கள் கீழே தரப்பட்டுள்ளனர்.

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | x | x | x |
| அதெல் கெப்பிட்டல் லிமிட்டட் | | x | |
| அதெல் ஈக்யுட்டீஸ் லிமிட்டட் | x | | |
| அமானா கெப்பிட்டல் லிமிட்டட் | | x | |
| ஆர்ப்பிக்கோ அட்டரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| ஆஷா வைனான்சியல் சேர்விசஸ் லிமிட்டட் | x | | |
| ஏஷியா வெல்த் மெனேஜமன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| ஏசியன் வைனான்ஸ் லிமிட்டட் | x | | |
| ஏஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| இலங்கை வங்கி | | x | x |
| பாட்லீட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| பாட்லீட் வைனான்ஸ் லிமிட்டட் | x | | |
| பாட்லீட் ட்ரான்ஸ் கெப்பிட்டல் லிமிட்டட் | | x | x |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் வைனான்ஸ் கம்பனி லிமிட்டட் | x | | |
| கெப்பிட்டல் எலாயன்ஸ் செகியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட | | x | |
| கெப்பிட்டல் ட்ரஸட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட் | x | | |
| கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| சிலோன கார்டியன் இன்வெஸ்ட்மன்ட் ட்ரஸ்ட் பி.எல்.சி. | | | x |
| சிலோன் இன்வெஸ்ட்மன்ட் பி.எல்.சி. | | | x |
| கொஹோார்ட் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| கொமர்'ல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி | x | | x |
| கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| டீஎவ்சிசி வர்தன பேங்க் லிமிட்டெட் | x | | |
| வெஸ்ட் கெப்பிட்டல் எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| வெஸ்ட் கெப்பிட்டல் மார்க்கட்ஸ் லிமிட்டெட் | x | | |
| ஜோர்ஜ் ஸ்டுவர்ட் வைனான்ஸ் லிமிட்டட் | x | | |
| குார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| ஹட்டன் நஷனல் பேங்க் பி.எல்.சி. | x | | x |
| ஹெரய்மிலா கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| ஹெரய்மிலா வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| ஹொரய்ஸன் எசட் லிமிட்டட் | | x | |
| ஐஐஎவ்எல் கெப்பிட்டல் சிலோன் லிமிட்டட் | | x | |

| கம்பனி | எல்லை வழங்குநர்கள் | முதலீட்டு முகாமையாளர்கள் | ஒப்புரவாளர்கள் |
|---|---|---|---|
| இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| ஜேபி கிரடிட்(பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| ஜேபி வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| கெனகா இன்வெஸ்ட்மன்ட் கோர்ப்பரேஷன் லிமிட்டட் | | x | |
| எல்பி வைனான்ஸ் பி.எல்.சி. | x | | |
| எல்ஆர் குளோபல் லங்கா எசட் மெனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| லங்கா ஓரிக்ஸ் வைனான்ஸ் கம்பனி லிமிட்டெட் | x | | |
| லெக்ஸின்டன் வைனான்ஸியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| லீஜ் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா பி.எல்.சி. | x | x | x |
| நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட் | x | | |
| நெஷனல் எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி. | x | | x |
| நெஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிட்டட் | | x | |
| என் டி பி அவீவா வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | | x | |
| என் டி பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.வி. | | | x |
| என்டபிள்யுஎஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| ஓரியன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி. | x | | |
| பீப்பல்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டெட் | x | | |
| பீப்பல்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் கம்பனி | x | | |
| ரிச்சர்ட் பீரிஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட் | x | | |
| சம்பத் பேங்க் பி.எல்.சி | x | | |
| சனச எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட் | | x | |
| செலான் பேங்க் பி.எல்.சி. | x | | |
| சிங்கர் வைனான்ஸ் (லங்கா) லிமிட்டட் | x | | |
| சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் லிமிட்டட் | | x | |
| சொவ்ட்லொஜிக் வைனான்ஸ் பி.எல்.சி. | x | | |
| டிகேஎஸ் வைனான்ஸ் லிமிட்டட் | x | x | |
| யூனியன் பேங் ஒப் கொழும்பு லிமிட்டெட் | x | | |
| வோல்டொக் மெகென்ஸி லிமிட்டெட் | x | x | |

**தீர்வக இல்லம் எனும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:**

சென்ரல் டிபொசிடரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

**கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:**

விச் ரேடிங்ஸ் லங்கா லிமிட்டெட்
ராம் ரேடிங்ஸ் (லங்கா) லிமிட்டெட்
ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டெட்

# மேலதிகத் தகவல்கள் *தொடர்ச்சி.*

**புங்குத் தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள்**

**31 டிசம்பர் 2012 இல் உள்ளவாறான உரிமம் பெற்ற பங்குத் தரகர்கள் மற்றும் பங்கு வர்த்தகர்கள்**

| கம்பனி | பங்குத்தரகர் | பங்கு வர்த்தகர் | |
|---|---|---|---|
| | | பங்குப் பிணையங்களின் வர்த்தகர் | கடன் பிணையங்களின் வர்த்தகர் |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) எக்யூட்டி பங்குத்தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) அரெங்கா கெப்பிட்டல் | x | | |
| வரையறுக்கப்பட்ட ஆஷா பிலிப் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) ஏசியா பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) எஸட்லைன் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) பாட்லீட் ரெலிகெயார் பங்குத்தரகர்கள் | x | x | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) கெப்பிட்டல் எலையன்ஸ் பிணையங்கள் | x | x | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) கெப்பிட்டல் ட்ரஸ்ட் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) நேஷன் லங்கா பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) கௌரிஜ் பங்குத்தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) சி. டீ. சிமித் பங்குத்தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) டி.என்.எச். பைனான்சியல் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) வெஸ்ட் கார்டியன் ஈக்கியூட்டிஸ் | x | | |
| வரையறுக்கப்பட்ட ஹெரெய்மிலா பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) ஐஐஎவ்எல் பிணையங்கள் சிலோன் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) ஜே.பி. பிணையங்கள் | x | x | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) ஜோன் கீல்ஸ் பங்குத் தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட எல்ஓஎல்சி பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) நியூ வேல்ட் பிணையங்கள் | | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) என்.டி.பி. பங்குத் தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) ரிச்சர்ட் பீரிஸ் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) எஸ்.சி. பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) எஸ்.கே.எம். லங்கா ஹோல்டிங்ஸ் | x | x | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) எஸ்.எம்.பி. பிணையங்கள் | x | x | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) சமர்வில் பங்குத்தரகர்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) டெப்ரபேன் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட (தனியார்) டிகேஎஸ் பிணையங்கள் | x | | |
| வரையறுக்கப்பட்ட வெஸ்ட் கெப்பிட்டல் சந்தைகள் | x | x | x |

**நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்**

கீழ்காணும் கம்பனிகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை நிர்வகிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது:

1. **சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டெட்**
   சிலோன் இன்கம் வன்ட்
   சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
   சிலோன் டுஹரிசம் வன்ட்
   சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
   சிலோன் ஐபிஓ வன்ட்
   சிலோன் எம்டிஐ ஷரியா வன்ட்
   சிலோன் குளோபல் கம்பக்ட் சஸ்டேனபிலிட்டி வன்ட்
   சிலோன் கிள்ட் எட்ஜ் வன்ட்

2. **கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்**
   கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
   கிரசன்ட் ஐ வன்ட்
   கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்
   கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்

3. **என்டிபி அவீவா வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   ஈகள் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
   ஈகள் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
   ஈகள் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   ஈகள் குரோத் வன்ட்
   ஈகள் மணி வன்ட்
   ஈகள் மணி பிளஸ் வன்ட்

4. **சீ பேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்**
   சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட்
   சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
   சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (மூடிய நிதியம்)
   சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மனி மார்க்கட் வன்ட்
   சீபேங்க் சுரகும்

5. **நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   நாமல் இன்கம் வன்ட்
   நாமல் மணி மார்க்கட் வன்ட்
   நெஷனல் இக்யுடி வன்ட்
   நாமல் குரோத் வன்ட்
   நாமல் கில்ட் எட்ஜட் வன்ட் 1 (மூடிய நிதியம்)
   நாமல் எக்யூட்டி வெலியு வன்ட் (மூடிய நிதியம்)
   நாமல் ஐபிஓ வன்ட்
   நாமல் ஐ ஈல்ட் வன்ட்
   நாமல் ஷரியா வன்ட்

6. **வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

7. **ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்**
   ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
   ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

8. **கார்டியன் எக்யூட்டி எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**
   கார்டியன் எக்யூட்டி இக்யுடி வன்ட்
   கார்டியன் எக்யூட்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்

9. **ஹெரய்மிலா கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்**
   ஸ்ரீலங்கா ஹெரய்மிலா கெப்பிட்டல் குரோத் வன்ட்
   அமானா ஹெரய்மிலா ஷாரியா வன்ட்

10. **எசட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**
    எஸட்ரூ கில்ட் எஜ் வன்ட்

11. **கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட்**
    கெப்பிட்டல் எலாயன்ஸ் ஐ ஈல்ட் வன்ட்
    கெப்பிட்டல் எலாயன்ஸ் கில்ட் வன்ட்
    குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்

12. **ஆர்பிக்கோ ஹடரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**
    கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
    எப்சலூயிட் வெல்யூ வன்ட்

13. **ஓரியன்ட் வெல்த் லிமிட்டட்**
    ஓரியன் கோப்பரேட் டெட் வன்ட்
    ஓரியன் இக்யுடி வன்ட்
    ஓரியன் கில்ட் எட்ஜ் வன்ட்

# செய்கைப் பத்திரம்

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்) பங்குகள் | 110,453.90 | 142,462.65 | 570,326.82 | 546,255.80 | **213,827.2** |
| உள்ளூர் (ரூ.மில்.) | 50,796.90 | 99,010.83 | 464,733.62 | 486,959.40 | **160,543.3** |
| வெளியூர் (ரூ.மில்) | 59,656.90 | 43,451.82 | 105,593.20 | 59,296.40 | **53,283.9** |
| சந்தை நாட்கள் (எண்ணிக்கை) | 238 | 240 | 238 | 239 | **242** |
| தினசரி சராசரிப் புரள்வு (ரூ.மில்.) பங்குகள் | 464.1 | 593.6 | 2,396.33 | 2,285.60 | **883.6** |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) | 3,154.90 | 4,762.70 | 18,489.19 | 24,543.70 | **9,691.2** |
| உள்ளூர் (எண்.மில்.) | 1,934.90 | 3,784.20 | 16,684.45 | 23,151.60 | **8,289.6** |
| வெளியூர் (எண்.மில்) | 1,220.00 | 978.42 | 1,804.74 | 1,392.10 | **1,401.7** |
| வர்த்தகங்கள் (எண்ணிக்கை) பங்குகள் | 776,244 | 1,266,299 | 3,355,126 | 4,579,352 | **1,857,384** |
| உள்ளூர் (எண்ணிக்கை) | 730,415 | 1,190,822 | 3,225,041 | 4,463,404 | **1,796,868** |
| வெளியூர் (எண்ணிக்கை) | 45,829 | 75477 | 130,085 | 115,948 | **60,516** |
| புதிய பட்டியலிடல்கள் (எண்ணிக்கை) | 3 | 3 | 10 | 32 | **17** |
| பட்டியலிலிருந்து அகற்றப்பட்டவை (எண்ணிக்கை) | 2 | 6 | 1 | 0 | **2** |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகள் (எண்ணிக்கை) | 235 | 231 | 241 | 272 | **287** |
| வர்த்தகம் நடைபெற்ற கம்பனிகள் (எண்ணிக்கை) | 232 | 231 | 238 | 265 | **280** |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.) | 488.8 | 1,092.10 | 2,210.45 | 2,213.90 | **2,167.6** |
| சந்தை வி.உ.வி. வருட இறுதி (மடங்கு) | 5.4 | 16.6 | 25.16 | 15.8 | **15.9** |
| புரள்வு சந்தை மூலதனவாக்கத்திற்கு (%) | 16.9 | 18 | 34.5 | 24.7 | **9.8** |
| பங்கிலாப விளைவு வருட இறுதி (%) | 5.6 | 3 | 1.16 | 1.8 | **2.4** |
| விலை புத்தகப் பெறுமதி வருட இறுதி (மடங்கு) | 0.8 | 1.7 | 2.98 | 2 | **2.1** |
| சந்தை மூலதனவாக்கம் மொ.உ.உ. இன் % ஆக | 11.1 | 22.6 | 39.4 | 33.8 | **29.0** |
| **விலைச் சுட்டிகள்** | | | | | |
| அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) | 1,503.00 | 3,385.55 | 6,635.87 | 6,074.40 | **5,643.0** |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | (40.9) | 125.25 | 96.01 | (8.5) | **(7.1)** |
| மிலங்கா விலைச் சுட்டி (மி.வி.சு.) | 1,631.30 | 3,849.38 | 7,061.46 | 5,229.20 | **5,119.1** |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | (50.4) | 135.97 | 83.44 | (25.9) | **(2.1)** |
| எஸ் அன்ட பி ஸ்ரீலங்கா 20 | | | | | **3085.3** |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | | | | | **-** |
| **மொத்த வருமானச் சுட்டிகள்** | | | | | |
| அபவிசு இல் மொத்த வருமானச் சுட்டி(அபமொவசு) | 1,783.60 | 3,944.90 | 7,899.11 | 7,362.83 | **7037.3** |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | (38.1) | 121.18 | 100.24 | (6.79) | **(4.4)** |
| மிவிசு இல் மொத்த வருமானச் சுட்டி(மிமொவசு) | 1,962.50 | 4,506.24 | 8,481.73 | 6,393.00 | **6399.4** |
| வருடத்திற்கு வருட மாற்றம் % | (47.3) | 129.6 | 88.22 | (24.63) | **0.1** |
| **தேசியமல்லாத நடவடிக்கைகள்** | | | | | |
| வருடாந்தப் புரள்வு (ரூ.மில்) | 59,656.90 | 43,451.82 | 105,593.20 | 59,296.40 | **53,283.9** |
| கொள்வனவுகள் (ரூ.மில்.) | 66,632.20 | 43,057.32 | 92,425.53 | 49,776.80 | **72,614.2** |
| விற்பனைகள் (ரூ.மில்.) | 52,681.70 | 43,846.32 | 118,760.87 | 68,816.00 | **33,953.6** |
| **தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல்** | **13,950.50** | **(789)** | **(26,335.34)** | **(19,039.20)** | **38,660.7** |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.) | 1,220.00 | 978.41 | 1,804.74 | 1,392.11 | **1,401.7** |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை மில்.) | 1,286.20 | 908.97 | 1,541.49 | 1,186.80 | **1,520.6** |
| விற்பனைகள் (எண்ணிக்கை மில்.) | 1,153.90 | 1,047.87 | 2,067.99 | 1,597.42 | **1,282.7** |
| வர்த்தகங்கள் | 45,829 | 75,477 | 130,085 | 115,948 | **60,516** |
| கொள்வனவுகள் (எண்ணிக்கை) | 50,052 | 69,431 | 115,071 | 112,246 | **71,944** |
| விற்பனைகள் (எண்ணிக்கை) | 41,606 | 81,523 | 145,100 | 119,651 | **49,088** |

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| **கடன் சந்தை** | | | | | |
| *கம்பனிக் கடன்கள்* | | | | | |
| புரள்வு (ரூ. 000) | 102,639.30 | 136,765 | 72,288 | 2,690,664.40 | **75,717.1** |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 27 | 42 | 92 | 62 | **39** |
| வர்த்தகம் செய். தொ.க.எண்ணிக்கை (000) | 953.5 | 1,020 | 693 | 25,861 | **740.4** |
| சந்தை மூலதனவாக்கம் (மில்.) | N/A | N/A | N/A | | **46,311.0** |
| *அரசாங்கக் கடன்கள்* | | | | | |
| புரள்வு (ரூ. 000) | 195,157.40 | 98,977 | 45,673 | 28,356.80 | **6,128.0** |
| வர்த்தகங்களின் எண்ணிக்கை | 69 | 42 | 18 | 7 | **2** |
| வர்த்தகம் செய். பிணை..எண்ணிக்கை (000) | 208,182.60 | 102,778 | 46,794 | 28,912 | **6,743.6** |
| **நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்** | | | | | |
| தேறிய சொத்தின் பெறுமதி (ரூ.மில்.) | 6,780 | 9,952 | 22,228 | 24,059 | **31,062** |
| அலகுடமையாளர்கள் (எண்ணிக்கை) | 22,685 | 23,117 | 24,649 | 26,636 | **27,952** |
| வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000) | 638,112 | 564,500 | 1,159 | 1,506 | **2,251** |
| பங்குகளில் முதலீடு (ரூ.மில்.) | 2,589 | 6,036 | 11,349 | 9,555 | **8,944** |
| தி.உண்டியல்களில் முதலீடு (ரூ.மில்.) | 2,903 | 3,363 | 9,289 | 10,326 | **5,449** |
| ஏனைய முதலீட்டுக்கருவிகளில் முதலீடு** (ரூ.மில்.) | 1,293 | 1,106 | 1,223 | 4,186 | **16,596** |

*மூலம்: கொ.ப.ப., நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்*

** *வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் வங்கி வைப்புகள்*

## நிதிக்கூற்றுக்கள் - இ.பி.ப.ஆ.

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 56 |
| நிதி நிலைமைக் கூற்று | 58 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 59 |
| ஒதுக்கங்களின் மாற்றல்களுக்கான கூற்று | 60 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 61 |
| காசுப் பாய்ச்சல் கூற்று (தீர்வை நிதியம்) | 62 |
| காசுப் பாய்ச்சல் கூற்று (நட்டஈட்டு நிதியம்) | 63 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 64 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 66 |

## நிதிக்கூற்றுக்கள் - தீ.உ.நி.

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 75 |
| நிதி நிலைமைக் கூற்று | 78 |
| நிதிச் செயற்திறன் கூற்று | 79 |
| தேறிய சொத்துக்களின் மாற்றங்களுக்கான கூற்று | 80 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 81 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 82 |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமைஅதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / MyNo. எப்பீ/கே/எஸ்ஈசீ/எப்ஏ/2012
ඔබේ අංකය / உமது இல / No.
දිනය / திகதி / Date 2013 மே 30

தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 36 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72,பொல்துவவீதி, பத்தரமுல்லை இலங்கை | No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
දුරකථනය / தொலைபேசி 2887228-34 | ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223 | ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- nkapy;oaggov@sltnet.lk / E-mail.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**நிதிக் கூற்றுக்கள்**

**அபிப்பிராயம்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய எனது அறிக்கை காலக்கிரமத்தில் அவைக்குச் சமர்ப்பிக்கப்படும்

எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதி நிலைமைக் கூற்று

*2012 டிசம்பர் 31 இல்*

| | குறிப்புகள் | 2012 ரூ. | 2011 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி,உபகரணங்கள் | 1 | **56,412,469** | 61,322,318 |
| | | | |
| தீர்வை நிதியம் | 2 | **37,905,567** | 34,083,560 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 4 | **628,884** | 530,456 |
| வருமதிகள் | 5 | **1,784,380** | 855,030 |
| தீர்வை நிதியம் | 2 | **2,059,189,357** | 2,205,795,838 |
| நட்ட ஈட்டு நிதியம் | 3 | **237,461,686** | 216,312,628 |
| வைப்புகள், முற்பணம், முற்கொடுப்பனவுகள் | 6 | **4,915,002** | 2,512,899 |
| காசும் காசுக்குச் சமனானவையும் | 7 | **28,105,784** | 27,691,271 |
| | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **2,426,403,129** | **2,549,104,000** |
| | | | |
| **நிதியங்களும் பொறுப்புகளும்** | | | |
| **ஈடுபடுத்தப்பட்ட நிதியங்களும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதியம் | 8 | **9,508,525** | 12,556,660 |
| தீர்வை நிதியம் | 9 | **2,097,094,924** | 2,239,879,398 |
| நட்ட ஈட்டு நிதியம் | 10 | **237,461,686** | 216,312,627 |
| | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| குத்தகைக் கடன் கொடுநர் | 11 | **619,317** | 2,367,534 |
| கொடை-தீர்வை நிதியத்திலிருந்து மூலதனச் செலவுக்கான மாற்றல்கள் | 12 | **50,050,720** | 52,925,802 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 13 | **20,012,197** | 14,427,557 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன் கொடுநர்களும் அட்டுறுக்களும் | 14 | **6,458,770** | 5,907,450 |
| பெற்ற முற்பணங்கள் | | **4,238,142** | 3,138,389 |
| குத்தகைக் கடன்கொடுநர்கள் | 11 | **958,848** | 1,588,583 |
| | | | |
| **மொத்த நிதியங்களும் பொறுப்புக்களும்** | | **2,426,403,129** | **2,549,104,000** |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக்கூற்றின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பொறுப்பானவர்களாவர்.

**இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும்**

**தம்மிக்க பெரேரா**
*பிரதி பணிப்பாளர் நாயகம் /பொறுப்பதிகாரி*
*இலங்கைப் பிணையங்கள் மற்றும்*
*பரிவர்த்தனை ஆணைக்குழு*

**நாலக கொடஹேவ**
*தலைவர்*
*இலங்கைப் பிணையங்கள் மற்றும்*
*பரிவர்த்தனை ஆணைக்குழு*

கொழும்பு.
17 மே 2013

# நிதிச் செயற்திறன் கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கானது*

| | குறிப்புகள் | 2012 ரூ. | 2011 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| தரகர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | **4,999,634** | 3,605,563 |
| நிர்வாகக் கட்டணங்கள் | | **1,487,168** | 3,204,082 |
| மூ.ச.க.ப. கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் | | **14,312,304** | 22,236,085 |
| கருத்தரங்கு வருமானம் - இ.பி.ப.ஆ. | | - | 77,657 |
| வெளியீடுகளின் விற்பனை | | **18,750** | 19,500 |
| நானாவித வருமானம் | | **1,894,972** | 96,751 |
| சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் / நட்டம் | | **321,865** | 1,748,847 |
| மானியங்களின் அங்கீகாரம் | 12 | **13,981,944** | 11,944,380 |
| | | **37,016,637** | **42,932,865** |
| **செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 15 | **(140,311,036)** | (114,022,626) |
| நிர்வாக, தாபனச் செலவுகள் | 16 | **(78,622,641)** | (72,645,015) |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவுகள் | 17 | **(24,478,437)** | (41,098,269) |
| நிதிச் செலவினங்கள் | 18 | **(102,328)** | (160,908) |
| | | **(243,514,442)** | **(227,926,818)** |
| இவ்வருடத்திற்கான வருமானத்திற்கும் மேலான மிகைச் செலவினம் | | **(206,497,805)** | (184,993,953) |
| தொழிற்பாட்டுச் செலவுகளை சந்திப்பதற்கு தீர்வை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்கள் | | **218,522,637** | 192,395,343 |
| **இவ்வாண்டிற்கான மிகை /(பற்றாக்குறை)** | | **12,024,832** | **7,401,390** |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# ஒதுக்கங்களின் மாற்றல்களுக்கான கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கானது*

| | குறிப்புகள் | ஒதுக்கங்கள் ரூ. | திரண்ட நிதியம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 2011 ஜனவரி 1 இல் இருந்தவாறான மீதி | | - | 15,433,620 | 15,433,620 |
| கழி: முன்னைய வருடச் செம்மையாக்கல்கள் | | - | (278,350) | (278,350) |
| திறைசேரி உண்டியலில் முதலீடு செய்வதற்காக தீர்வை நிதியத்திற்கு மாற்றல் | | - | (10,000,000) | (10,000,000) |
| | | - | 5,155,270 | 5,155,270 |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மேலான மிகைச் செலவினம் | | - | (184,993,953) | (184,993,953) |
| தீர்வை நிதியத்திலிருந்து நிதி மாற்றல்கள் | | - | 192,395,343 | 192,395,343 |
| இக்காலப் பகுதிக்கான தேறிய மிகை/பற்றாக்குறை | | - | 7,401,390 | 7,401,390 |
| **2011 டிசம்பர் 31 இல் இருந்தவாறான மீதி** | | - | **12,556,660** | **12,556,660** |
| 2012 ஜனவரி 1 இல் இருந்தவாறான மீதி | | - | 12,556,660 | 12,556,660 |
| முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கல்கள் | 23 | - | (5,072,967) | (5,072,967) |
| திறைசேரி உண்டியலில் முதலீடு செய்வதற்காக தீர்வை நிதியத்திற்கு மாற்றல் | | - | (10,000,000) | (10,000,000) |
| | | - | (2,516,307) | (2,516,307) |
| இவ்வருடத்திற்கான வருமானத்திலும் மேலான மிகைச் செலவினம் | | - | (206,497,805) | (206,497,805) |
| தீர்வை நிதியத்திலிருந்து நிதி மாற்றல்கள் | | - | 218,522,637 | 218,522,637 |
| இக்காலப் பகுதிக்கான தேறிய மிகை/பற்றாக்குறை | | - | 12,024,832 | 12,024,832 |
| **2012 டிசம்பர் 31 இல் இருந்தவாறான மீதி** | | - | **9,508,525** | **9,508,525** |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# காசுப் பாய்ச்சல் கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கானது*

| | குறிப்புகள் | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்து மாற்றங்கள் செய்யப்பட்ட பின் தேறிய மிகை / (பற்றாக்குறை) | | 12,024,832 | 7,401,390 |
| **சீராக்கல்கள்** | | | |
| பெறுமானத் தேய்வு | 1 | 15,333,194 | 15,081,465 |
| சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் / (நட்டம்) | | (321,865) | (1,748,847) |
| மானியங்களின் அங்கீகாரம் | 12 | (13,981,944) | (11,944,380) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 13 | 5,584,640 | 2,294,733 |
| முன்னைய ஆண்டுக்கான செம்மையாக்கல்கள் | | (5,072,967) | (278,350) |
| தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னரான தேறிய மிகை / (பற்றாக்குறை) | | 13,565,890 | 10,806,011 |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்** | | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு) / குறைவு | | (98,428) | 120,002 |
| பெறத்தக்கவைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (929,350) | 358,270 |
| வைப்புகள், முற்பணம், முற்பணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (2,402,103) | 5,044,650 |
| முற்பணப் பெறுகைகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 1,099,753 | 854,437 |
| கடன் கொடுநர், அட்டுறுகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 551,320 | (11,908) |
| | | (1,778,808) | 6,365,451 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு | | 11,787,082 | 17,171,462 |
| இவ்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | | - | (1,579,200) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | **11,787,082** | **15,592,262** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் கொள்வனவு | 1 | (11,106,862) | (23,419,657) |
| திறைசேரி உண்டியல் முதலீட்டிற்காக தீ.நி. கான மாற்றல் | | (10,000,000) | (10,000,000) |
| ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் விற்பனை வருமானம் | | 1,005,384 | 4,688,853 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | **(20,101,478)** | **(28,730,804)** |
| **நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| தீர்வை நிதியத்திலிருந்து மூலதன மாற்றல்கள் | 12 | 11,106,862 | 23,419,657 |
| நிதிக்குத்தகையில் அதிகரிப்பு (குறைவு) | | (2,377,952) | (6,368,350) |
| நிதியளித்தற் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | | **8,728,910** | **17,051,307** |
| காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | 414,513 | 3,912,765 |
| **இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் மமானவைகளும் (குறிப்பு - அ)** | | 27,691,271 | 23,778,506 |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - ஆ)** | | **28,105,784** | **27,691,271** |
| **குறிப்பு (அ)** | | | |
| **தொடக்கக் காலப்பகுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| வங்கியிலுள்ள காசு | | 27,651,271 | 23,738,506 |
| கையிலுள்ள காசு | | 40,000 | 40,000 |
| | | **27,691,271** | **23,778,506** |
| **குறிப்பு (ஆ)** | | | |
| **இக்காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | | |
| வங்கியிலுள்ள காசு | 7 | 28,065,784 | 27,651,271 |
| குறிப்பு (ஆ) | 7 | 40,000 | 40,000 |
| | | **28,105,784** | **27,691,271** |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

## தீர்வை நிதியம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கானது*

| | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| தீர்வை நிதியத்தின் தேறிய அதிகரிப்பு | **(142,784,474)** | 632,945,123 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தேறிய மிகை /(பற்றாக்குறை) | **(142,784,474)** | 632,945,123 |
| **தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்** | | |
| ஊழியர் கடன்களின் (அதிகரிப்பு) குறைவு | **(2,957,373)** | (4,573,091) |
| வருமதிகளின் (அதிகரிப்பு) / குறைவு | **807,815** | 4,391,217 |
| திறைசேரி உண்டியல் மீது பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) /குறைவு | **(6,817,772)** | 33,336,003 |
| அரச நிறுவனங்களின் மிகை நம்பிக்கை நிதியத்திலிருந்து பெறத்தக்க மூலதன இலாபங்களின் (அதிகரிப்பு / குறைவு) | **2,803,527** | 21,382,804 |
| வாடகை வைப்பின் (அதிகரிப்பு) / குறைவு | **(1,614,420)** | (538,140) |
| | **(7,778,223)** | 53,998,793 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்) | **(150,562,697)** | 686,943,916 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியத்தில் முதலீடு | **295,229,862** | (116,465,766) |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | **(140,967,272)** | (566,025,248) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | **154,262,590** | (682,491,014) |
| காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு (குறைவு) | **3,699,893** | 4,452,902 |
| இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - இ) | **5,003,346** | 550,444 |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - ஈ)** | **8,703,239** | **5,003,346** |
| **குறிப்பு (இ)** | | |
| **இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | **5,003,346** | (1,559,556) |
| மீள் கொள்வனவு முதலீடுகள் | - | 2,110,000 |
| | **5,003,346** | 550,444 |
| **குறிப்பு (ஈ)** | | |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | **2,193,239** | 5,003,346 |
| ஓரிரவுக்கான மீள் கொள்வனவு முதலீடுகள் | **6,510,000** | - |
| | **8,703,239** | 5,003,346 |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

## நட்ட ஈட்டு நிதியம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கானது*

| | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| நட்ட ஈட்டு நிதியத்தின் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | **21,149,059** | 28,547,974 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தேறிய மிகை / (பற்றாக்குறை) | **21,149,059** | 28,547,974 |
| **தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்** | | |
| பெறத்தக்க பிடித்து வைத்தல் வரியின் (அதிகரிப்பு)/குறைவு | **72,445** | - |
| திறைசேரி உண்டியல் மீது பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | **(6,311,998)** | 1,203,771 |
| | **(6,239,553)** | 1,203,771 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | **14,909,506** | 29,751,745 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு | **(14,910,633)** | (29,748,342) |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்சல்) | **(14,910,633)** | (29,748,342) |
| காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு (குறைவு) | **(1,127)** | 3,403 |
| இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - உ) | **88,715** | 85,312 |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு - ஊ)** | **87,587** | 88,715 |
| **குறிப்பு (உ)** | | |
| **இக் காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | **63,346** | 59,943 |
| அழைப்பு வைப்பு | **25,369** | 25,369 |
| | **88,715** | 85,312 |
| **குறிப்பு (ஊ)** | | |
| **இக் காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | **62,218** | 63,346 |
| அழைப்பு வைப்பு | **25,369** | 25,369 |
| | **87,587** | 88,715 |

64 முதல் 74 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஓர் இணைந்த பாகமாகவுள்ளது.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 அமைவுறல் கூற்று

இலாபமீட்டாத சட்டபூர்வமான அதிகாரசபையான இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கையின் அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரித்துள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

### 1.3 நிறுவனத் தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. இன் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இ.பி.ப.ஆ. எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இ.பி.ப.ஆ. எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இ.பி.ப.ஆ. நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடாந்தது.

### 1.4 தயாரிப்பிற்கான அடிப்படை

இ.பி.ப.ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு மற்றும் வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்து வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.5 அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்

அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

### 1.6 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.7 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் எத்தகைய மாற்றமும் இன்றி அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.8 ஒப்பிடப்படும் எண்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றல்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

## 2. சொத்துக்களும் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

### 2.1 ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும்

#### *2.1.1 சொந்த ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும்*

ஆதனங்களும், பொறித்தொகுதியும், உபகரணங்களும் அவற்றின் மீதான ஏதேனும் தற்செயலான செலவுகளும் கொள்விலையில் குறிப்பிடப்பட்டு அவற்றின் உபயோகமுள்ள ஆயுள்காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டும் உள்ளன. மானியமாகப் பெறப்பட்ட ஆதனங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில் கணக்கிற்கொண்டு வரப்பட்டு அவற்றின் மீதான பெறுமானத் தேய்மானம் அந்தந்த ஒதுக்கக் கணக்கிற்கெதிராக செலவு வைக்கப்பட்டுள்ளது. பெறுமானத் தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள் (குத்தகை வாகனங்கள் தவிர்த்து), காரியாலய உபகரணங்கள் மற்றும் ஈடிபி உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் என்பன சொத்துக்களின் பொருளாதாரப் பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற்கொண்டு பின்வரும் சதவீதங்கள் பிரயோகிக்கப்பட்டன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 10.00% |
| குத்தகை மோட்டார் வாகனங்கள் | 25.00% |
| தளபாடங்களும் பொருத்திகளும் இணைப்புகளும். | 12.50% |
| அலுவலக உபகரணங்களும் ஈ.டி.பி. உபகரணங்களும் | 20.00% |
| பயிற்சி உபகரணங்கள் | 20.00% |

கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்கும் அவை பாவனைக்கு கிடைக்கும் தினத்திலிருந்து பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வானது சொத்து தெரிந்துகொள்ளாத திகதி வரை ஒதுக்கப்படுகின்றது.

#### *2.1.2 குத்தகைக்கு எடுத்த வாகனங்கள்*

